விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 27 ஞாயிற்றுக்கிழமை (13.12.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 359

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-8284)
(சி-2949)




## பெரு மழை காத்திருப்பு

### ஐ.நா எச்சரிக்கை

(நியூயோர்க்)

எல்-நினோ காலநிலை மாற்றத்தினால், தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் அதிகளவில் மழை பெய்ய வாய்ப்பிருப்பதாகவும், இம்முறை மழைகாலம் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் வரை நீடிக்கலாம் என்றும் ஐ.நா எச்சரித்துள்ளது.

எல்-நினோ காலநிலை மாற்றம் தொடர்பாக ஐ.நா அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஐ.நா. பொருளாதார மற்றும் ஆசியாவுக்கான சமூக ஆணையம் மற்றும் பசிபிக்-ஆசிய-ஆபிரிக்க நாடுகளுக்கான ஒருங்கிணைந்த அனர்த்த எச்சரிக்கை மையம் சார்பில் இந்த அறிக்கையை ஐ.நா. வெளியிட்டு

15 ஆம் பக்கம் பார்க்க....


# தவறிழைத்தவர்கள் தண்டிக்கப்படுவர்!

## மக்ஸ்வெல் பரணகம யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இறுதிப்போரின் வெள்ளைக்கொடி விவகாரம் குறித்து மீள விசாரணைக்குட்படுத்த வேண்டுமென தெரிவித்துள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம, இந்த விவகாரத்தில் தவறிழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என தெரிவித்ததுடன், ஜனாதிபதியிடம் வெள்ளைக்கொடி விவகாரத்தில் சம்பந்தப்பட்டவர்கள் பெயர் விபர பட்டியலொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

15 ஆம் பக்கம் பார்க்க....



## மாவீரராக அறிவிக்கப்பட்ட மகன் இராணுவ சீருடையில் உயிருடன்

### 9 வருடங்களின் பின் அறிந்ததாக தந்தை சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

போரில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டு மாவீரர் என அறிவிக்கப்பட்ட எனது மகன் 9 வருடங்களின் பின்னர் இராணுவ சீருடையில் இருந்தார் என தந்தை ஒருவர் நேற்றைய தினம் காணமற்போனோர் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின்முன் சாட்சியம் அளித்துள்ளார்.

யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற காணாமல் போனோர் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் ஆணைக்குழுவில சாட்சியம் அளிக்கும் போதே அவர்

15 ஆம் பக்கம் பார்க்க....

## அரசாங்கமும் ஒட்டுக்குழுக்களும் எம் பிள்ளைகளை கடத்தி வைத்துள்ளன

### "வலம்புரி செய்தியை மேற்கோள்காட்டி தந்தையொருவர் சாட்சியம் பதிவு"



(யாழ்ப்பாணம்)

வலம்புரி நாளிதழில் நேற்று வெளியிடப்பட்ட கடத்தப்பட்ட மகன் தொடர்பான செய்தியை மேற்கோள் காட்டி இவ்வாறு தான் இங்கு நடக்கின்றது.

எங்கள் பிள்ளைளை எங்கோ ஓரிடத்தில் இந்த அரசும் ஒட்டுக்குழுக்களும் கடத்தி வைத்துள்ளன.



## கைதிகள் இருவர் ஜனாதிபதிக்கு மகஜர்

(கொழும்பு)

கொழும்பு புதிய மகஸின் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகள் இருவர் தமக்கு நீதியை பெற்றுத்தரும்படி கோரி ஜனாதிபதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனுக்கு மகஜர் ஒன்றினை சிறைச்சாலைகள் ஆணையாளர் ஊடாக நேற்றையதினம் அனுப்பி வைத்து

## "வலம்புரி செய்தியை மேற்கோள்காட்டி தந்தையொருவர் சாட்சியம் பதிவு"




(யாழ்ப்பாணம்)

வலம்புரி நாளிதழில் நேற்று வெளியிடப்பட்ட கடத்தப்பட்ட மகன் தொடர்பான செய்தியை மேற்கோள் காட்டி இவ்வாறு தான் இங்கு நடக்கின்றது.

எங்கள் பிள்ளைளை எங்கோ ஓரிடத்தில் இந்த அரசும் ஒட்டுக்குழுக்களும் கடத்தி வைத்துள்ளன.

15 ஆம் பக்கம் பார்க்க....



கணங்கள் ரணங்களாக தொடரும் காத்திருப்பு...

(கொழும்பு)

கொழும்பு புதிய மகஸின் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகள் இருவர் தமக்கு நீதியை பெற்றுத்தரும்படி கோரி ஜனாதிபதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனுக்கு மகஜர் ஒன்றினை சிறைச்சாலைகள் ஆணையாளர் ஊடாக நேற்றையதினம் அனுப்பி வைத்துள்ளனர்.

15 ஆம் பக்கம் பார்க்க....

## அரசியல் கைதியாக சிறையிலிருந்த எனது தந்தையைக் காணவில்லை

### இரண்டாம் நாள் அமர்வில் மகன் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு கடற்படை பிடித்து சென்று, சிறையில் அரசியல் கைதியாக இருந்த தனது தந்தையை காணவில்லை என மகனொருவர் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளித்துள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் இரண்டாம் நாள் அமர்வு விசாரணை



15 ஆம் பக்கம் பார்க்க....

## மகனை கடத்திய இராணுவ சிப்பாயை மைத்திரியுடன் கண்டேன்

(யாழ்ப்பாணம்)

முகமாலையில் தனது மகனை கடத்திய இராணுவ சிப்பாயை இவ்வருடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்ட வலி. வடக்கில் நடைபெற்ற காணி விடுவிப்பு நிகழ்வில் கண்டதாக தாயொருவர் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஜனாதிபதி ஆணை

15 ஆம் பக்கம் பார்க்க....

## "கத்தினால் சுடுவோம்"

### மகளின் நெஞ்சில் துப்பாக்கி வைத்து கணவனை கடத்தியது இராணுவம்

(யாழ்ப்பாணம்)

எனது மகளின் நெஞ்சில் துப்பாக்கியை வைத்து சத்தமிட்டால் சுடுவோம் என மிரட்டிவிட்டு கண்ணுக்கு போக்கஸ் லைட் அடித்து எனது கணவரை இராணுவத்தினர் கடத்திச் சென்றார்கள் என மனைவி ஒருவர் சாட்சியமளித்துள்ளார்.

காணாமல் போனோரை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இரண்டாம் நாள் அமர்வு நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில நடைபெற்றது.

அங்கு தனது கணவரை இராணுவத்தினர் கடத்திச் சென்றதாக கூறிய மனைவி மேலும் தெரிவிக்

15 ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று 176 பேரின் சாட்சியங்கள் பதிவு

(யாழ்ப்பாணம்)

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்றைய தினம் 176 பேரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் 2 ஆம் நாள் விசாரணைகள் நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகியிருந்தன. அதில் யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவை சேர்ந்தவர்களின் சாட்சியங்கள் நேற்றைய தினம் பதிவு செய்யப்பட்டன.

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின தலைவர் பி.பரணகம உள்ளிட்ட 5 அதிகாரிகள் 5 பிரிவாக விசார

16 ஆம் பக்கம் பார்க்க....

## விடுதலைப்புலிகளும், இராணுவமும் பிழையானவர்கள் என கூற முடியாது

### சிலரது செயற்பாடுகளே பிழையாகியது - பரணகம

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளும் இலங்கை இராணுவத்தினரும் ஒட்டுமொத்தமாக பிழையானவர்கள எனக் கூறிவிட முடியாது. அவர்களுக்குள் இருந்தவர்கள் சிலர் சில பிழையான செயற்பாடுகளை செய்துள்ளார்கள்.

அதற்காக ஒட்டுமொத்தமாக பிழை என முடிவு கட்டிவிட முடியாது. இவ்வாறு காணாமல்போனவர்களை கண்டறிவதற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மேற்படி ஆணைக்குழுவின் அமர்வுக

15 ஆம் பக்கம் பார்க்க....

## முறைப்பாடுகளை பதிவு செய்யலாம்

(யாழ்ப்பாணம்)

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் இன்றைய தினம் கரவெட்டி, மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவை சேர்ந்தவர்களுக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கரவெட்டி மற்றும் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில்

15 ஆம் பக்கம் பார்க்க....

# நன்கு சிங்களம் பேசும் நபர்களே எம் தந்தை, மகனை பிடித்துச் சென்றனர்!

முகத்தினை கறுப்பு துணியால் கட்டிய நன்கு சிங்களம் பேசும் நபர்களே எமது மகன் மற்றும் தந்தையினை பிடித்து சென்றதாக அதிகளவான பெற றோர் ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக நேற்றையதினம் சாட்சியமளித் துள்ளனர். இவ்வாறு கடத்தி சென்றவர்கள் இலங்கை இராணு வம் தான் என சந்தேகிப்பதாகவும் கூறியுள்ளனர்.

இவ்வாறு வந்தவர்களில சிலர் இராணுவ சீருடை அணிந் திருந் ததாகவும், சிலர் சாதாரண உடை அணிந திருந்ததாகவும் சாட்சியமளித்துள்ளனர். றக்கா வீதி, கச்சேரியை சேர்ந்த சுப்ரமணியம் பரமேஸ்வரன் (வயது 29) எனும் பெயருடைய எனது கணவர் 2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஐந்தாம் திகதி வெள்ளை வானில் வந்தவர்களினால் கடத்தப்பட்டார்.

நள்ளிரவு 12.15 மணியளவில் எமது வீட்டிற்கு வந்த இருபதுக்கும் மேற்பட்டோர் தமது முகத்தை கறுப்பு துணியால் கட்டிக்கொண்டு வந்தனர். எனது கணவர்தான் முதலில் சென்றார். வந்தவர்கள் எனது கணவனை தம்முடன் வற்புறுத்தி அழைத்து செல்ல முற்பட்டனர். அவர்களோடு செல்ல கணவர் மறுத்துவிட்டதனால் அவரை தாக்கினர்.

எனது கணவன் தாக்கப்படுவதை பார்த்த நான் அவர்களிடம் கெஞ்சினேன் தாக்க வேண்டாம் என. பின்னர் என்னையும் தாக்கிவிட்டு கணவரை கடத்தி செல்ல வந்தனர். இதற்கிடையில் அயல் வீட்டார் எனது அழுகை சத்தம் கேட்டு எங்கள் வீட்டிற்கு வந்த போது அவர்களையும் சுடுவோம் என மிரட்டினர்.

பின்பு எனது கணவனை தாம் வந்த வாகனத்தில் கடத்தி சென்றனர். இது தொடர்பில் மனிதவுரிமை ஆணைக்குழு மற்றும் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்திருந தேன். ஆனால் ஒரு முடிவும் எமக்கு தரப்பட வில்லை என்றார் அவரது மனைவி.

இதே போல் நன்கு சிங்களம் கதைக கும் நால்வர் ஆனைக்கோட்டையில் இருந்த எனது கணவரை முகத்தை கறுப்பு துணியால் கட்டியபடி கடத்தி சென்ற தாகவும், அவர்கள் வந்த வானின் சாரதி முகத்தை கறுப்பு துணியால் கட்ட வில்லை எனவும், அந்த சாரதியை கடந்த ஆண்டு இராணுவ சீருடை யோடு யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் கண்டதாகவும் கூறி யுள்ளார். (எ-4)

**வீடுகள் இரண்டு விற்பனைக்கு**

இல.120, 120/1 புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள (வீரகேசரி காரியாலயம் முன்பாக) நிலப்பரப்பு 2 குளி 0.8 இல் அமைந்துள்ள இரண்டு வீடுகள் விற்பனைக்குண்டு. (2772)

**தொடர்புகளுக்கு - 077 224 9523**

# தங்க நகைகளை ஒப்படைத்த முன்மாதிரி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள குளிர் பான நிலையம் ஒன்றில் தவற விடப்பட்ட பெறுமதிமிக்க தங்க நகைகளை மீளவும் தவறவிட்ட வரிடம் ஒப்படைத்த முன்மாதிரியான சம்பவம் ஒன்று கடந்த 10ஆம் திகதி நடைபெற்றது.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ள ராஜா கிறம் ஹவுஸில சிற்றுண்டிகளை வாங்கிய பெண் ணொருவர் தங்க நகைகள் வைத்திருந்த கைப்பையை அந்த கடையில் தவறவிட்டிருந்தார்.

இந் நிலையில் தவறவிடப்பட்ட தங்க நகைகள் அடங்கிய கைப்பையை கண்டெடுத்த ஊழியர் ஒருவர் அவற்றை தனது நிலைய முகாமையாளரிடம் ஒப்படைத்தது டன் தங்க நகைகளை தவறவிட்ட பெண் ணிடம் மீளவும் அவற்றை சேர்ப் பித்தனர்.

குறித்த குளிர்பான நிலையத் தினதும் ஊழியரதும் முன்மாதிரி யான செயலை அறிந்தவர்கள் அனைவரும் பாராட்டினர். (ந)

## கண்ணீர் அஞ்சலி

**ஞானசேகரன் வாசுதேவன்**



மணல்தறை வீதி,
கந்தர்மடத்தை
வசிப்பிடமாகக் கொண்ட
**ஞானசேகரன்**
**வாசுதேவன்**
அவர்கள் இறந்த
செய்தி அறிந்து
துயரடைகிறோம்.
அன்னாரின் இழப்பினால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**தகவல்:**
செல்வராசா குடும்பம்
றோகினி

(2773)

## சாமியே சரணம் ஐயப்பா




ஈழத்து சபரிமலை
சபரீச ஐயப்ப தேவஸ்தானம்
கோண்டாவில்

**தேர்த் திருவிழா**

**இன்று ஞாயிறு காலை 10 மணி.**
**தீர்த்தம் நாளை திங்கள் காலை 10 மணி**
**அடியார்கள் வருக**

இருபாலை வீதி,
கோண்டாவில்.

ஹரிகரசுத சிவாச்சாரியார்
குருசாமி

**சாரங்கா நகை மாடம்**
**சாரங்கா மணி எக்சேஞ்ஸ்**
வெளிநாட்டுப் பணப் பரிமாற்றங்களுக்கு
உடனடியாக நாடுங்கள்
(C-2955)

**157/1 ,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி

**திருமதி மகேந்திரன் சாரதாம்பிகை**



வேலணை மேற்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் 139, இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய

திருமதி
**மகேந்திரன் சாரதாம்பிகை**

அவர்களின் மறைவு எமது வேலணை மேற்கு வாழ் மக்களுக்கு பெரியதொரு இழப்பாகிவிட்டது. அவர் தம் கணவருடன் (ஓய்வுநிலை அதிபர் லயன் மு.மகேந்திரன்) சென்று பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையாருடைய சகல திருப்பணிகளிலும் தினந்தோறும் கவனித்து வருவதை நாங்கள் சிந்தித்துப் பார்க்கின்றோம். இவ் மகாபணி யாரும் செய்ய இயலாது. எல்லோருக்கும் இறைவன் கொடுப்பதில்லை. நாம் மரணத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றோம். கண் சிமிட்டும் நேரத்தில் நம் திட்டங்கள் யாவும் தவிடுபொடியாகி விடலாம் அல்லது நாம் இறக்கும் படியும் நேரலாம். எனவே கடவுளுக்காகவும் அவர்தம் திட்டங்களுக்காகவும் நாம் வாழ்கின்றோம் என உறுதியுடன் நினைத்தால் இரும்பைப் போன்ற பலத்தைப் பெறலாம். அன்னாரது துயரில் மூழ்கி இருக்கும் ஓய்வுநிலை அதிபர் லயன் மு.மகேந்திரன் அவர்களுக்கும் அவர் தம் பிள்ளைகளுக்கும் குடும்பத்தாருக்கும் எமது ஸ்தாபனத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரது ஆத்மா பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையாருடைய பாதக் கமலங்களை சேர்ந்திருக்கும் என்பதில் அசையாத நம்பிக்கை.

ஓம் சாயிராம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

(2771)

**வேணி களஞ்சியம்,**
**165, K.K.S வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 222 2046**

**பிரிவால் துயருற்றிருக்கும்**
**வேணி களஞ்சியம்**
**அதிபரும் ஊழியர்களும்**

## கண்ணீர் அஞ்சலி



வலிகாமம் வலய நடன
ஆசிரிய ஆலோசகர்
திருமதி சுபத்திரா ஸ்கந்தகுமார்
அவர்களின் அன்புத் தந்தை

**அமரர்**
**சீவரத்தினம்**
**இரத்தினசிங்கம்**

அவர்கள் 11.12.2015 சிவபதமடைந்த செய்தி கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

(C-2954)

**வலிகாமம் வலய நடன ஆசிரியர்கள்**

## வெளிநாடுகள் கூறாவிட்டாலும்

# மனித உரிமைகளை பாதுகாக்க வேண்டும்

### பிரதியமைச்சர் கருணாரத்ன வலியுறுத்து

(கொழும்பு)

**வெளிநாடுகள் கூறினாலும் கூறாவிட்டாலும் இலங்கை மனித உரிமைகளை கூடியளவில் பாதுகாக்கும் நாடாக முன்னோக்கி செல்ல வேண்டும் என பிரதியமைச்சர் கருணாரத்ன பரணவித்தான நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார.**

நாடாளுமன்றத்தில் வரவு செலவுத்திட்டத்தின் குழு நிலை விவாதத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

முன்னாள் அரசாங்கம் முன்னெடுத்து வந்த வெளிநாட்டுக் கொள்கையால், நாட்டிற்கு அபகீர்த்தி ஏற்பட்டது. இதனை தற்போதைய வெளிவிவகார அமைச்சு வெற்றிகரமாக சரி செய்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் கொண்டுவரப்பட்ட யோசனையை செயற்படுத்தி தேசிய பொறி முறையை ஏற்படுத்தி, நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுப்பதை காண முழு உலகமும் காத்துக்கொண்டிருக்கின்றது.

வெளிநாடுகள் கூறினாலும் கூறவிட்டாலும் மனித உரிமைகளை பாதுகாக்கும் நாடாக முன்னோக்கிச் செல்ல வேண்டும். இந்த விடயத்தில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கம் அவசியம்.

இதனால், நாட்டில் தொழில் சந்தர்ப்பங்கள், பொருளாதார சந்தர்ப்பங்கள் ஏற்படும். இனவாத கண்ணோட்டத்துடன் இதனை காணக் கூடாது. இனவாதிகளே தேசிய பாதுகாப்பு ஆபததில் என்று சத்தமிடுகின்றனர்.

இனவாதிகள் தமது அரசியல் இருப்பது தொடர்பில் பெரும் விபத்தில் சிக்கியுள்ளனர் எனவும் பிரதியமைச்சர பரணவித்தான மேலும் தெரிவித்தார். (இ-7)

### புகையிரத விபத்தில் இருவர் உயிரிழப்பு

கந்தானை, கபுவத்தை புகையிரத கடவையில் இடம் பெற்ற விபத்தில் 2 பேர் உயிரிழந்துள்ளனர்.

கல்கிஸ்ஸ நோக்கிப் பயணித்த புகையிரததத்தில் நேற்றுக் காலை 7.45 அளவில் காரொன்று மோதியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமான ருவான் குணசேகர தெரிவித்தார்.

அனர்த்த எச்சரிக்கை சமிக்ஞை மற்றும் எச்சரிக்கை ஒலிக் கருவிஎன்பன இயங்கும் நிலையில், கவனயீனமாக கார் புகையிரத கடவையூடாக பயணித்தமையால் விபத்திற்குள்ளானதாக பொலிஸ ஊடகப் பேச்சாளர் கூறினார். காரிலிருந்த இருவரே வித்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-7)

### பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாராளுமன்றில் அலுவலக அறை

அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாராளுமன்றத்தில் தனி அலுவலக அறைகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் தெரிவித்தார்.

இதன்பிரகாரம், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 150 அறைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் தொகுதிகளிலும, அவர்களுக்கான அலுவலகங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் சுட்டிக்காட்டினார்.

இதற்காக பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சித் தலைவர் ஊடாக தமது கோரிக்கைகளை கட்சித் தலைவர் கூட்டத்தில் முன்வைக்குமாறும், அதனை அமைச்சரவையில் சமர்ப்பித்து அனுமதியை தான் பெற்றுத் தருவதாகவும் பிரதமர் உறுதியளித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சலுகைகள் வழங்கப்படாமையினாலேயே அவர்கள் முறையற்ற விதத்தில் செயற்பட்டு வருவதாக சுட்டிக்காட்டிய பிரதமர், இனிவரும் காலங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனைத்து சலுகைகளும் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார். (இ-7)


### தபால் பொதிகள் உடன் விநியோகம்


கொழும்பிலிருந்து வரும் வடமராட்சிக்குரிய தபால் பொதிகள் அனைத்தும் நாளை முதல் கொடிகாமத்திலிருந்து விநியோகம் செய்யப்படவுள்ளது.

இதில் குறிப்பாக நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை போன்ற பிரதேசங்களது தபால் நிலையங்களுக்கு இவ் விநியோகம் இடம் பெறவுள்ளது.

கொழும்பிலிருந்து வரும் தபால் பொதிகள் யாழ்ப்பாணம் வரை கொண்டு வரப்பட்டு நெல்லியடி பருத்தித்துறை, வல்வெட்டித்துறை போன்ற பிரதேசங்களில் உள்ள தபால் நிலையங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வந்தது.

இந்நிலையில் நாளை முதல் கொழும்பிலிருந்து தபால் புகையிரதம் ஊடாக வரும் தபால் பொதிகளில் யாழ்ப்பாணம் வரை கொண்டு வரப்பட்டு கொடிகாமத்தில் இறக்கப்பட்டு அன்றைய தினமே விநியோகங்கள் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-60)























### வலம்புரிச் செய்தியை ஆதாரமாகக் காட்டி ஆணைக்குழுவிடம் தாய் மன்றாட்டம்





**மீண்டும் "வெள்ளை வான்" கடத்தல் மனித உரிமை ஆணைக்குழுவில் முறையீடு**

(யாழ்ப்பாணம்)

யாழ்-நகரில் நேற்று முன்தினம் ஒருவரைக் காணவில்லை எனவும் இன்னொருவர் கடத்தப்பட்டுள்ளதாகவும் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சோதிலிங்கம் ஜனார்த்தனன் (வயது 2?) என்பவர் நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு கடைக்குச் சென்றதாகவும் பின்னர் வீடு திரும்பவில்லை எனவும் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த இளைஞனின் வீட்டிற்கு நேற்று அதிகாலல ஒரு மணியளவில் வெள்ளை வானில் வந்த ஆயுததாரிகள் வீட்டிற்குள் நுழைந்து காணாமல் போன இளைஞனின் பெயரைக்கூறி அழைத்தாகவும் பின்னர் அவரின் தம்பியை விசாரணைக்காக கூட்டிச் சென்று திரும்பிக்கொண்டுவந்து வீட்டில் விட்டதாகவும் அம் முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று அதிகாலை 2.30 மணியளவில் வெள்ளை வானில் வந்த ஆயுததாரிகள் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் உள்ள வீடொன்றின் கதவை உடைத்து உள் நுழைந்து நகைத்தொழிலாளியான பெருமாள் பிரசாந்த் (வயது 22) என்ற இளைஞனை கடத்திச் சென்றுள்ளதாக உறவினர்களால் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ந-5)

காணாமற் போனோரினை கண்டறிவதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இரண்டாவது அமர்வு நேற்று காலை 9 மணியளவில் யாழ்.மாவட்ட செயலகத்தில் ஆரம்பமாகி மாலை வரை நடைபெற்றது. ஆணைக் குழுவின் தலைவர் பரணகம தலைமை தாங்கி விசாரணைகளை முன்னெடுத்திருந்தார்.

(படங்கள் :- உ.சாளின்)

# தேங்கிக்கிடக்க விரும்பவில்லை சவாலுக்காக காத்திருக்கிறேன்

## அஸ்வின் தெரிவிப்பு



2016 ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல் தொடரில் புதிதாக புனே மற்றும் ராஜ்கோட் அணிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

முன்னணி வீரர்கள் எந்த அணிக்கு போவார்கள் என்பது வருகிற 15ஆம் திகதி தெரிய வரும்.

இந்நிலையில், புனே அல்லது ராஜ்கோட் ஐ.பி.எல் அணிகளில் சேர்க்காவிட்டால், ஏலம் மூலம் அணியில் சேர வேண்டியிருக்கும் என்று சி.எஸ்.கே அணிக்காக ஆடிவரும் ரவிச்சந்திரன் அஸ்வின் தெரிவித்துள்ளார்.


இதுகுறித்து ரவிச்சந்திரன் அஸ்வின் டுவிட்டரில் கூறுகையில், நான் ராஜ்கோட் அல்லது புனே அணிக்கு செல்ல வேண்டியது குறித்து இன்னும் 3 நாட்களில் தெரிந்துவிடும்.

புதிய தொடக்கம், புதிய சவாலுக்காக காத்திருக்கிறேன். இவ்விரு அணிகளில் ஒன்றில் நேரடியாக சேர முடியாத வாய்ப்பு உருவானால், ஏலம் மூலம் ஏதாவது ஒரு அணியில் சேர வேண்டி வரும்.

எதுவாக இருந்தாலும், நான் சவாலை விரும்புகிறேன். தேங்கி கிடக்க விரும்பவில்லை என்று கூறியுள்ளார். (க)

# சென்னையில் ஏற்பட்ட வெள்ளம் என்னை சோகத்தில் ஆழ்த்தியது

## ரபேல் நடால் உருக்கம்



5 அணிகள் இடையிலான சர்வதேச பிரிமியர் டென்னிஸ் லீக் (ஐ.பி.டி.எல்.) போட்டி டெல்லியில் நடந்து வருகிறது. இந்தியன் ஏசஸ் அணி சார்பாக விளையாடி வரும் பிரபல சர்வதேச டென்னிஸ் வீரர் ரபெல நடால் பிரபல ஆங்கில நாளேடு ஒன்றிற்கு அளித்த பேட்டி பின்வருமாறு,

ஐ.பி.டி.எல். போட்டியில் விளையாடுவதற்காக இந்தியாவுக்கு வந்திருப்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. சென்ற ஆண்டு நடந்த போட்டியில் என்னால் வரமுடியாதது குறித்து எனக்கு வருத்தம் இருந்தது. ஆனால், இந்த வருடம் வந்துவிட்டேன். இந்தியாவுக்கு வருவது எனக்கு பிடித்தமான ஒன்று. இங்கு அனந்தபூரில் எனக்கு சொந்தமான பயிற்சி அக்கடமி உள்ளது. அங்கிருந்து சில சிறுவர்கள் இன்று அரங்கிற்கு வர உள்ளனர். ரோஜர் பெடரருக்கு எதிராக விளையாடும் ஆட்டங்கள் எப்போதுமே ஸ்பெஷலாக இருக்கும்.

சென்னைக்கு இரண்டு முறை நான் இதுவரை வந்திருக்கிறேன். சென்னையில் ஏற்பட்ட வெள்ளத்தை பற்றி அறிந்ததும் எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. என்னை அது மிகவும் பாதித்துள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள். இவ்வாறு அவர் தெரிவித்தார். (க)

# அண்ணனின் தவறால் தங்கை தற்கொலை

உத்தர பிரதேச மாநிலம் கான்பூரில் உள்ள சகேரி என்ற இடத்தைச் சேர்ந்தவர் ஆர்ஷ் சுக்லா (18). இவர் மாநில அளவிலான கூடைப்பந்து வீராங்கனையாக இருந்து வந்தார்.

இவர் நேற்று முன்தினம் இரவு தனது அறையில் தன்னுடன் படிக்கும் ஆண் நண்பரான ஜீதேஷ் உடன் பேசிக் கொண்டிருந்தார்.

அப்போது அவரது அண்ணன் ஷிவா வந்துள்ளார். அவர்கள் பேசிக்கொண்டிருந்ததை பார்த்த ஷிவா, நேராக பொலிஸ் நிலையம் சென்று தன்னுடைய தங்கையை ஜீதேஷ் கற்பழிக்க முயற்சி செய்தார் என்று புகார் அளித்துள்ளார்.

அண்ணனின் இந்த நடவடிக்கையால் கடும் கோபம் அடைந்த ஆர்ஷ் சுக்லா வீட்டில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இத்தகவலை அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் உடலை கைப்பற்றி விசாரணை நடத்தி வருகின்றனர். (க)

# எம்பிள்ளைகளை கடத்தியவர்கள் இன்றும் கண்முன்னே நடமாடுகின்றனர்

## மகனைத் தேடி அலைந்து சாவதா தாயின் நிலை!

(யாழ்ப்பாணம்)

தங்களது பிள்ளைகளை தொலைத்த தாய்மார்களில் பலர் இன்று உயிரோடு இல்லை, அவர்களது பிள்ளைகளை யார் தேடுவது? என தெரிவித்துள்ள ஈச்சமோட்டையினை சேர்ந்த கொலஸ்ரின் எனும் தாயார், தனது மகனை கடத்தியவர்கள் இன்றும் தனது கண்முன்னே நடமாடுவதாக வருத்தம் தெரிவித்துள்ளார்.

பத்தொன்பது வயதுடைய முத்துலிங்கம் மலரவன் எனும் பெயருடைய எனதுமகன் 2007 ஆம்ஆண்டு மார்ச் மாதம் பதினேழாம் திகதியன்று சீருடை அணிந்த ஏழு இராணுவத்தினரால் எம்முடைய வீட்டில் வைத்து கடத்தி செல்லப்பட்டார். இவ்வாறு கடத்தலில் ஈடுபட வந்தவர்களில் ஒருவர் தன்னை இராணுவ கொமாண்டர் எனவும் கூறிக்கொண்டார்.

சந்தேகத்தின் பேரிலேயே பிடித்து கொண்டு செல்வதாக எனது மகனை கொண்டு சென்றனர். ஆனால்இதுவரை எனது மகன்எங்கு உள்ளான் என்று தெரியவில்லை.

சந்தேகத்தின் பேரில் கொண்டு சென்றவர்கள் நீதிமன்றில் எனது மகனை ஒப்படைத்திருக்க வேணடும். ஆனால் அப்படி செய்யவில்லை. இங்கு நீதி என்பது இறந்து விட்டதா? விசாரணை, விசாரணை என்று எம்மை ஏமாற்றுகின்றனர்.

காணாமல் போன எனது பிள்ளையை தேடுவதற்கு நான் உள்ளேன். ஆனால் தனது பிள்ளைகளை தேடி உயிரிழந்த தாய்மார்கள் எத்தனையோ பேர் உள்ளனர். அவர்களின் பிள்ளைகளை யார் தேடுவது? அவர்களுக்கு யார் விசாரணைகளை முன்னெடுப்பது? எங்களது பிள்ளைகளை தேடி நாம் இவ்வாறே அலைந்து கொண்டு தான் சாக வேண்டுமா?

எனது மகனை காட்டிக்கொடுத்தவர் இன்றும் கொய்யாத்தோட்டத்தில தேநீர் கடை வைத்துள்ளார். அவர் நான்எனது மகனை தேடும்போதெல லாம் நக்கல் பண்ணுகின்றார்.

எனது மகன் கடத்தப்படுவதற்கு முன்னதாக எங்கள் வீட்டிற்கு வந்த சிலர் எங்கள் தொலைபேசியினை எடுத்து சென்றனர். அதன பின்னரே எனது மகன் கடத்தப்பட்டார்.

எனது மகன் இரவு பத்து மணியளவில் கடத்தப்படும் போது அயல பிரதேசங்களான சுண்டுக்குளி, குருநகர், பாசையூர் போன்ற இடங்களிலும் ஆயிரத்திற்கும் அதிகமான இளைஞர்கள் கடத்தப்பட்டிருக்க கூடும். மறுநாள் காலை அனைவரது தாய்மாரகளும் தமது பிள்ளைகளை தேடி அனைத்து இடங்களுக்கும் சென்றனர். ஆனால பிளளைகளை காண முடியவில்லை.

விசாரணை என்று ஏமாற்றாமல எங்களது பிள்ளைகளை இவர்கள் விடுவிக்க வேண்டும், நாங்கள் எங்கள் பிள்ளைகளுக்காக காத்திருக்கின்றோம் என அழுகையுடன் அந்த தாயார் தெரிவித்துள்ளார். (செ-4)

## சச்சினைவிட சுனில் கவாஸ்கர் சிறந்த வீரர் இம்ரான் கான் தெரிவிப்பு



பாகிஸ்தான் அணியின் கிரிக்கெட் ஜாம்பவான் என்று அழைக்கப்படும் இம்ரான் கான், சச்சின் டெண்டுல்கர் குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

சச்சினை விட சுனில் கவாஸ்கர் தான் சிறந்த வீரர் என்றும் அவர் விளையாடிய இன்னிங்ஸ் போல் டெண்டுல்கர் விளையாடவில்லை என்று தெரிவித்திருந்தார்.

மேலும் கவாஸ்கர் மேற்கிந்தியதீவுகள் அணியின் 4 உலக தரம் வாய்ந்த வேகப்பந்து வீச்சாளர்களுக்கு எதிராக போட்டிகளில் சிறப்பாக விளையாடியுள்ளார் என்றும் இம்ரான் கான் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை சச்சின் கிரிக்கெட்டுக்கு அளித்த பங்களிப்பும் சிறப்பு வாய்ந்தது அதை விமர்சிக்க முடியாது, இந்தியா - பாகிஸ்தான் போட்டியை நிறுத்துவதால் தீவிரவாதத்துக்கு பதில் கூறிவிட முடியாது எனவும் பாகிஸ்தானின் கிரிக்கெட் ஜாம்பவான் இம்ரான் கான் கூறியுள்ளார். (க)

## மரண அறிவித்தல்

### நடராஜன் கனகமணி
### (கனகமணி ரீச்சர்)

**ஒய்வுநிலை ஆசிரியர் - யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்**



உடுவில் மேற்கை பிறப்பிடமாகவும் சங்குவேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகமணி நடராஜன் (கனகமணி ரீச்சர்) நேற்று (12-12-2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலம் சென்றவர்களான நல்லையா-இராசம்மா தம்பதியினரின் புத்திரியும் காலம் சென்றவர்களான இராசையா-கதிராய் தம்பதியினரின் மருமகளும், காலம் சென்ற நடராஜன் (PR) (ஓய்வுநிலை அதிபர்- யா/மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும், ஜசந்தா (ஆசிரியர்- யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை) பாஸ்கரன் (விவசாய போதனாசிரியர் மாவட்ட விவசாய பயிற்சி நிலையம்-திருநெல்வேலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருமுருகராஜன் J.P (ஆசிரியர்- யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), சிவசாந்தி (J.K விவசாய வியாபாரம் திருநெல்வேலி) ஆகியோரின் அன்பு மாமியும், ஹம்சாயினி (யா/உடுவில் மகளிர் கல்லூரி), ஹருஷன் (யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை) யபிந்தன் (யா/இந்து ஆரம்ப பாடசாலை) கனுஷா ஆகியோரின் அருமை பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, சிவபாக்கியம் மற்றும் செல்வமணி காலஞ்சென்ற சீவரத்தினம் மற்றும் கனகரத்தினம், காலம் சென்ற கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13/12/2015) ஞாயிற்றுக்கிழமை 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :-குடும்பத்தினர்,
மகன் ந. பாஸ்கரன்
(மாவட்ட விவசாய போதனாசிரியர்)
0773471719
மருமகன் தே.திருமுருகராஜன் (JP)
(அகில இலங்கை சமாதான நீதவான்)
0771753838

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்

(2774)

# உலகக் கிண்ண கிரிக்கெட் ஆவலுடன் காத்திருக்கும் ரஹானே



20 ஓவர் உலகக் கிண்ணப் போட்டிகளை ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருப்பதாக இந்திய அணி வீரர் ரஹானே தெரிவித்துள்ளார்.

ஆறாவது 20 ஓவர் உலகக் கிண்ணப் போட்டிகள் இந்தியாவில் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 15-ம் திகதி முதல் ஏப்ரல் 3-ம் திகதி வரை நடைபெறுகிறது.

இதற்கான போட்டி அட்டவணை நேற்று முன்தினம் வெளியானது, இந்த விழாவில் ஹோலி, ரஹானே, தவான் உட்பட கிரிக்கெட் சபை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அப்போது பேசிய ரஹானே, கிரிக்கெட் போட்டிகளில் அனைத்து வகைகளையும் விளையாடி இருக்கிறேன், அதில் இருபது-20 போட்டிகள் மிகவும் சிறப்பு வாய்ந்தது.

கடும் சவாலாக இருக்கும் இந்த போட்டிகளை ஆவலுடன் எதிர் பார்த்து காத்திருக்கிறேன்.

போட்டியன்று சிறப்பாக செயல்படும் அணியே வெற்றி பெறும், நிச்சயம் நாங்கள் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்துவோம் என தெரிவித்துள்ளார். (க)

## SRI LANKA RED CROSS SOCIETY

*If you are proactive, highly motivated, results oriented and ready to embark on a challenging career - Come join us*

| POST | QUALIFICATION & EXPERIENCE | COMPETENCIES REQUIRED |
|---|---|---|
| Manager-Filling Station -Jaffna<br>01 Position<br>HRM 675<br>Basic Salary Rs: 25,000/- + EPF & ETF, Health Insurance & Personal Accident Cover | • G.C.E A/L qualified (3 passes in one sitting)<br>• Previous experience in managing a filling station or experience in retail management services. | • Sound knowledge of retail filling station management, including scheduling and supervision of attendants, stock requisitioning, minimizing waste and pilferage, and overseeing dailyoperations and security requirements etc.<br>• Proven abilities in cash/credit sales, banking, budgeting,sales reconciliation, sales reporting.<br>• Well-developed language skills in English and spoken Sinhala and Tamil.<br>• Excellent Customer service skills.<br>• Good computing skills inMS Office. |
| Filling Station - Attendants -Jaffna<br>08 Positions<br>HRM 676<br>Basic Salary Rs: 15,000/- + EPF & ETF, Health Insurance & Personal Accident Cover | • Minimum secondary education up to 8th grade.<br>• Previous work experience in a retail filling station would be an advantage. | • Good Communication Skills<br>• Ability to provide prompt and efficient Customer Service.<br>• Ability to operate cash registers and credit card transactions<br>• Basic Knowledge of Mathematics |

Other Requirements

·Police and Grama Niladari clearance report from the applicant's area of residence.

·Sound understanding of humanitarian, community and volunteer based service interventions.

·Willing to traveland work throughout the country when required.

·Should be a quick learner with the ability carry out SLRCS management guidelines and procedures.

·Should be a team player who is self-motivated and with the ability to work under challenging circumstances.

·Abide by and work according to Red Cross and Red Crescent Fundamental Principles.

The SLRCS conducts its general administrative and operational affairs in English Language.

The appointment will be on a fixed term contract basis.

Only short listed applicants will be called for interviews;

**Please submit your applications to reach the below mentioned address on or before 21st December 2015.**

**Director General,**
**Sri Lanka Red Cross Society, 67, Temple Road, Jaffna.**
**Web: www.redcross.lk, Email to; jobs@redcross.lk** (C-2942)

**Please indicate on the top left hand corner of the envelope the post applied for and the relevant reference number. (HRM 675 or HRM 676)**



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் அத்திபாரமாக அமைந்துள்ள பரமேஸ் வராக் கல்லூரியின் நிறுவுனரும் சைவப் பெருவள்ளலாருமான



சேர். பொன்.இராமநாதன் அவர்களின்

## குருபூசை தின விழா

செவ்வாய்க்கிழமை-15.12.2015

அன்புடையீர்:

நிகழும் மன்மத வருடம் கார்த்திகை திங்கள் 29 ஆம் நாள் 15.12.2015 திருவோண நட்சத்திரம் கூடிய செவ்வாய்க்கிழமை. அன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு அத்திபாரமிட்டவரான

**சேர்.பொன்.இராமநாதன்**
அவர்களின்
**குருபூசைத் தினமாகும்.**

இதனையொட்டி அன்று காலை 7.00 மணி தொடக்கம் 8.30 மணிவரை பல்கலைக்கழகத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அருள்மிகு பார்வதி சமேத ஸ்ரீ பரமேஸ்வரப் பெருமானுக்கு அஷ்டோத்தரசத (108) சங்காபிஷேகமும் விஷேட பூசையும் நிகழவுள்ளன. அனைவரையும் வருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். அன்று காலை 8.30 மணிக்குப் பல் கலைக்கழக வளவிலுள்ள சேர்.பொன்.இராமநாதன் அவர்களின் சிலைக்கும் பல்கலைக்கழக சபா மண்ட பத்திலுள்ள (Board Room) அவர்களின் உருவப்படத் திற்கும் துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரத்தினம் அவர்கள் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செய்யும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (2752)

இங்ஙனம்
பரமேஸ்வராக் கல்லூரி,
இயக்குநர் சபை,
ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய,
பரிபாலனசபை, இந்து மன்றம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


## பந்துப் பிரச்சினை முடிபுக்கு

மைதானத்தில் விளையாடிய பந்து பக்கத்தில் உள்ள வீட்டு வளவிற்குள் சென்றதால் இப்பிரச்சினை பொலிஸ் நிலையம் வரை சென்று முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் வடமராட்சி கரணவாய் பகுதியில் இடம் பெற்றுள்ளது. நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கரணவாயில் உள்ள மைதானம் ஒன்றில் சிறுவர்கள், இளைஞர்கள் என் போர் இணைந்து பந்தடித்து விளையாடியுள்ளனர்.

சிறிது நேரத்தில் அப்பந்தானது மைதானத்திற்கு அருகில் உள்ள வீட்டு வளவிற்குச் சென்று விழுந்துள்ளது. அப்பந்தினை எடுப்பதற்கு விளையாட்டில் ஈடுபட்டோர் அவ்வீட்டிற்குச்சென்ற போது அவ்வீட்டு உரிமையாளர் பந்தை கொடுக்க மறுத்துள்ளார்.

இதனையடுத்து இது தொடர்பாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் விளையாட்டில் ஈடுபட்டவர்களால் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் அப்பந்தினை வீட்டு உரிமையாளரிடமிருந்து பெற்று விளையாட்டு வீரர்களிடம் ஒப்படைத்துள்ளனர். (இ-5-60)


### யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் ஒன்றுமே முடியாது
நான் என்ன செய்வது? என்று எண்ணுகின்றீர்களா...

சனி - ஞாயிறு தினங்களில் முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை
திங்கள் - வெள்ளி முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரை (2214)

எம்முடன் பேசுங்கள்

**கைகொடுக்கும் நண்பர்கள்**
104. 4 ஆம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம்.
•மதசார்பற்றது • ரகசியம் பேணப்படும்
021 222 8117, 077 900 8776
Sponsored By Enlightnment Circle, UK

### காணி விற்பனைக்கு

A9 வீதி நுணாவில் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் பருத்தித்துறை வீதியில் துர்க்கை அம்மன் கோவில் பாதை ஆரம்பத்தில் 27 பரப்பு காணியும், உடைந்த வீடு கிணற்றுடனும் 7 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.

**தொடர்களுக்கு:-0778730129**
(276)

### வாடகைக்கு

யாழ் இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகாமையில் 554A, 554B எனும் இலக்கமுடைய கடைகள் வாடகைக்கு விடப்படும்.

(2755) விபரங்களுக்கு நேரில் வரவும்
தொடர்புகளுக்கு :- நா.தயாளன்
இல.556, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### காணி விற்பனைக்கு

யாழ் புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் 3 பக்க மதிலுடைய நிலப்பரப்பு 2 குழி 13 விஸ்தீரணமுடைய காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய
தொலைபேசி-0775443346
(2734)


## வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## වලිකාමම් දකුණ ප්‍රාදේශීය සභාව
## VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA CHUNNAKAM

My No, np / 14/41 (15)/03/ Tender/2016 Date:2015.12.12

**வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம்;**
**2016ம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்**

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள். மீன் சந்தைகள். கருவாட்டுக் கடைகள். மீன் வெட்டுமிடம் என்பவற்றை 01.01.2016 தொடக்கம் 31.12.2016ம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற் வரி தவிர) | மாத வாடகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | உடுவில் கீளிச் சந்தை | 1000.00 | 10000.00 | 164100.00 | |
| 2 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை -01 | 1000.00 | 10000.00 | 2700786.00 | 250.00 |
| 3 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை - 02 | 750.00 | 7500.00 | 150000.00 | 250.00 |
| 4 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7500.00 | 54750.00 | 250.00 |
| 5 | கோழிக்கடை இல 07 | 750.00 | 7500.00 | 243000.00 | 250.00 |
| 6 | பொது மலசலகூடம் | 750.00 | 7500.00 | 40000.00 | 250.00 |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை (வாகன தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 16088415.00 | |
| 2 | இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை:. கோழிக்கடை (கொத்தியாலடி கொல்களத்தில் ஆடுகள் வெட்டப்படுதல் வேண்டும்) | 500.00 | 5000.00 | 50500.00 | 250.00 |
| 3 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம் | 500.00 | 5000.00 | 50000.00 | |


1. கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 14.12.2015 – 21.12.2015 பிப 2.00 மணி வரை
2. கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளுதல் - 22.12.2015 நண்பகல் 12.00 மணி வரை
3. கேள்விப் பத்திரம் திறக்கப்படுதல் - 22.12.2015 பி.ப 2.00 மணிக்கு

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 2015.11.12ம் திகதிய உதயன். தினக்குரல். வலம்புரிப் பத்திரிகைகளிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

திரு. தியாகராசா தியாகச்சந்திரன்
செயலாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை.
சுன்னாகம். (சி-2943)

# புலிகளின் புரட்சிக் கவிஞரை கண்டறிய கோரி முறைப்பாடு

## ஜனாதிபதி ஆணைக்குழுவில்



தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தின் பொறுப்பாளராக இருந்த புரட்சிக் கவிஞர் புதுவை இரத்தினதுரையினை கண்டறியக் கோரியும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் அவரது சகோதரியினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதி ஆணைக் குழுவின் முதலாவது அமர்வு நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன் போதே புதுவை இரத்தினதுரையின் சகோதரியான பத்மநாதன் ராஜலக்ஸ்மியினால்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. முள்ளிவாய்க்காலில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, பெருமளவிலான மக்கள் இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்களை நோக்கி சென்று கொண்டிருந்தனர்.

இவ்வாறு சென்று கொண்டிருக்கும் போது புதுவை இரத்தினதுரையும் தனது மூன்று பிள்ளைகள் மற்றும் மனைவியோடு குடும்பமாக இராணுவத்திடம் சரணடைந்திருந்தார். சரணடைந்த பிற்பாடு புதுவை இரத்தினதுரையைதனியாகவும்மனைவி பிள்ளைகளை தனியாகவும் பிரித்து கவிஞர் இரத்தினதுரையை தம்முடன் இராணுவம் அழைத்து சென்றது.

இராணுவம் அழைத்து சென்ற அன்றிலிருந்து எனது சகோதரனை காணவில்லை. இராணுவத்திடம் கேட்டால் தமக்கு தெரியாது என்று கூறுகின்றனர். எனினும் 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நான்காம்திகதிய எழுகதிர் தினசரி பத்திரிகையில், புதுவை இரத்தினதுரை காணாமற்போகவில்லை எனவும் இராணுவத்தின் தடுப்பு காவலில் உள்ளதாக திவயின நாளேட்டின் பாதுகாப்பு செய்தியாளரான கீர்த்தி வரனகுலசூரிய தகவலை வெளியிட்டுள்ளதாக செய்தி பிரசுரமாகியுள்ளது.

எனினும்இதுவரைபுதுவை இரத்தினதுரை எந்த தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளார் என இராணுவம் எந்த தகவலையும் வெளியிடாத நிலையில் புலிகளின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான யோகரட்ணம் யோகியின் மனைவி, தனது கணவர் மற்றும் புதுவை இரத்தினதுரை ஆகியோர் உட்பட புலிகளின் மூத்த தளபதிகள் ஐம்பது பேரினை, பேருந்து ஒன்றில் இராணுவம் ஏற்றி சென்றதனை தான் நேரடியாக கண்டதாக ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஏற்கனவே முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில்தனது சகோதரனை தேடி கண்டறியுமாறு திருநெல்வேலியை சேர்ந்த அவரது சகோதரியான பத்மநாதன் ராஜலக்ஸ்மி முறைப்பாடு செய்துள்ளார். இம்முறைப்பாட்டினை பரிசீலனை செய்வதாக சகோதரியிடம்கூறியுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவினர், அவரை தேடுவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுப்பதாகவும் தெரிவித்துள்ளனர். (இ-4)

# வெள்ளைவானில் வந்த 20 இற்கும் மேற்பட்ட ஆயுதக் குழு தேடியபின் மகனைக் காணவில்லை

## வலம்புரிச் செய்தியை ஆதாரமாகக் காட்டி ஆணைக்குழுவிடம் தாய் மன்றாட்டம்

(யாழ்ப்பாணம்)

**வெள்ளை வானில் வீட்டிற்கு வந்த இருபதிற்கும் மேற்பட்ட நபர்கள் கொண்ட ஆயுதக்குழு ஒன்று தனது மகனை தேடியதாகவும், அதன்பிறகு என்னுடைய மகனை காணவில்லை எனவும், கடத்தப்பட்ட தனது மகன் தொடர்பான செய்தி வலம்புரி நாளிதழில் வந்ததாக கூறும் தாயொருவர், தனது மகனை கண்டுபிடித்து தருமாறும் மன்றாட்டமாக ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் கோரியுள்ளார்.**

ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இதன் இரண்டாம் நாள் அமர்வு நேற்று காலை 9 மணியளவில் யாழ்.மாவட்ட செயலகத்தில் ஆணைக்குழுவின் தலைவர் பரணகம தலைமையில் நடைபெற்றது.

இதன் போதே தாயொருவர் மேற்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார். சோதிலிங்கம் ஜனார்த்தன் (வயது 33) எனும் பெயருடைய எனது மகனை தேடி 2006 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 29 ஆம் திகதி கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள எம்து வீட்டிற்கு அதிகாலை 2.30 மணியளவில் வானொன்றில் தேடி வந்தனர்.

அப்போது எனது மகன் வீட்டில் இல்லாத காரணத்தினால் எம்மை தாக்கி முட்டுக்காலில் இருத்தி துப் பாக்கிகளை நெற்றியில் வைத்து மகன் எங்கே என்று அதட்டும் தொனியில் கேட்டனர். எமக்கு தெரியாது என்று நாம் கூற எம்மை தாக்கிவிட்டு அங்கிருந்து சென்று விட்டனர். அவர்கள் வந்து சென்றதன் பின்னர் எமது மகன் இன்று வரை வீட்டிற்கு வரவே இல்லை.

எனக்கு நான்கு பிள்ளைகள் இருந்தனர். அதிலொருவர் வீரச்சாவடைந்து விட்டார். ஒருவர் விபத்தில் உயிரிழந்துவிட்டார். இந்த மகன் காணாமல் போய்விட்டார். தற்போது ஒரு பிள்ளையே வீட்டில் உள்ளார். அவரும் தனது சகோதரர்களுக்கு நடந்த சம்பவங்களை பார்த்து மிகவும் பயந்த நிலையில் உள்ளார்.

எனது மகன் கடத்தப்பட்டமை தொடர்பில் வலம்புரி பத்திரிகையில் செய்தியாக வெளிவந்துள்ளதாக ஆணைக்குழுவிடம் காண்பித்துள்ளார். எனது மகன் எனக்கு திரும்ப வேண்டும். நாங்கள் எமது மகனுக்காக எதிர்பார்த்து காத்துள்ளோம் என அந்த தாய் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து காணாமற் போன மகன் தொடர்பான விசாரணையை தாம் தொடர்ந்தும் முன்னெடுப்பதாகவும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு உங்களிடம் விசாரணை மேற்கொள் ளும் எனவும் ஜனாதிபதி ஆணைக்குழுவினர் அந்த தாயிடம் பதிலளித்துள்ளனர். (இ-4)




# இடமாற்றம்

யாழ்.பிரம்ம குமாரிகள் இராஜயோக தியான நிலையம் இடம்மாற்றப்படவுள்ளதாக யாழ்.பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையங்களின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். இதற்கமைய நெல்லியடியில் இல.03 ஐயனார் தெரு மகாத்மா வீதியில் (மகாத்மா தியேட்டருக்கு எதிரே) இயங்கி வந்த பிரம்ம குமாரிகள் இராஜயோகதியான நிலையம், இல. 31,விக்னேஸ்வரா வீதி, நெல்லியடிக்கு இடமாற்றம் செய்யப்படுகின்றது.

புதிய இடத்தில் செயற்பாடுகள் இம்மாதம் 22 ஆம்திகதி முதல் ஆரம்பமாகும். புதிய இடத்தின் புதுமனை புகுதல் வைபவம்தியானநிலைய அங்கத்தினருடன் எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரம்ம குமாரிகள் உலக ஆன்மீக பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் 50 வருட இராஜயோகியுமான தெய்வீக சகோதரர் சூரஜினால் தலைமையில் நடைபெறும். (இ-5)

# பாதிரியார் பிரான்சிஸ் தலைமையில் சரணடைந்தவர்கள் எங்கே?

## ஆணைக்குழுவிடம் உறவுகள் கேள்வி

இறுதிக்கட்ட போரின் போது சர்வதேச ஊடகங்கள் மற்றும் வெளிநாடுகள் வரை சென்ற சரணடைவான தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகள் முதல் பொதுமக்கள் ஆயிரம் பேர் வரையில் பாதிரியார் பிரான்சிஸ் தலைமையில் சரணடைந்த சம்பவத்தில் சரணடைந்து காணாமற் போனவர்களில் ஒருவரது மனைவியின் சாட்சியமும் நேற்று முன்தினம்பதிவு செய்யப்பட்டுள்ளது.

பாதிரியார் பிரான்சிஸ் தலைமையில் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது கடந்த 2009 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகளான எழிலன் மற்றும் சிலர் உட்பட ஆயிரக்கணக்கான போராளிகளோடு ராகுலன் மாமா என அழைக்கப்படும் தேவதாசன் ரூபன் (வயது-45)எனும் விடுதலைப் புலி உறுப்பினரும் சரணடைந்திருந்தார்.

இவ்வாறு இராணுவத்திடம் சரணடைந்து காணாமற்போன தனது கணவனை கண்டுபிடித்து தருமாறு கோரியே ரூபனின்மனைவியான ஸ்ரீமீனலோயினி என்பவர் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக சாட்சியம் அளித்துள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது எமது நான்கு பெண் பிள்ளைகளில் ஒருவருக்கு கடுமையான உடற் சுகவீனம் ஏற்பட்ட நிலையில் நானும் எனது நான்கு பெண் பிள்ளைகளும் 2009 ஆம் ஆண்டு மே மாதம் பதினாறாம் திகதி அன்று இராணுவத்திடம் பொதுமக்களுடன் சரணடைந்தோம்,

எனது கணவர் 2009 ஆம் ஆண்டு மே மாதம் பதினேழாம் திகதியன்று பாதர் பிரான்சிஸ் தலைமையில் சரணடைந்தார். ஆனால் இது வரை எனது கணவனுக்கு என்ன நடந்தது என்று கூறப்படவில்லை. எனினும் சரணடைந்து ஒருவருட முடிவில் வன்னியில் உள்ள காட்டுப்பகுதி அருகாமையில் எனது கணவர் இராணுவத்தோடு பச்சை நிற நீள காற்சட்டையுடனும், பச்சை நிற பனியனுடனும் நின்றதனை கண்டதாக எனது உறவினர் ஒருவர் எனக்கு கூறியுள்ளார்.

எனது கணவர் எமக்கு வேண்டும். எனக்கு இந்த விசாரணைக்குழுவில் நம்பிக்கை இல்லாவிட்டாலும், ஏதோ புதிய விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்படவுள்ளதாக கூறுகின்றார்கள். அதை நம்பியே இங்கு வந்துள்ளோம் என்றார் மீனலோயினி. இதேவேளை இவர்களோடுதான் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தியின் கணவர் சசிதரன் (எழிலன்) சரணடைந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-4)

# தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வு

சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி பொது நூலகத்தினால் தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமையன்று பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

சபையின் நாவற்குழி உப அலுவலக மண்டபத்தில் பிரதேச சபையின் செயலாளர் திருமதி தயானந்தன் தர்சினி தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாவற்குழி மகா வித்தியாலயத்தின் ஓய்வுநிலை அதிபர் திருமதி வ.மேகலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபையின் ஓய்வுநிலை செயலாளர் வே.சிவராஜலிங்கம், மறவன்புலோ க.சச்சிதானந்தன், தென்மராட்சி பிரதேச சன சமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி ஜெ.செல்வராணி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக கந்தையா கனகம்மா, நிதிய காப்பாளர் க.மயில்வாகனம், நாவற்குழி மகாவித்தியாலய முதல்வர் சி.பவளகுமாரன், கோயிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலய அதிபர் க.தேவநேசன், நாவற்குழி அ.த.க.பாடசாலை அதிபர் சி.சோமசுந்தரம், மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலய அதிபர் யோ. ஜெயகாந்தன், தனங்கிளப்பு அ.த.க.பாடசாலை அதிபர் சி.பரமேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-254)

# இந்தியன் கோனர் திறப்பு



இந்திய அரசின் அனுசரணையில் பெறுமதியான ஒரு தொகுதி நூல்களை உள்ளடக்கிய இந்திய கோனர் திறப்பு விழா நேற்று முன்தினம் யாழ். பொதுசன நூலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் வைகே.சின்ஹா, வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், வடமாகாண ஆளுநர் எச்.எம்.ஜிஎஸ்.பளிகக்கார ஆகியோர் கலந்து கொண்டு கோனரை திறந்துவைத்துள்ளனர். (இ-5-5)

# நினைவுப்பகிர்வும் நூல் வெளியீடும்

அமரர் ஆ.கந்தையாவின் நினைவுப்பகிர்தலும் அனுபவங்களினூடே நூல் வெளியீடும் இன்று ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை ஞானாலயத்தில் பிற்பகல் 3மணிக்கு நடைபெறவுள்ளன. இ.து.பாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வரவேற்புரையினை கமல் சுதர்சன் நிகழ்த்தவுள்ளார். (இ-5-19)

# CAREER INTERNSHIP PROGRAMME

BLOOMING BUDS
The Wisdom of Children

## தொழில் வழிகாட்டல் பயிற்சி நெறி

PV/4034

**IT + English + Sinhala + Beauty Culture + self and skill Development Training Programme**

க.பொ.த (சா/த) மற்றும் (உ/த) பரீட்சை எழுதிய மாணவர்கள் உயர்கல்வி

அரச, தனியார் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் NVQ தர சான்றிதழ் போன்றவற்றை கருத்தில் கொண்டு வாழ்க்கைக்கான தொழில் வழிகாட்டல் (career internship programme) எனும் பயிற்சி நெறியின் செயன்முறையூடாக பின்வரும் டிப்ளோமா கற்கை நெறிகளுக்கு ஆர்வமுடைய மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சிங்கள பாடநெறி இலங்கை மொழிகள் திணைக்களத்தின் விசேட விரிவுரையாளர் லசித் நலந்த என்பவரால் கற்பிக்கப்படும்.

முதல் பதிவை மேற்கொள்ளும் 10 மாணவர்களுக்கு பாடநெறி கட்டணத்தில் 10% கழிவு வழங்கப்படும்.

பாடநெறி முடிவில் 05 தகுதிக்கான சான்றிதழ் வழங்கப்படும்.

**Duration 75 Days full time**

கற்கை நெறி ஆரம்பம் 20/01/2016

வதிவிட (பொருத்தமான உணவு மற்றும் பாதுகாப்பான தங்குமிட வசதி) வதிவிட மற்ற முழு நேர அல்லது பகுதிநேர கணனி, ஆங்கிலம், சிங்கள, அழகுக்கலை மற்றும் சுய விருத்தி பயிற்சி நெறி

**கணனி**

நவீன கற்பித்தல் மற்றும் தொழில்நுட்ப முறை ஊடான அடிப்படை கணனி பாடநெறி

**ஆங்கிலம்**

அடிப்படையிலிருந்து பேச்சு, கிரகித்தல் பயிற்சி என்பன வழங்கப்படும்

**சிங்களம்**

தமிழினை தாய்மொழியாக நவீன கற்பித்தல் முறை ஊடாக விரைவாகவும் சரியாகவும் சிங்களத்தில் உரையாடுவதற்கு இலங்கை அரச திணைக்களத்தின் அனுசரணையுடன் வடிவமைக்கப்பட்ட பயிற்சிநெறி

**அழகுக்கலை**

தற்போது இளைஞர் யுவதிகளிடம் மிகவும் அதிக வரவேற்பை பெற்று வரும் அழகுக்கலை சம்பந்தமான பயிற்சி நெறி

**சுயதொழில்**

ஆண்களுக்கான Tinker தொழில் பயிற்சிநெறி இலகுவானதாகவும் விளக்கமானதுமான செய்முறைகளுடன் கூடிய கற்பித்தல் வழங்கப்படும்.
பயிற்சி முடிவில் தகுதி மிகு சான்றிதழ் வழங்கப்படும்.
நவீன உபகரணங்கள் மூலமாக பயிற்சி வழங்கப்படும்.
சுய முன்னேற்றத்துக்கான வழிகாட்டல் பயிற்சி

**NOTE :**

அனைத்து பாட நெறிகளும் முழுமையாக தமிழ்மொழி விளக்கத்துடன் கற்பிக்கப்படும்

விண்ணப்பம் மற்றும் மேலதிக தகவலைப்பெற உங்கள் பெயர், முகவரி, E-mail முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு 0771529731 இற்கு SMS செய்யவும் 15.01.2016 இற்கு முன் விண்ணப்பங்களை Blooming Buds Island Best Campus ,Thavady Road, Manipay, Jaffna என்ற முகவரிக்கு அனுப்பவும்

(சி-2940)

## Blooming Buds Island Best Campus

| | | |
|---|---|---|
| No-5,Rathmale , Colombo Road, Puttalam Tel:- 0771-529731 | No.390/2/1, Baseline Road Dematagoda Colombo- 9 . T.P :0113 054641 071-5669641, 077-1529731 | Thavadi Road Suthumalai South Manipay,Jaffna 021 225 6641, 071 566 9641 |

# பயிற்சி மூலம் ஆசிரியர்களை சேர்த்துக்கொள்ளல்

## English Medium (Gr 1 - 11) All Subjects

## 12 மாதங்கள் தமிழ் பேசும் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

### மேலதிகமாக

சிங்களக் கல்வி மற்றும் கணினி கற்கை நெறியும் இணைக்கப்பட்டுள்ளது.

தொடர்புகள்: தெமட்டகொட, புத்தளம், ஹட்டன், யாழ்ப்பாணம் [சுதுமலை], கல்முனை

ஐந்து வருடங்களாக சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளுக்காக பயிலுநர் ஆசிரியர்களைப் பயிற்றுவித்த எமது நிறுவனம் நாடெங்கிலும் ஆங்கிலம் கற்றலிலும் கற்பித்தலிலும் பேசுவதிலும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாக எல்லா மாகாணங்களிலும் எங்களது 45 புதிய நிறுவனங்களுக்கு 300 ஆசிரியர்களை இணைத்துக்கொள்ள முன் வந்துள்ளோம்.

**தகைமைகள்**

க.பொ.த சாதாரண தரம் 6பாடங்களில் திறமைச்சித்தி மற்றும் க.பொ.த உயர்தரம் கற்றிருத்தல் வேண்டும்.

ஆங்கில பாடத்தில் குறைவானவர்களிற்கு 60நாள்களிற்கு ஆங்கிலப் பயிற்சி கொடுக்கப்படும்.

பயிற்சி கிழமையில் 5நாள்கள் என்ற அடிப்படையில் 12 மாதங்களிற்குக் கொடுக்கப்படும்.

பயிற்சி முடிவடைந்த பின்னர் எமது கிளை நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்தப்படுவீர்கள்.

போயாதினம் உட்பட அரசவிடுமுறை தவிர ஏனைய நாள்கள் காலை 8.30 - 5.00 மணி வரை வேலை நாள்களாகும்.

கற்கைநெறிக்கான கட்டணங்களுக்கு வங்கிக்கடன் ஏற்பாடு செய்து தரப்படும்.

**பயிற்சியின் பின்னர் மாதாந்தக்கட்டணம் 34,500/= ஐ சம்பளமாகக் கொடுத்து உங்களை எங்கள் நிறுவனத் தின் சிறந்த ஆசிரியர்களாகத் தேர்ந்தெடுக்க நாங்கள் தயார்.**

உங்கள் விண்ணப்பத்தினைப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் தராதரப்பத்திரக் குறிப்புப் பிரதி எடுத்து அத்துடன் [9X4] அளவுள்ள தபாலுறையில் 45 ரூபாய் முத்திரை ஒட்டி தராதரப்பத்திரத்துடன் இணைத்து பதிவுத்தபாலில் அனுப்பவும். விண்ணப்பம் அனுப்பும் தபாலுறையின் மேல் மூலையில் 01 – 11 வகுப்பு வரை என்று எழுதி அனுப்பவும்.

ஆசிரிய பயிற்சி டிப்ளோமாவில்
சிங்கள டிப்ளோமா
ஆங்கில டிப்ளோமா (பேசும் ஆங்கிலம் அடங்கியது)
ஆங்கில இலக்கிய டிப்ளோமா
சுயதிறன் விருத்தி டிப்ளோமா
கணினி டிப்ளோமா

**என்பன இலவசமாகக் கற்பிக்கப்படும்.**

பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டிய முகவரி

**Officer**
**Blooming Buds International Teaching Training Institute**
*390/2/1 Base Line Rd, Dematagoda Colombo 09*

BLOOMING BUDS
The Wisdom of children

PV 94034

(சி-2941)

தொடர்புகளுக்கு: **071 566 9641/ 077 152 9731/ 011 267 7641 / 021 225 6641**

# தீவிரவாதிகள் - இராணுவத்தினர் புருண்டியில் கடும் மோதல்

## 17 பேர் உயிரிழப்பு

**புருண்டியில் இராணுவத்தளம் மீது தீவிரவாதிகள் திடீரென தாக்குதல் நடத்த முற்பட்டதால் இராணுவத்தினருக்கும் தீவிர வாதிகளுக்கும் இடையே பெரும் மோதல் மூண்டது. இதில் 12 தீவிரவாதிகள் 5 இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர்.**



ஆப்பிரிக்கா கண்டத்தில் உள்ள புருண்டி நாட்டில் பியர்ரே குருன சிஷா ஜனாதிபதியாக பதவி வகித்து வருகிறார். இங்கு பல தீவிரவாதக் குழுக்கள் உள்ளன.

இதனால் இங்கு அடிக்கடி உள் நாட்டு போர் நடந்து வருகிறது. கடந்த மே மாதம் நடத்தப்பட்ட புரட்சி முறியடிக்கப்பட்டது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் தலை நகர் புஜும்புராவில் உள்ள இராணுவ தளம் மீது அதிகாலை சிந்துமுஜா தீவிரவாதிகள் புகுந்தனர்.

அங்கிருந்த ஆயுதங்களை கைப பற்ற முயற்சி செய்தனர். மேலும் அங்கு அடைத்து வைக்கப்பட்டிரு ந்த கைதிகளை விடுவிக்க முயன் றனர். அதை அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த இராணுவ வீரர் கள் தடுத்தனர். இதனால் இரு தரப் பினருக்கும் இடையே துப்பாக்கி சண்டை நடந்தது.

அதில் 12 தீவிரவாதிகள் சுட் டுக் கொல்லப்பட்டனர். 20 பேர் கைது செய்யப்பட்டனர். இத் தாக்குதலில் 5 இராணுவ வீரர் கள் உயிரிழந்ததாகவும் அறிவிக் கப்பட்டுள்ளது. (இ-7)

# பிரதமரைத் தூக்கி வீசிய எம்.பி. உக்ரைன் பாராளுமன்றில் பரபரப்பு






உக்ரைன் நாட்டு பாராளுமன் றத்தில் உரை நிகழ்த்திக்கொண் டிருந்த அந்நாட்டு பிரதமரை குண்டுக கட்டாக தூக்கி வீசிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவ ரின் செயல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உக்ரைன் தலைநகரான கிவ் வில் அமைத்துள்ள அந்நாட்டு பாராளுமன்றமன்றத்தில் நேற்று முன்தினம் பிரதமர் Arseny Yat senyuk முக்கிய உரை ஒன்றை நிகழ்த்திக் கொண்டிருந்தார்.

அப்போது, கையில் பூச்செண்டு டன் அமைதியாக நடந்துச்சென்ற Oleg Barna என்ற பெயருடைய ஜனாதிபதிக்கு ஆதரவான பாராளு மன்ற உறுப்பினர், பிரதமரிடம் பூச்செண்டு கொடுத்துவிட்டு அவரை பிடித்து இழுக்க முயற்சித்தார்.

பிரதமர் அங்கிருந்து நகராமல் நிற்கவே ஆத்திரமடைந்த பாராளு மன்ற உறுப்பினர் அவரை குண்டுக் கட்டாக தூக்கி அருகில் வீசியுள் ளார்.

இதனை கண்டு அதிர்ச்சியடை ந்த மற்ற எம்.பிக்கள் விரைந்து சென்று அவரை மீட்டுள்ளனர்.


பின்னர், பிரதமருக்கு ஆதர வான எம்.பிக்கள் அவர் மீது பாய்ந்து சரமாரியாக தாக்கியுள்ள னர். இந்த சம்பவத்தால் பாராளு மன்றம் ஒத்திவைக்கப்பட்டதுடன் அங்கு பெரும் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது.

இந்த சம்பவத்திற்கு பிறகு பேசிய பிரதமர், 'இதற்காக நான் கவலை ப்பட வில்லை. ஆனால், பாராளு மன்றத்தில் சில மிருகங்கள் இருக் கின்றன. அவர்கள் அனைவரை யும் ஒரு முடிவுக்கு கொண்டு வர வேண்டும்' என பேசியுள்ளார்.

உக்ரைன் ஜனாதிபதியான etro Poroshenko என்பவரின் கட்சி எம்.பிக்களுக்கும், தற்போது தாக்குதலுக்குள்ளான பிரதமரின் கட்சி எம்.பிக்களுக்கும் முன் விரோ தம் இருந்து வந்ததால் தற்போது இந்த தாக்குதல் சம்பவம் நடந்துள்ள தாக முதற்கட்ட தகவல்கள் வெளி யாகியுள்ளன.

மேலும், ஜனாதிபதியின் கரு த்து வேறுபாடுகளுக்குள்ளான பிரதமர் பதவியில் நீடிக்ககூடாது என்பதற்க ாகவும் இந்த தாக்குதல் முயற்சி நடந்ததாகவும் கூறப்படு கிறது. (இ-7)

# சுயசரிதை எழுதி பிரபலமான யாசகர்



பிரான்ஸ் தலைநகர் பாரிஸை சேர்ந்தவர் ஜீன் மாரி ரவுகுல் (47). இவர் பாரிஸ் நகர வீதிகளிலும், பூங்காக்களிலும் பொதுமக்களிடம் யாசகம் பெற்று வாழ்ந்து வருகி றார். இவருக்கு வீடு கிடையாது.

இதனால் பிளாட் பாரத்தில் தங்கியுள்ளார். கடந்த 25 ஆண்டு களாக யாசகம் பெற்று வருகிறார். இதன்மூலம் தினமும் அவர் 80 'யூரோ' (ரூ.650) சம்பாதிக்கிறார்.

இதன்மூலம் தனது உணவு, உடை தேவைகளை பூர்த்திசெய்து வருகிறார்.

இந்த நிலையில் இவர் தனது வாழ்க்கையை சுயசரிதை புத்தக மாக எழுதி வெளியிட்டுள்ளார். அது அதிகளவில் விற்பனையாகி வரு கிறது.

அவர் குறித்து 'பேஸ்புக்', 'டுவிட் டர்' போன்ற இணைய தளங்களில் அவரது போட்டோவுடன் செய்தி களும், வாழ்த்துகளும் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றன.

சுற்றுலா வரும் வெளிநாட்டி னரும் இவரை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவிக்கின்றனர்.

அவரது புத்தகங்களை முன் பதிவு மூலம் வாங்கி செல்கின்ற னர். இருந்தும் ஜீன் மாரி ரவுகுல் தனது தொழிலை மாற்றவில்லை.

தொடர்ந்து யாசகம் பெற்று (பிச்சை எடுத்து) வருகிறார்.

இதேவேளை தற்போது தான் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதாக அவர் தெரிவித்தார். (இ-7)

# 12.2015 13 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖ 1577 - சேர் பிரான்சிஸ் டிரேக் இங்கிலாந்தின் பிளைமவுத்திலிருந்து தனது உலகத்தைச் சுற்றிவரும் பயணத்தை ஆரம்பித்தார்.

❖ 1642 - ஏபெல் டாஸ்மான் நியூசிலாந்தை அடைந் தார்.

❖ 1888 - யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சூறாவளியில் பலத்த சேதம் ஏற்பட்டது.

❖ 1941 - இரண்டாம் உலகப் போர்: ஹங்கேரி, ருமே னியா ஆகியன ஐக்கிய அமெரிக்கா மீது போரை அறிவித்தன.

❖ 1943 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெ ரிக்காவின் 710 போர் விமானங்கள் ஜேர் மனியின் கீல் நகர் மீது தாக்குதலை நடத் தின.

❖ 1949 - ஸ்ரேலின் சட்டசபை நாட்டின் தலைநகரை ஜெருசலேம் நகருக்கு மாற்ற முடிவெடுத்தது.

❖ 1959 - மக்காரியோஸ் சைப்பிரசின் முதலாவது ஜனா திபதியானார்.

❖ 1972 - அப்பல்லோ 17 விண்வெளி வீரர்கள் யூஜீன் செர்னன், ஹரிசன் ஸ்மித் ஆகியோர் சந்திர னில் இறங்கினர். 20ம் நூற்றாண்டில் சந்திர னில் இறங்கிய கடைசி மனிதர்கள் இவர் களே.

❖ 1974 - மோல்ட்டா குடியரசானது.

❖ 1981 - போலந்தில் இராணுவ ஆட்சி ஏற்படுத்த ப்பட்டது.

❖ 1996 - ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலா ளராக கோஃபி அன்னான் தெரிவு செய்யப் பட்டார்.

❖ 2003 - முன்னாள் ஈராக் அரசுத் தலைவர் சதாம் உசேன் அவரது சொந்த ஊரான திக்ரித்துக்கு அருகே அமெரிக்கப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

❖ 2004 - முன்னாள் சிலி சர்வாதிகாரி ஆகுஸ்டோ பினோச்சே வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

❖ 2006 - பாய்ஜீ என்ற சீன ஆற்று டால்ஃபின் அருகிய இனமாக அறிவிக்கப்பட்டது.

**பிறப்புக்கள்**

❖ 1926 - செ. குப்புசாமி தொழிற்சங்கத் தலைவர் (இ). 2013

**இறப்புகள்**

❖ 1557 - டார்ட்டாக்ளியா, இத்தாலியக் கணிதவிய லாளர் (பி. 1499)

❖ 1944 - வசிலி கண்டின்ஸ்கி, ரஷ்ய ஓவியர் (பி.'1866)

❖ 1987 - நா. பார்த்தசாரதி, எழுத்தாளர் (பி. 1932)

❖ 2010 - திமிலை மகாலிங்கம், ஈழத்து எழுத்தாளர் (பி. 1938)

❖ 2010 - ரிச்சர்ட் ஆல்புரூக், அமெரிக்கத் தூதுவர்

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | நெல்லியடி ரூபா | கொடிகாமம் ரூபா | சுன்னாகம் ரூபா | மருதனார்மடம் ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 150 | 140 | 200 | 160 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 65 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 600 | 500-550 | 450 | 800 | 600 |
| தக்காளி | 200 | 200 | 170 | 170 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 15-30 | 50 | 40 |
| கோவா | 100 | 120 | 110 | 100 | 140 |
| கரட் | 150 | 160 | 140 | 180-320 | 160 |
| பூசணி | 60 | 40 | 30-40 | 60 | 40 |
| புடோல் | 100 | 100 | 90 | 100 | 120 |
| வாழைக்காய் | 60 | 60 | 45 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 120 | 130 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 90 | 90 |
| பாகற்காய் | 250 | 300 | 220 | 300-400 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 90 | 100-160 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 70 | 80 | 70 |
| பயற்றங்காய் | 300 | 200 | 200 | 240-320 | 400 |
| லீக்ஸ் | 150 | 120 | 130 | 160 | 200 |
| பீற்றூட் | 100 | – | – | – | 200 |
| கறிமிளகாய் | 350 | – | – | 400 | 300 |
| முருங்கைக்காய் | 400 | – | – | – | – |
| போஞ்சி | 300 | – | – | 240 | 300 |
| கத்தரிதம்புள்ள | 140 | 100 | 110 | – | – |
| கீரை - 1 பிடி | 70 | 50 | – | 50 | 40 |
| தேசிக்காய் | 150 | 100 | 100 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 30-45 | 50 | 50 |
| இராசவள்ளி | 200 | 250 | – | 250 | 250 |
| வெங்காயப்பூ | 350 | – | – | – | 300 |
| முள்ளங்கி | 120 | – | – | 120 | 120 |
| பொன்னாங்காணி | 50 | – | 20 | 30 | 40 |
| வல்லாரை | 20 | – | – | 10 | 30 |
| ஈரப்பலா | 40 | 50 | 50 | 50 | 40 |

# பாராளுமன்றின் அனுமதியின்றி ஐ.நா.பிரேரணை நிறைவேறாது

## அமைச்சர் ஹர்ஷ டி சில்வா கூறுகிறார்

**ஐ.நா மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான பிரேரணையானது பாராளுமன்றத்தின் அனுமதியின்றி முன்னெடுக்கப்படமாட்டாது என பிரதி வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.**

பிரதமருக்கோ வெளிவிவகார அமைச்சருக்கோ சுயமாக செயற்பட எந்த அதிகாரமும் வழங்கப்படவில்லை. மதத் தலைவர்கள் இணைந்து கருணை சபையொன்றை அமைத்தே முதல் பேச்சு நடத்தப்படும் என அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வெளிவிவகார அமைச்சு மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதியமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

உண்மையை கண்டறிந்து மன்னிப்பு வழங்க நடவடிக்க எடுக்கப்படும். தேவையேற்பட்டால் நட்டஈடு வழங்கவும் மீண்டும் அவ்வாறான சம்பவங்கள் நடைபெறாதிருக்கவும ஆவன செய்யப்படும்.

வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளைத் தனிமைப்படுத்தி வேறு நபர்கள் வெளிநாட்டுப் பயணங்கள் செலலவில்லை. எமது வெளிநாட்டுக் கொள்கைப் படி எந்த நாடும் எமது எதிரிகளல்ல. அதன்படியே செயற்படுகிறோம்.

வெளிவிவகார அமைச்சுக்கு மத்திய வங்கி, ஜனாதிபதி செயலகம் என்பவற்றினூடாக நிதி செலவிடப்பட்டது. இருந்தும் உலகில் இலங்கை தனிமைப்படுத்தப்பட்டு ஒதுக்கப்பட்டது.

வெளிவிவகார அமைச்சு கடந்த காலத்தில் பல வெளிநாட்டு நிறுவனங்களுக்குப் பல இலட்சம் டொலர்கள் வழங்கியுள்ளது. ஆலோசனை மற்றும் நாட்டின் நற்பெயரை உயர்த்துவதற்கே இவ்வாறு செய்யப்பட்டது.

உலக நாடுகள் எவ்வாறு எமது ஜனாதிபதியை இன்று வரவேற்கின்றனர்.? எமது நாடு குறித்து சர்வதேச கீர்த்தி உயர்ந்து வருகிறது.

ஐ.நா மனித உரிமை பேரவையில் சகல நாடுகளும் எமக்கு ஆதரவாக செயற்பட்டன. பாதாளத்தில் இருந்து எமக்கு வெளிவர முடிந்துள்ளது. உலகில் பல நாடுகளினதும் சந்தைகள் எமக்கு திறந்து விடப்பட்டுள்ளன.



ஜீ.எஸ்.பி. பிளசை மீளப்பெற ஐரோப்பிய ஒன்றியத்துடனும் நெருககமாக செயற்பட்டு வருகிறோம். எமது சிரேஷ்ட அதிகாரிகள் பிரசல்சில் அவர்களுடன் பேசி வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# உயிர் எச்சரிக்கை விடப்படவேண்டும்

## கீதா குமாரசிங்க அட்வைஸ்

இந்திய பெண்மணியொருவரை கல்லெறிந்து கொலை செய்ய சவுதி அரேபியா தீர்மானித்தவுடன் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி சவுதி அரசாங்கத்துக்கு தெளிவாக எச்சரிக்கை விடுத்தார். அங்கு ஒரு பெண்ணைக் கொலை செய்தால், இந்த நாட்டிலுள்ள 100 பேரை இந்தியாவில் கொலை செய்வதாக கூறியவுடன் அந்தப் பெண் விடுதலை செய்யப்பட்டார். ஏன் இலங்கைப் பெண்மணி குறித்து இதுபோன்றதொரு தீர்மானத்துக்கு வர முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

இதற்குப் பதிலளித்த கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மரிக்கார்,

வெளிநாட்டிலுள்ள மரண தண்டனையை விமர்சிக்கும் சிலர், இந்த நாட்டில் தூக்குத் தண்டனையை கொண்டு வர வேண்டும் எனக் கூறுவது வேடிக்கையானது எனத் தெரிவித்தார். (இ-7)

# பரீட்சார்த்தி கைதானார்

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு இரண்டாம் முறையாக தோற்றவிருந்த பரீட்சார்த்தியொருவர் சார்பாக போலியாக தோற்றிய ஒருவர் கண்டி பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

20 வயதான இளைஞன் ஒருவரே கண்டியிலுள்ள பரீட்சை நிலையமொன்றில்கைது செய்யப்பட்டுள்ளார்.

போலியான ஆவணங்களை சமர்ப்பித்தமை, மற்றுமொருவர் சார்பாக தோன்றி மோசடியில் ஈடுபட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் சந்தேகநபருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ளன.

கண்டி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பின்னர், 2 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் சந்தேகநபர் விடுவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், உதவிப் பொலிஸ அத்தியட்சகருமான ருவன் குணசேகர தெரிவித்தார்.

இதேவேளை, உண்மையிலேயே பரீட்சைக்குத் தோற்றவேண்டிய நபர் குறித்தும் அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# விவசாய நிலங்களிலும் போக்குவரத்து நெரிசலா

## டலஸ் கேள்வி

வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக பேசிய 23 பேர் அரசாங்கத்தின் பக்கம் திரும்பியுள்ளதாகவும், பலரின் வாய்கள் தற்பொழுது மூடப்பட்டுள்ளதாகவும் ஐக்கிய மககள் சுதந்திர முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

போக்குவரத்து நெரிசல்கள் காரணமாக வாகன இறக்குமதியை கட்டுப்படுத்துவதற்கு அதன்மீதான வரிகள் அதிகரிக்கப்பட்டதாக கூறுகின்றார்கள்.

அதேநேரம் உழவு இயந்திரங்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டிருப்பது வயல் நிலங்களிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதனாலா என்று அவர் கேள்வி எழுப்பினார்.



இந்த அரசாங்கம் அதிகாரத்திற்கு வருவதற்கு ஆதரவு வழங்கிய பெரும்பாலானோர் தற்போது அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சிக்க ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# வாரம் ஒரு தகவல்

## வாழ்க்கை

எதையும் அனுபவித்தேதான் தெரிந்து கொள்ளவேண்டும். அடுத்தவர் மூலமாய் அறிவதில் பயன் இல்லை. அடுத்தவர் அனுபவம் உங்களுக்குப் பொருந்தாமல் போகலாம். ஞாபகம் வையுங்கள். எந்தக் காலத்திலும் எவ்வளவு பொருத்தமானது என்றாலும் பிறருடைய உள்ளாடைகளை நாம் அணிந்து கொள்ள முடியாது. அனுபவங்களும் அப்படித்தான்.

உரிக்க உரிக்கத் தோலாக வந்து கடைசியில் ஒன்றுமில்லாமல் போகும் வெங்காயத்தைப் போல வாழ்க்கையிலும் ஒன்றுமில்லை என்று உங்களுக்குத் தோன்றலாம். ஆனாலும் நீங்கள் வாழ்ந்து தான் அதனை உணரவேண்டும்.

ஒரு வட்டத்தின் சுற்றுப்பாதையில் ஒரு புள்ளியிலிருந்து பயணம் மேற்கொண்டால் மீண்டும் அதே இடத்திற்குத்தான் வரவேண்டியிருக்கும். அதேபோல் உங்கள் வாழ்க்கையையும் உங்களை எந்த இலக்கையும் அடைய விடாமல் ஆரம்ப இடத்திற்கே கொண்டு வந்து சேர்த்துவிடலாம். ஆனாலும் நீங்கள் வாழ்ந்து தான் ஆக வேண்டும்.

வாழ்க்கைக்கு அர்த்தமே இல்லையென்று நீங்கள் அர்த்தப்படுத்தியிருந்தாலும் வேறெந்த அபிப்பிராயம் கொண்டிருந்தாலும் நீங்கள் வாழ்ந்தாக வேண்டும். இது இயற்கையின் கட்டளை– இறைவனின் உத்தரவு.

வாழ்க்கையை நரகமாகச் செய்வதற்கு சலிப்பு ஒன்றே போதும். சலிப்பு மனிதனைப் பீடிக்கும் பெருநோய். அந்த நோய் பீடித்துவிட்டால் ஒவ்வொரு கணமும் ஒரு யுகத்தின் அடர்த்தியோடு கனக்க ஆரம்பித்துவிடும்.

# நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். கோப்பாய் பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள காலங்கடந்த பிறப்பு, இறப்பு பதிவிற்கான நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு கோப்பாய் பிரதேசசெயலகத்தில்நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலங்கடந்த பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (இ-5)

# பரிசளிப்பு

(யாழ்ப்பாணம்)

வண்ணை– சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் ஏற்பாட்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூஜை தினத்தை முன்னிட்டு 29.11.2015 அன்று நடத்தப்பட்ட சைவவினாவிடைப் பரீட்சையில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்புதினநிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-5)

# 'வராஹா' கப்பல் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது

"வராஹா" என்ற பெயரைக் கொண்ட இந்திய கரையோர காவல கப்பலை இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளதாக இந்திய லோக்சபாவில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுபாப்பு ராஜாங்க அமைச்சர் ராவ் இந்தேர்ஜித் சிங் இந்த தகவலை எழுத்துமூலம் நேற்று முன்தினம அறிவித்துள்ளார்.

2006 ஆம்ஆண்டு முதல் இந்தக் கப்பலை இலங்கை குத்தகைக்கு பெற்று வந்துள்ளது. காலத்துக்கு காலம இந்தக்குத்தகை நீடிக்கப்பட்டு வந்தது.

இந்தநிலையில் 2015 ஓகஸ்ட் மாதம் இந்த கப்பல் இலங்கைக்கு நல்லெண்ண நன்கொடையாக வழங்கபபட்டது என்று ராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இந்த கப்பல் விடயத்தில் எதிர்க்கட்சிகள் எதிர்ப்பை வெளியடவில்லை என்றும் அவர் தெரிவிததுள்ளார். (இ-7)

# பாலர் பகல்பராமரிப்பு நிலைய 2 ஆவது ஆண்டு கலைவிழா

சாவகச்சேரி நகர் புவேந்தன் நகர் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் 21 ஆவது ஆண்டு வருடாந்த கலை விழா இன்று ஞாயிற்றுக்கிழமை தென்மராட்சிக் கலைமன்ற கலாசார மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிலையத்தின்தலைவர்வை.இராசரெத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகயாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்வி அமைச்சின் ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்தி பிரிவின்பணிப்பாளர்ஜெயாதம்மையா, தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன், தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் முன்பள்ளி மாணவர்களது கலை நிகழ்வுகள் மற்றும் அடுத்த வருடப் பாடசாலைக்கு செல்லும் மாணவர்களை கௌரவித்தல் நிகழ்வு என்பன இடம்பெறவுள்ளது. (இ-5-29)

# தடைநீக்கம் குறித்து திருப்தி தெரிவிக்கும் வெளிநாட்டு புலம்பெயர் தமிழர்கள்







**சண்டே லீடர் பத்திரிகையில் "தடைநீக்கத்தைப் பாராட்டும் புலம்பெயர் தமிழர்கள் அரசுக்கு உதவுகிறார்கள்" எனும் தலைப்பில் ஈஸ்வரன் ரட்ணம் எழுதிய அரசியல் கட்டுரையின் தமிழாக்கம்...**

### கனேடிய தமிழர் பேரவை (CTC)

தடைப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மற்றுமொரு பிரபல்ய புலம்பெயர் தமிழர் அமைப்பு கனேடிய தமிழர் பேரவையாகும். இலங்கையின் புதிய அரசானது புலம் பெயர் தமிழர் அமைப்புகளுக்கான மார்ச் 2014 தடைப்பட்டியலிலிருந்து தமது அமைப்பு உட்பட மேலும் சில தமிழர் அமைப்புகளது தடையை நீக்குவதில் முன்முயற்சியாக மேற்கொண்ட இந்த நடவடிக்கையை அமைப்பு வரவேற்பதாக அதன் தேசிய பேச்சாளரான டேவிட் பூபாலபிள்ளை கூறியிருந்தார்.

உண்மைக்குப் புறம்பானதும் அடிப்படை ஆதார மற்றதும் வேண்டுமென்றே உள்நோக்குடன் முன்னைய அரசாங்கத்தினால் ஆரம்பத்திலேயே தயாரிக்கப்பட்ட இந்த தடைப்பட்டியலானது புலம் பெயர் தமிழர்கள் பலரையும் வாய்மூடி மௌனியாக இருக்கும்படி நிர்ப்பந்திக்கும் முகமாகவே அன்று நடைமுறைப்படுத்தப்பட்ட ஒன்றே என அப்போதிருந்தே தான் தொடர்ந்தும் கூறி வந்ததாக பூபாலபிள்ளை 'சண்டேலீடர்' பத்திரிகைக்கு கூறியிருந்தார்.

"தடைக்கான ஆதாரங்களை முன்வைக்க வேண்டும், அப்படி இல்லையென்றால் எமது 'CTC' அமைப்பினை அப்பட்டியலிலிருந்து நீக்க வேண்டும் என முன்னைய அரசாங் கம் மற்றும் தற்போதைய அரசாங்கம் ஆகிய இரண்டிற்கும் நாம் ஏற்கனவே எழுதியிருந்தது மட்டுமல்லாது வெளிநாட்டுக்கு புலம்பெயர்ந்த மக்களனைவருமே இலங்கையை மீளவும் கட்டியெழுப்புவதில் முக்கிய பங்கினை ஆற்ற முடியமெனவும் சுட்டிக் காட்டியிருந்தோம். எமது முன்னோக்கிய இப்பாதையில் அரசினால் மேற்கொள்ளப்படும் இந்த தடைநீக்க நடவடிக்கை சரியான திசையை காட்டுவதாயிருக்கிறது" என அவர் கூறுகிறார்.

புதிய அரசாங்கம் இவ்வருடம் பதவியேற்றதன் பின்னர் புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளை அரசுக்கு ஆதரவாக ஒத்துழைத்துச் செயற்படும் படி ஊக்குவிப்பதற்காக அவற்றுள் சிலவற்றை தடைப்பட்டியலிலிருந்து நீக்குவதற்கு உத்தேசித்துள்ளதாக கூறியிருந்தது.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நோர்வேயின் இலங்கைக்கான சமாதான தூதுவராயிருந்த எரிக்சொல்ஹெய்ம் பிரசன்னத்தில் உலக தமிழர் பேரவையுடன் இந்த வருடம் லண்டனில் பேச்சுக்கள் மேற்கொண்டிருந்தனர்.

வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்திருக்கும் இலங்கையர்களுக்கென அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்படும் 'புலம்பெயர்ந்தோர் விழா'வில் பங்குபற்றும் பொருட்டு உலகத் தமிழர் பேரவையுடன் ஏனைய புலம்பெயர் தமிழ் குழு அமைப்புகளுக்குங்கூட அழைப்பு விடுக்கப்படவிருக்கிறது. அநேகமான புலம் பெயர் தமிழ் குழுக்கள் புதிய அரசாங்கத்தின் இந்த முன்முயற்சியை வரவேற்றிருக்கும் அதேவேளை, 'நாடு கடந்த தமிழீழ அரசு' (TGTE) உட்பட ஏனைய சில அமைப்புகளும் அரசுக்கு மாறான தமது தனித்துவப் போக்கையே தொடர்ந்தும் கடைப்பிடித்து வருவதாக தெரிகிறது. நாடு கடந்த தமிழீழ அரசுத் தலைவரும் எல்.ரீ. ரீ.ஈயின் முன்னாள் பேச்சு வார்த்தை ஏற்பாட்டாளராக இருந்தவருமான வி.உருத் திரகுமாரன் 'தனித்தமிழ்' ஈழம் என்ற இலட்சியத்தையே தொடர்ந்தும் முன்னெடுத்து வருகிறார்.

2001 செப்ரெம்பர் 11 ஆம் திகதியன்று நியூயோர்க் வர்த்தகமைய இரட்டைக் கோபுரத்தின் மீதும் அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சு பணியகமான பென்ரகன் மீதும் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதலுக்குப் பின்னர் அதே செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதியன்று ஐக்கிய அமெ ரிக்க இராச்சியத்தினால் ஐ.நா. பாதுகாப்பு சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் - '1373' ஐ தனக்கேற்ப பயன் படுத்திக் கொண்ட மகிந்த ராஜபக்ஷ அரசு தனக்கு பாதகமாக வெளிநாடுகளில் இயங்கி வந்த இலங்கை மக்களின் அமைப்புக்கள் பலவற்றையும் வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்புகள் என்ற விதமாக தடைசெய்து அவற்றை பட்டியலிட்டிருந்தது.

வெளிநாட்டுப் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் செயற்பாடுகள் பற்றிய தனது குற்றச்சாட்டுக்களையிட்டு மிகைப்படுத்தப்பட்ட விதமான தனது அக்கறைகளை அடிக்கடி எழுப்பி உசார்ப்படுத்திய அப்போதைய அரசு புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் மற்றுமொரு போருக்கு தமது நிதி வளங்கள் மூலம் அடித்தளமிடுவதாகக் கூறி 'ஐ.நா. ஒழுங்குவிதி இல .1' க்கான பாராளுமன்ற அங்கீகாரத்தையும் 2012 இல் பெற்றுக் கொண்டது. அதே ஒழுங்கு விதி, அமைப்புகள் மீதான அரசின் தடையை வருடத்திற்கு ஒரு தடவையாவது மீள்பரிசீலனை செய்யும் கடப்பாட்டிற்கும் சேர்த்தே அதனை உட்படுத்தியிருந்தது. புதிய அரசாங்கம், பங்கரவாதத்தை அதனது வடிவங்கள் அனைத்துக்கும் அடிப்படையாயிருக்கும் அதனதன் நோக்கங்களுக்கேற்ப அவற்றைத் தரம் பிரித்து மீள் பரிசீலனையூடாக ஆய்ந்து அறிந்து பயங்கரவாத செயற்பாடுகளை முடிவிற்குக் கொண்டு வரும் அரசின் தீர்க்கமான கொள்கை காரணமாக அவற்றின் உண்மையான போக்கினை ஒழுங்கான முறையில் சீர்தூக்கிப் பார்த்து தீர்மானத்திற்கு வரும் முயற்சியில் இறங்கியது.

புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களது கருத்துக்களையும் அறிந்து கொண்டு அவர்களைப் புறக்கணித்து விடாது அமைப்புகளையும் சேர்த்துக் கொண்டே மீள் இணக்கப்பாட்டு விடயங்களை முன்னெடுத்துச் செல்ல விரும்புவதாகவே புதிய அரசு கூறியது. பயங்கரவாத தொட ர்புகள் காரணமாக இலங்கை யில் தடைசெய்யப்பட்டிருந்த ஏனைய குழுக்களும் தனியாட்களும் பிரிவினைவாதத்தை நிராகரிப்பதுடன் அதற்கு அவசியமான ஏனைய நடவடிக்கைகளையும் மேற்கொள்வதன் மூலம் தடைப்பட்டியலிலிருந்து விடுவித்துக்கொள்ளும்படியும் அவர்களை கடந்த வாரம் அரசு ஊக்கப்படுத்தியிருந்தது. "முன் மாதிரியாக நடந்துகொண்டிருக்கும் ஏனைய குழுக்களைப் போலவே எஞ்சியிருக்கும் ஏனையவையும் அவர்களைப் போன்றே வெளிப்படையான பிரகடனங்கள் மூலம் வன்முறைகளைக் கண்டிப்பதுடன் பிரிவினை வாதத்தை நிராகரித்து அதனாலாகும் கடப்பாடுகளை நிறைவேற்ற முயற்சிப்பதுடன் அதற்கு அவசியமான ஏனைய நடவடிக்கைகளையும் மேற்கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

இவ்வாறு இவர்களும் செயற்படுவார்களேயாகில் வடக்கிலும் தெற்கிலும் ஏற்கனவே தடை செய்யப்பட்டவையாக இருந்த அமைப்புகள் எவ்வாறு வெற்றிகரமான முறையில் அரசாங்கத்தின் புதியதும் முக்கியமானதுமான ஜனநாயக ஓட்டத்தில் இணைந்து நாட்டின் நிகழ்கால எதிர்கால நன்மைகளுக்காக இப்போது உழைத்து வருவது போலவே அவர்களுங்கூட செயற்பட முடியும்" என வெளிவிவகார அமைச்சு கடந்தவாரம் கூறியிருந்தது.

மேற்படி விடயங்கள் மட்டில் மேற்கொள்ளப்பட்ட மீள் ஆய்வுகளின் விளைவாக இலங்கையின் சட்ட அமுலாக்கல் மற்றும் புலனாய்வு சேவைகள் போன்றவை தமது மூல வளங்களைப் பயன்படுத்தி கூடுதல் ஆக்கபூர்மாகவும் திறமையாகவும் செயற்படுத்துவதுடன் தமது சக்தியை உண்மையான அச்சுறுத்தல்கள் மீது ஆற்றலுடன் பயன்படுத்திக் கொள்வதன் மூலமும் இலங்கையின் பாதுகாப்பினை உண்மையாகவே உயர்நிலைக்கு இட்டுச் செல்லக் கூடியதாகவுமிருப்பதுடன் மக்களுக்கும் நம்பிக்கையான முறையில் சிறந்த பாதுகாப்பினை வழங்கக் கூடியதாகவுமிருக்கிறது.

### நாடு கடந்த தமிழீழ அரசு (TGTE)

### "சுயநிர்ணயமே எமது இலக்கு" –உருத்திர குமாரன் கூறுகிறார்

புலம்பெயர் தமிழர் அமைப்புக்களை கண்மூடித்தனமாக தடைசெய்த முன்னைய அரசின் முறையற்ற அதே பட்டியலைப் பயன்படுத்தியே தடை நீக்க நிபந்தனைகளை நிர்ப்பந்திப்பதாக தற்போதைய அரசின் மீது நாடு கடந்த தமிழீழ அரசு சாட்டுகின்ற அதே குற்றத்தினையே அதன் தலைவராகிய வி.உருத்திரகுமாரனும் வலியுறுத்துகிறார்:– தமிழர் தேசிய பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வு காண்பதற்கு முன்னைய அரசின் அதே குற்றங்களின் அடிப்படையில் தற்போதைய அரசு நிர்ப்பந்திக்கும் நிபந்தனைகள் எதுவிதத்திலும் உதவப்போவதில்லை" என்பதே அவரது கூற்றாகும். தமிழர்களுக்கான "சுயநிர்ணய உரிமை" யையே வலியுறுத்தப் போவதாக சண்டே லீடர் பத்திரிகைக்கு அவர் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், 'TGTE' – ஈழ அரசின் அரசியல் யாப்பு சுதந்திரமானதும் இறைமையுள்ளதுமான தமிழீழ இராட்சியமொன்றை ஸ்தாபிப்பதனையே இலட்சியமாகக் கொண்டிருப்பதனால் இலங்கை அரசுக்கு அது சுகாதாரமான நிலைப்பாடாக இல்லையென்பது எமக்கு ஆச்சரியமானதல்ல. அரசுக்கு சுகாதாரமானதும் புலம்பெயர் தமிழர்கள் மட்டில் முறையற்ற நிபந்தனைகளையே தெரிவுக்குரியதாக நிர்ப்பந்திப்பதுமான அரச தரப்பு நிலைப்பாடானது புலம் பெயர் தமிழர்கள் மத்தியில் பிரித்தாழும் கொள்கையை அரசு கைக்கொள்ளும் தந்திரத்தையே காட்டுகிறது. UNP யும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இத் தந்திரத்தில் கைதேர்ந்திருப்பது தெரிந்ததே. யுத்த நிறுத்த காலத்தில் இத் தந்திரத்தைப் பிரயோகித்தே பிரபாகரனின் தளபதி கருணாவை LTTE யிலிருந்து அந்நியப் படுத்திய அவர் இப்போது புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலும் அதே தந்திரத்தையே பிரயோகிக்க முயற்சிக்கிறார். (தொடரும்)

தமிழில் யோகர்



இந்திய அரசின் நிதியுதவியில் வவுனியா பொது வைத்தியசாலையில் கட்டப்பட்ட புதிய விடுதி நேற்று முன்தினம் மாலை திறந்து வைக்கப்பட்டது. 200 படுக்கைகளைக் கொண்ட இப்புதிய கட்டடம் சிறுவர் விடுதி, பெண்கள் விடுதி என்பவற்றை கொண்டமைந்துள்ளது. கட்டடத்தினை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே.சிங்ஹா திறந்து வைத்ததுடன், விருந்தினர்களாக சுகாதார பிரதி அமைச்சர் பைசல் காசிம், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிவமோகன், சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, கே.கே.மஸ்தான், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் இந்திய தூதரக அதிகாரிகள், வவுனியா பொது வைத்தியசாலை பணிப்பாளர் மற்றும் வைத்திய அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-குருமன்காடு,பனிக்கன்குளம் செய்தியாளர்கள்)

# பாலம் இடிந்து வீழ்ந்ததில் உழவு இயந்திரம் புதைந்தது

## தெய்வாதீனமாக உயிர்ச்சேதம் ஏற்படவில்லை



(கிளிநொச்சி-1)

உருத்திரபுரம் நீவில் வீதியிலுள்ள பாலம் திடீரென பாறி வீழ்ந்ததில் அதனூடாகப் பயணித்துக் கொண்டிருந்த உழவு இயந்திரம் ஒன்று புதைந்தது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இதன்போது எவருக்கும் காயமோ, உயிர்ச்சேதமோ ஏற்படாது தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

உழவு இயந்திரமொன்று உர வகைகளை ஏற்றிக் கொண்டு பாலத்திற்கு மேலாக பயணித்துக் கொண்டிருந்தது.

திடீரென பாலம் இடிந்து வீழ்ந்துள்ளமையால் உழவு இயந்திரமும் அதனுள் புதையுண்டது.

தற்போது இப் பாதையூடாக மக்கள் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது.

உருத்திரபுரத்தில் இருந்தும் ஏனைய கிராமங்களில் இருந்தும் நீவில் கிராமம் மற்றும் வயல்களுக்கு செல்லும் மக்கள் மாற்று வழியூடாகவே சென்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த வீதி கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (2-277)

# மன்னாரில் பண்டிகைக்கால சந்தை கடைகள் குத்தகைக்கு விடப்படவுள்ளன

## நகர சபை செயலாளர் தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் நகர சபையினரால் நத்தார் புதுவருட பண்டிகைக்கால சந்தை கடைத்தொகுதி குத்தகைக்கு விடப்படவுள்ளது.

கடந்த 8 ஆம் திகதி குத்தகைக்கான கடைத்தொகுதி பயனாளிகள், பொலிஸார் ஆகியோரின் முன்னிலையிலும் பரிசீலிக்கப்பட்ட நிலையில் கடைத்தொகுதிகளை அமைப்பதற்கான அனுமதி எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை வழங்கப்பட்டுள்ளது.

சுமார் ஆயிரத்து 200 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்த போதும் 189 கடைத்தொகுதிக்கான விண்ணப்பங்களே மூடிய கேள்வி கோரல் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏற்கனவே மன்னார் மாவட்ட வியாபாரிகளுக்கு என ஒதுக்கப்பட்ட கடைகளின் எண்ணிக்கை 33ஆக இருந்த போதும் வெளிமாவட்ட வியாபாரிகளின் கடைத்தொகுதிக்கும் விண்ணப்பிக்கும் சந்தர்ப்பம் மன்னார் மாவட்ட வியாபாரிகளுக்கு வழங்கப்பட்டது.

இதுவரை 139 கடைகள் ஏலத்தில் விடப்பட்டுள்ளதுடன், ஏலப்பணம் 15 ஆயிரம் ரூபாயாகவும், முற்பணமாக 42 ஆயிரத்து 500 ரூபாய் அதிகூடிய ஏலப்பணமாகவும பதிவாகியுள்ளது.

கடைத்தொகுதிகள் அமைகின்ற இடங்களைப் பொறுத்தே ஏலப்பணம மாறுபட்டுள்ளது.

பண்டிகைக் காலத்திற்காக வர்த்தக நிலையங்களை அமைக்க ஒதுக்கப்பட்ட இடங்களின் மூலம் இதுவரை 39 இலட்சம் ரூபாய் மன்னார் நகர சபைக்கு வருமானம கிடைக்கப்பெற்றுள்ளது.

இவ் வருமானத்தில் இருந்து துப்புரவு தொழிலாளர்கள், சிற்றூழியர்கள், எரிபொருள் செலவு மற்றும் சிறு அபிவிருத்தி பணிகள் ஆகியவற்றிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது என மன்னார் நகர சபையின் செயலாளர் பிரிட்டோ லெம்பேட மேலும் தெரிவித்தார். (2)




# வாழ்வாதார சுழற்சிமுறை கடன் திட்டங்கள்

(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் மாதர் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்களுக்கு வாழ்வாதார சுழற்சி முறை கடன் திட்டங்கள் வழங்கப்பட்டன.

வள்ளிபுனம் பிரதேச மாதர் கிராம அபிருத்தி சங்கத்தின் தெரிவு செய்யப பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார மேம்பாட்டிற்கான சுழற்சிமுறை கடன் வழங்கும் நிகழ்வு முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் மேரிகமலா குணசீலனின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா கலந்து கொண்டார்.

இந்நிகழ்வின் போது நீண்டகாலமாக வள்ளிபுனம் பிரதேச மக்கள் எதிர்கொண்டு வருகின்ற பிரச்சினைகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் கேட்டறிந்ததுடன் எதிர்காலத்தில் அவற்றை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார். (2-281)

# வாழ்வாதார உதவி வழங்கி வைப்பு

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சினால் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் மற்றும் உயிரிழந்த போராளிகளின் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு - முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் திட்டத்தின் கீழ், வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட வாழ்வாதார செயற்றிட்டத்தில் இரண்டாம்கட்ட நிகழ்வாக முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த 147 பயனாளிகளில் ஒவ்வொருவருக்கும் தலா ஐம்பது ஆயிரம் ரூபா பெறுமதியான உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்விற்கு முல்லைத்தீவு மாவட்ட பங்குத்தந்தை, வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன், வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் து.ரவிகரன், க.சிவநேசன் ஆகியோரும் முல்லைத்தீவு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் எஸ்.மோகன்ராஸ், வடக்கு கிராம அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசியன், மாவட்ட செயலகத்தின் திட்ட பணிப்பாளர் மற்றும் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் ஆகியோர்கலந்துகொண்டுபொருட்களை வழங்கி வைத்தனர். (2-281)

# வவுனியாவில் கொட்டித் தீர்த்த மழையினால் 94 குடும்பங்கள் நலன்புரி நிலையங்களில்

## அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் தெரிவிப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் பெய்த கடும் மழை காரணமாக 94 குடும்பங்களைச் சேர்ந்த 389 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு தற்காலிக நலன்புரி நிலையமும் அமைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,வவுனியாவில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வரும் நிலையில் கடந்த வியாழக்கிழமை இரவு முதல் பெய்த கடும் மழை காரணமாக வவுனியா பிரதேச செயலர் பிரிவில் 94 குடும்பங்களைச் சேர்ந்த 389 பேர் பாதிப்படைந்துள்ளனர். மூன்று வீடுகள் முழுமையாகவும், 4 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன.

பாதிப்படைந்த மக்களை தங்க வைப்பதற்காக மாதர் பனிக்கன் குளம் பகுதியில் ஒரு தற்காலிக நலன்புரி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு 30 குடும்பங்களைச் சேர்ந்த 104 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான சமைத்த உணவுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை அனர்த்த முகாமைத்துவ பிரிவு மேற்கொண்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-250-281)

# மாங்குளம் - கற்குவாறி வீதி ஊடாக மழைகாலங்களில் பயணிக்க முடியவில்லை

## பாதிக்கப்பட்ட மக்கள் விசனம்



(பனிக்கன்குளம்)

மழை காலங்களில் மாங்குளம் கற்குவாறி வீதியூடாக போக்குவரத்து செய்ய முடியாத நிலை காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அண்மைய நாட்களாக பெய்த அடை மழை காரணமாக வீதிக்கு குறுக்காக நீர் பாய்வதனால் இவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

தமது அன்றாட தேவைகளை நிறைவு செய்வதற்கு மாங்குளம் நகரத்தையே நம்பி வாழும் இம்மக்கள் தற்போது வீதிக்குக் குறுக்காக நீர் பாய்வதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதோடு இந்த இட மத்தியிலுள்ள வீடுகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. ஒவ்வொரு மழைக்கும் தாம் இவ்வாறு துன்பப்படுவதாக அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த பாலத்தை உயர்த்தி அமைத்து உரிய வடிகாலமைப்புக்களை செய்து ஒவ்வொரு மழைககும் தாம் பாதிக்கப்படுவதிலிருந்து தம்மை காப்பாற்றுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-281)

# வெளிநாட்டுத் தூதரகங்கள் விழிப்பாக செயற்படுகின்றன

## அமைச்சர் சமரசிங்க சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**இலங்கை தொடர்பில் சர்வதேச சமூகம் கவனம் செலுத்தி வருகின்றது. கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் விழிப்பாகவே இருக்கின்றன. அடுத்து என்ன நடக்கிறது என்பது பற்றி எமக்கு முன்னரே தகவல்கள் கிடைக்கின்றன.**

எனவே, அனைத்து சமூகங்களின் கண்களில் மண்ணைத் தூவி ஏமாற்றிவிடலாம் என எவரும் நினைக்கக்கூடாது என்று அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"2009இல் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்குப் பெரும் ஆதரவு காணப்பட்டது. மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் இலங்கைக்கு சந்தர்ப்பம வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எனினும், போருக்குப் பின்னர் சமாதானத்தை நோக்கிச் செல்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனால் எதிர்ப்பு வலுக்கத் தொடங்கியது. 2012 முதல் 2014 வரை தொடர் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இறுதியில் 12 நாடுகளே இலங்கைக்கு ஆதரவு நல்கின. இந்நிலையிலேயே சர்வதேச உறவு இருந்தது.

எனினும், தற்போது இலங்கைக்கு மற்றுமொரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றும் நாடாக இலங்கை மாறிவருகிறது. சர்வதேச சமூகத்தை ஏமாற்றமுடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# திவ்யப்ரம்மோற்சவம்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான மார்கழி மாத வைகுண்ட ஏகாதசி தின திவ்யப்ரம்மோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை இரதோற்சவம் இடம்பெறவுள்ளது. (இ-5)

# விண்ணப்பித்தோருக்கு இன்று நேர்முகத்தேர்வு

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்கால வேலைவாய்ப்பினை மையமாக கொண்டு முழு நேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது. பின்வரும் கற்கை நெறிகளுக்காக விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத்தேர்வு இன்று 13.12.2015 ஞாயிற்றுக்கிழமை மாவட்ட அலுவலகம், 1 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, யாழ்ப்பாணம் எனும் இடத்தில் காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நடைபெறவுள்ளது. நேர்முகத்தேர்வில் பங்குகொள்ளும் மாணவர்கள் சுயவிபரக் கோவை, தேசிய அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ்கள் என்பன எடுத்துவருவது அவசிய மானதொன்றாகும். இக்கற்கை நெறிகளாவன,

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், கணனி படவ டிவமைப்பாளர், கணனி வன்பொருள் திருத்துநர், காய்ச்சிஇணைப்பவர் வெல்டிங்), இருசக்கர மற்றும் ஆட்டோ திருத்துநர், தொழிற்சாலை மின்னிணைப்பாளர், வீட்டு மின்ணிணைப்பாளர், அழகுக்கலை வல்லுநர், தையல் என்பனவாகும். புதிதாக இணைய விரும் புப வர்களும் தங்களது பதிவுகளை மேற்கொள் ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ


## பதவி வெற்றிடம்

Yarl Beauty Academy நிறுவனத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு தகுதியானோர் நேரில் சமுகமளிக்கவும்.

**தையல் பயிற்சி ஆசிரியர், வெளிக்கள உத்தியோகத்தா, அலுவலக உதவியாளர் மற்றும் சுத்திகரிப்பாளர்**

வயது:-18 வயதிற்கு மேல் பெண் தகைமை:- O/L

காலம்:-16.12.2015 நேரம்:-10.00 am

மிக குறைந்த கட்டணத்தில் ஒரு மாதகால அழகுக்கலை. மூன்று மாதகால டிப்ளோமா அழகுக்கலை. கேக் ஐசிங் மற்றும் தையல் பயிற்சி வகுப்புக்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

**Yarl Beauty Academy**

இல.616 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(வேம்படி சந்தியில் மஞ்சள் கடவையின் முன்)

(சி-2941)

## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் கி.பா:29
உயரம்: 167cm
தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்
தொ.இ: B/2390

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 27செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:ஆயுள்வேத வைத்தியர்
தொ.இ: B/2463

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 31
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: MBBS/வைத்தியர்
தொ.இ: B/2477

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 47செவ் 2 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்A/L/தனியார் தொழில்
தொ.இ: B/2482

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 37
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L/வங்கியாளர்
எதிர்பார்ப்பு:சைவபோசனம்
தொ.இ: G/3536

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 20செவ் 7 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:பட்டதாரி/அரச தொழில்
தொ.இ: G/3553

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 49செவ் 2 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: A/L/அரசதொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/3554

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 13
உயரம்: 5'
தகைமை/தொழில்:BSc/வங்கியாளர்
தொ.இ: G/3565

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:-021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)


# ராசி பலன்

13.12.2015

(கார்த்திகை 27, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.13 மணிவரை,
துதியை பிற்பகல் 4.36 மணிவரை
பூராடம் பின்னிரவு 3.05 மணிவரை
இராகுகாலம் 4.50-6.20 மணிவரை
சுபநேரம் 9.20-10.50 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>மிருகசீரிடம்<br>காலை 8.42 இற்கு<br>மகர-சந் | | |
| சந் | | | குரு |
| சந் புத | சூரி சனி | சுக் | ராகு செவ் |

**மீனம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், நட்பு வட்டம் விரிவடையும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**மேடம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழ்வீர்கள், தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்:** அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம், மனக் குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**மிதுனம்:** சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வரவ்வை விட செலவுகள் அதிகமாகும், போசன சுகக்குறைவுண்டு.

**கும்பம்:** சிறிய வேலையொன்றுக்காக பலமுறை அலைய நேரிடலாம், சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், சயன சுகக் குறைவான நாள்.

**கடகம்:** பக்குவமாக நடந்து பாராட்டு பெறுவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மகரம்:** கொடுக்கல்-வாங்கல்களில் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** போட்டிகள் மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், கௌரவமான நாள்.

**தனுசு:** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயம் உண்டு, தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.

**விருச்சிகம்:** உடன் பிறப்புக்கள் உதவி செய்ய முன்வரலாம், எடுத்த காரியங்களை முடிப்பதில் அக்கறை காட்டுவீர்கள், வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரலாம்.

**துலாம்:** பெற்றோர் வழியில் பிரியம் கூடும், உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கன்னி:** உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழிலை விரிவுபடுத்த முயற்சிகள் எடுப்பீர்கள், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

நிதானம், சகிப்புத் தன்மை, கருணை ஆகியவற்றில் அடங்கியதே விவேகம்.
– ரைதுஸ்திரர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மாற்றுத் தலைமை குறித்து இந்தியாவும் பதறுகிறது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றீடாக புதிய ஒரு கட்சி உருவெடுத்து விடுமோ என்ற ஏக்கம் இந்தியாவையும் தொட்டு விட்டமை தெரிகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை என்பது இந்தியாவின் கட்டுப்பாட்டுடன் இயங்கி வருகின்றமை தெரிந்ததே.

இனப்பிரச்சினைக்கான தீர்வில் இந்தியாவின் பங்களிப்பில்லாமல் எதுவும் செய்ய முடியாதென்ற முடிவில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் மிகவும் உறுதியாக உள்ளார்.

அதாவது, இந்தியாவை மீறி எந்த நாட்டாலும் இலங்கைத் தமிழர்களுக்கு உதவி செய்துவிட முடியாது என்பதில் இரா.சம்பந்தர் கொண்டுள்ள உறுதிப்பாட்டில் நியாயம் இல்லாமலும் இல்லை.

அதற்காக எங்களின் பிரச்சினைக்கான தீர்வு என்பது இந்தியா சொல்வதாகவே இருக்கும் என்ற கருத்தை எச் சந்தர்ப்பத்திலும் ஏற்றுவிட முடியாது.

ஆக, எங்களுக்கான தீர்வு எது என்பதை நாமே தீர்மானித்துக் கொள்ள வேண்டும். இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு இந்தியாவின் உதவியைப் பெற்றுக் கொள்வது பொருத்துடையது.

அதேசமயம் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது நடைமுறைக்குச் சாத்தியமாக அமைவது அவசியம் என்பதையும் எவரும் மறந்துவிடலாகாது.

இந்நிலையில் தமிழர்களின் உரிமை என்ற விடயத்தில் இந்தியாவின் வகிபங்கு தமிழ் மக்களுக்கு சாதகமாக அமையாது என்று வாதிடுவோரும் உளர்.

எதுவாயினும் இந்தியாவின் ஒத்துழைப்புடனும் ஆசியுடனும் இனப்பிரச்சினைக்கான தீர்வை அடைய நினைப்பதே ஒரேவழி என்ற நிலைமை தவிர்க்க முடியாததாகி உள்ளது.

அதற்காக எங்களுக்கு எந்த வகையிலும் உதவாத தீர்வுகளை ஏற்றுக் கொள்ளுவதென்பது, நோய் தீர்க்காத மருந்தை தொடர்ந்து உட்கொள்வதற்கு சமனானதாகும் என்பதையும் கூறித்தானாக வேண்டும் இவை ஒருபுறம் இருக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் ஏற்பட்டுள்ள ஒற்றுமையீனங்கள் உடனடியாக சரிப்படுத்தப்பட வேண்டும் என்பதில் இந்தியா மிகத் தீவிரமாக இருப்பது தெரிகிறது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே. சிங்கா அவர்கள் கடந்த சில தினங்களுக்கு முன்பாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து வடக்கின் முதல்வர் விக்னேஸ்வரன் அவர்களைச் சந்தித்தார்.

இச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமை என்பதை அவர் வலியுறுத்தியிருந்தமை தெரிந்ததே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமை என்பதற்கு ஊடாக வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களையும் கூட்டமைப்பின் தலைமையையும் ஒரு சமரசத்துக்குக் கொண்டு வருவது சிங்காவின் யாழ்ப்பாண விஜயத்துக்கான நோக்கத்தில் ஒன்று எனக் கூறிக் கொள்ளலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் வடக்கின் முதல்வருக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் இருக்கும் போது, இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயம் இந்தியாவின் கட்டுப்பாட்டை மீறி புதியதொரு பரிமாணத்தை பெற்றுக் கொள்ளலாம்.

இத்தகையதொரு சந்தர்ப்பம் 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்துதல் என்ற இந்தியாவின் நினைப்பை பாதிக்கும் என்று இந்திய இராஜதந்திரம் கருதுகின்றது.

இந்நிலையிலேயே இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே.சிங்கா வடக்கின் முதல்வரைச் சந்தித்து கூட்டமைப்புக்குள் ஒற்றுமையை ஏற்படுத்த முற்பட்டார் என்று கூறிக்கொள்ளலாம்.

# 5000 ரூபாய் புகைப்பரிசோதனை கட்டணம் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது

தேசிய அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள 2016ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தில் தனியார் பேருந்துகளுக்கு விதிக்கப்பட்டிருந்த 5000 ரூபாய் புகைப்பரிசோதனை கட்டணம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் வாகனங்களுக்கான புகைப் பரிசோதனைக்கான கட்டணம் அதிகரிக்கப்பட்டது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்து பல்வேறு போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

அந்தவகையில் கடந்த காலங்களில் மோட்டார் சைக்கிள் உட்பட ஆட்டோக்களுக்கான இக்கட்டண அதிகரிப்பு நீக்கப்பட்டதோடு தனியார் பேருந்துகளுக்கு மட்டுமே இந்த கட்டண அதிகரிப்பு அமுலில் இருக்கும் என நிதியமைச்சால் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான நிலையில் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பேருந்து உரிமையாளர் சங்கங்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவிருந்தன. நேற்று முன்தினம் இது தொடர்பில் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்திற்கும் நிதியமைச்சர் ரவி கருணா நாயக்கவுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. அந்தவகையில் தனியார் பேருந்துக்களுக்கான அதிகரிக்கப்பட்டுள்ள 5000 ரூபாய் கட்டணம் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவது குறித்து பேச்சுவார்த்தையின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## டெங்கு நோயால் 45 பேர் மரணம்

இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் டெங்கு நோய் காரணமாக 45 பேர் மரணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவின் வைத்திய நிபுணர் ஹசித திசேரா தெரிவித்துள்ளார். இதேவேளை நாடளாவிய ரீதியில் 26,500 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதில் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 8,600 பேர் டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-12)

## ஒன்றுகூடல்

மலேசிய-யாழ். எழுத்தாளரின் ஒன்றுகூடல் நிகழ்வானது நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் பிற்பகல் 2.30மணிக்கு பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. (இ-5)

## பற்றரிகளை கொள்ளையடித்தகுழு பாணந்துறையில் மடக்கிப் பிடிப்பு

சொகுசு வாகனங்களில் பயணங்களை மேற்கொண்டு வாகனங்களின் பற்றரிகளை கொள்ளையடித்து வருகின்ற கொள்ளைக் கும்பலை சேர்ந்த இருவர் பாணந்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதுடன் கொள்ளையடிக்கப்பட்ட எழுபது பற்றரிகள் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

இக் கொள்ளைச் சம்பவங்கள் குறிப்பாக கொழும்பை அண்டிய நகரங்களில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்தன.

இந் நிலையிலே கொழும்பை அண்டிய 15 நகரங்களில் கொள்ளையடிக்கப்பட்ட மேற்படி 70 பற்றரிகள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் 20-30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் கைப்பற்றப்பட்ட அப்பற்றரிகள் 20 இலட்சம் ரூபாய் பெறுமதியுடையது எனவும் பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பாணந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

## ஆலோசனைக் கூட்டம்

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் எதிர்காலத்திட்டங்கள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் இல.774, வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள யாழ்.மாவட்டத்திற்கான கிளைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. (இ-5)

# பரிசேயர்களைப் போல பயந்து நடுங்காமல் பாதையைச் செம்மைப்படுத்துவோம் வாரீர்!

திருவருகைக் காலத்தின் மூன்றாம் வார பைபிள் பகுதி திருமுழுக்கு யோவானின் இறையாட்சிக் கனவைக் கோடிட்டுக்காட்டுகிறது. மனந்திரும்புங்கள் கடவுளின் அரசு நெருங்கியுள்ளது. இயேசு வருகிறார். ஆயத்தமாக இருங்கள் சந்திக்கத் தயாராகுங்கள் என்று மக்களை திருமுழுக்கு யோவான் தயார்ப்படுத்தியதை நாம் கடந்த வாரம் பார்த்தோம். இயேசுவின் பிறப்பை முன்னறிவித்த இறைவாக்கினர்களில் ஏசாயாவும் திருமுழுக்கு யோவானும் முதன்மையானவர்கள். இவர்களைப் பற்றி நோக்கினால்: ஏசாயா கி.மு. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்

## பரமபிதா காட்டிய பாதை

எருசலேம் நகரில் வாழ்ந்தவர். கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டு, கற்பிக்கப்பட்டு யூதமக்களிடம் அனுப்பப்பட்டவர். இவர் வாழ்ந்த காலத்தில் யூதேயா தேசம் பக்கத்து நாடான அசீரியாவின் அச்சுறுத்தலுக்கும் படையெடுப்புக்கும் ஆளாகவிருந்தது. யூதேயாவுக்கு வரவிருந்த அழிவுக்குக் காரணம், அசீரியாவின் பலம்பொருந்திய இராணுவம் அல்ல. யூதேயாவின் குடிமக்கள் கடவுள் மீது நம்பிக்கையிழந்து அவருக்குப் பணியாது செய்த பாவங்களே என்று ஏசாயா தன் எழுச்சியூட்டும் சொற்களால் யூதர்களை மனந்திரும்ப அழைத்தார். யூதர்கள் நேர்மையோடும் நீதியோடும் வாழ முன்வராவிட்டால் அழிவுகள் காத்திருக்கின்றன என எச்சரித்தார். அவரது வாழ்நாளில் யூதர்கள் மனந்திரும்பவில்லை. எனினும் தாவீதின் வழித்தோன்றலில் வரவிருக்கும் ஓர் ஒப்பற்ற அரசர் மூலம், யூதர்கள் மட்டுமலல அனைத்துலகுக்கும் பொற்காலம் வரும் என ஏசாயா முன்னறிவித்தார்.

இயேசு இந்த பாருலகில் பிறந்துவிட்டார். அவரே இறைப்பணியைத் தொடங்கப்போகிறார். உலகின் ஒளியாகிய மெசயா அவரே என்பதையும் தெளிவாக போதித்தவர் இயேசுவின் சமகால இறைவாக்கினரான திருமுழுக்கு யோவானே. ஜோர்தான் நதியில் இவரிடம் தான் இயேசு திருமுழுக்குப் பெற்றுக்கொண்டார். "நீர் யார்? என்று திருமுழுக்கு யோவானிடம் கேட்டதற்கு, அவர் ஆண்டவருக்காக வழியைச் செம்மையாக்குங்கள் எனப் பாலைநிலத்தில் குரல் ஒன்று கேட்கிறது என்று இறைவாக்கினர் ஏசாயா உரைத்தது என்னைப் பற்றியே என்றார். நான் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் அறியாத ஒருவர் உங்களிடையே நிற்கிறார். அவர் எனக்குப்பின் வருபவர். அவருடைய மிதியடிகளின் வாரை அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதியில்லை" என்றார்.

இவ்வாறு தீர்க்கமாக திருமுழுக்கு யோவான் மூலம் மனுமகன்-மீட்பர் வருகையை உறுதிப்படுத்தியும் யூதர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ள மறுத்து ஆயத்தப்படுத்தியவரை பரிசேயர்கள், சோதிக்க தந்திரோபாயம் செய்கின்றனர்: திருமுழுக்கு யோவானை சோதிக்க யூத மதத்தின் குருக்களையும், லேவியர்களையும் அவரிடம் அனுப்பினார். இதே பரிசேயர்கள்தான், யூதமதப் பரிபாலனத்தை நடத்தும் யூத தலைமைச் சங்கத்தையும் தமது கையில் வைத்திருந்தவர்கள். திருமுழுக்கு யோவானை அவர்கள் பரிசோதிக்கக் காரணம். திருமுழுக்கு யோவானின் தந்தையான செக்கரியா ஒரு யூத குரு. யூத மதத்தில், குருத்துவம் என்பது வழித்தோன்றல் அடிப்படையில் தரப்படுவது. ஏரோனின் வழித்தோன்றலில் வராத யாரும் குருத்துவம் பெற முடியாது.

அதிகாரவர்க்கத்தினரின் பார்வையில், திருமுழுக்கு யோவான் ஒரு குரு. ஆனால் வழக்கமான யூதகுருவைப் போல யோவான் நடந்துகொள்ளவில்லை. அவர் பாலைநிலத்துக்குச் சென்று எளிமையாக வாழ்கிறார். அதிகாரவர்க்கத்தையும் மதவாதிகளையும் கடுமையாக எச்சரிக்கிறார்.



எனவே பரிசேயர்களுக்கு இவரது புதுமை கலக்கத்தைக் கொடுக்கிறது. ஏசாயா முன்னுரைத்த மெசியா இவர்தானோ என்று அஞ்சுகிறார்கள். எனவே யோவானைச் சோதனை செய்து உண்மையை அறிந்து கொள்ளத் துடித்தார்கள். உண்மையாகவே மெசயா வந்துவிட்டால் தங்கள் முகத்திரை கிழிந்து விடுமே என்று இறைவாக்கினரென திருமுழுக்கு யோவானையே சோதிக்கிறார்கள்.

ஆனால் பரிசேயர்களுக்கு சோதனையான காலம் பிறந்துவிடுகிறது. ஜோர்தான் ஆற்றருகே திருமுழுக்கு யோவான் நின்றுகொண்டிருக்கிறார்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

அவருடைய குரல்கணீரென ஒலிக்கிறது. மக்கள் மனம் மாறி, கடவுளிடம் திரும்பாவிட்டால் அவர்களுக்கு அழிவு வந்தே தீரும் என அச்சுறுத்தும் மொழியில் எச்சரிக்கிறார். மக்கள் பாவ வாழ்க்கையைத் துறந்துவிட்டு மனம் மாறிக் கடவுளிடம் செல்ல வேண்டும் எனறு உரக்கச் சொன்ன திருமுழுக்கு யோவர்ன் தம்மைவிடவும் பெரியவர் ஒருவர் வருகிறார் எனத் தீர்க்கமாக அறிவித்தார். 'நீங்கள் அறியாத ஒருவர் உங்களிடையே நிற்கிறார்" என்று யோவான் இயேசுவைப் பற்றிக் கூறுகிறார். முன்னறிவிக்கப்பட்ட இயேசு மீட்பர்-மன்னன் வருகிறார். எனவே திருமுழுக்கு யோவானின் போதனைகள் இன்று நமக்கே சொல்லப்பட்டது போல் தெரிகிறது. பரிசேயர்களைப்போல் பயந்து நடுங்காமல் பாதையைச் செம்மைப்படுத்துவோம் விரைந்து செல்வோம் வாரீர்.


# இலங்கைக்கு எதிரான டெஸ்ட்; பலமான நிலையில் நியூசிலாந்து



நியூசிலாந்துக்கு சுற் றுப் பயணம் செய்து இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வரும் இலங்கை அணிக்கும் நியூ சிலாந்து அணிக்கு மிடையே யான முதலாவது டெஸ்ட் போட்டியில் நேற்றைய மூன் றாம் நாள் ஆட்டமுடிவில் தமது இரண்டாவது இன் னிங்சில் ஆடி வரும் நியூ சிலாந்து அணியானது ஒரு விக்கெட் இழப்புக்கு 171 ஓட் டங்களைப் பெற்று மொத்த மாக இலங்கையணியை விட 308 ஓட்டங்கள் முன் னிலை பெற்றுள்ளது.

தற்போது களத்தில் டொம் லதாம் 72 ஓட்டங்களுடனும் கேன் வில்லியம்ஸன் 48 ஓட்டங்களுடனும் ஆட்ட மிழக் காமல் உள்ளனர். முன்ன தாக, மார்ட்டின் கப்தில் 46 ஓட்டங்களுடன் ஆட்டமி ழந் தார். வீழ்த்தப்பட்ட விக்கெட்டை ரங்கன ஹேரத் வீழ்த்தியி ருந்தார்.

முன்னதாக இலங்கை யணி தமது முதலாவது இன் னிங்சில் 294 ஓட்டங்களு க்கு சகல விக்கெட்டுகளை யும் இழந்தது. துடுப்பாட்டத் தில் இலங்கையணி சார்பாக திமுத் கருணாரட்ன 84 ஓட் டங்களையும் தினேஷ் சந் திமால் 83 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பர்க டிம் சௌத்தி, நீல் வாக்னர் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுகளையும் ட்ரெண்ட் போல்ட், மிட்செல் சந்தர் தலா இரண்டு விக் கெட்டினையும் கைப்பற் றினர்.

முன்னதாக, நியூசிலாந்து அணியானது தமது முதலா வது இன்னிங்சில் 431 ஓட்ட ங்களுக்கு சகல விக்கெட்டுக் களையும் இழந்திருந்தது. அவ்வணி, சார்பாக துடுப்பாட் டத்தில், மார்ட்டின் கப்தில் 156 ஓட்டங்களையும் பிரண் டன் மக்கலம் 75 ஓட்டங்க ளையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை யணி சார்பாக நுவான் பிரதீப் நான்கு விக்கெட்டுகளையும் துஷ்மந்த சமீர இரண்டு விக்கெட்டுக்களையும் அஞ் சலோ மத்தியூஸ், மிலிந்த சிரிவர்த்தன ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினை யும் வீழ்த்தினர். (க)

# மேற்கிந்திய தீவுகளை வீழ்த்தி ஆஸி. இன்னிங்ஸ் வெற்றி





அவுஸ்திரேலிய, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியில் அவுஸ்திரேலிய அணி ஓர் இனி ங்ஸ் மற்றும் 212 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது. ஹோ பார்ட்டில் இடம்பெற்றுவந்த இப்போட் டியில் 6 விக்கெட்டுகளை இழந்து 207 ஓட்டங்களுடன் நேற்றைய நாளை மேற்கிந்தியத் தீவுகள் ஆரம்பித்தது. ஆனால் தொடர்ச்சி யாக விக்கெட்டுகளை இழந்த அவ்வணி சகல விக்கெட்டுகளை யும் இழந்து 223 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. துடுப்பாட்டத் தில் டெரன் பிராவோ 108 ஓட்டங்க ளையும் கேமர் றோச் 31 ஓட்டங்க ளையும் பெற்றனர். பந்துவீச்சில், ஜொஷ் ஹேஸல்வூட் 4 விக்கெட் டுகளையும் நேதன் லையன் 3 விக்கெட்டுகளையும் பீற்றர் சிடில் 2 வக்கெட்டுகளையும் கைப்பற் றினார்.

பொலோ ஒன் முறையில் துடுப்பெ டுத்தாடுமாறு பணிக்கப்பட்ட மேற்கிந் தியத் தீவுகள் அணி, முன்னரை விட மோசமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியது. 5 விக்கெட்டு களை இழந்து 30 ஓட்டங்களுடன் தடுமாறிய அவ்வணி இறுதியில் 148 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட் டுகளையும் இழந்து ஓர் இனிங்ஸ் மற்றும் 212 ஓட்டங்களால் படு தோல்வியடைந்தது. துடுப்பாட்ட த்தில் தனித்து நின்று போராடிய கிறெய்க் பிறெத்வெய்ட் 94 ஓட்டங் களைப் பெற்றார். வேறு எந்த வீரரும் 20 ஓட்டங்களைப் பெற்றிருக்க வில்லை. பந்துவீச்சில் ஜேம்ஸ் பற்றின்சன் 5 விக்கெட்டுகளையும் ஜொஷ் ஹேஸல்வூட் 3 விக்கெட்டு களையும் மிற்சல் மார்ஷ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத் தாடியிருந்த அவுஸ்திரேலிய அணி அடம் வோஜஸின் ஆட்டமிழக்காத 269 ஓட்டங்கள் ஷோன் மார்ஷின் 182 ஓட்டங்கள் டேவிட் வோணரின் 64 ஓட்டங்கள் ஜோ பேர்ண்ஸின் 33 ஓட்டங்களின் துணையோடு 4 விக்கெட்டுகளை இழந்து 583 ஓட்டங்களைக் குவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டியின் நாயகனாக அவுஸ்திரேலியாவின் அடம் வோஜஸ் தெரிவானார். (க)

## கராத்தே சுற்றுப்போட்டி; நவீல்ட் மாணவர்கள் வெற்றி

இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் கடந்த 6ஆம் திகதியன்று கராத்தே சுற்றுப்போட்டி OLR அடைக்கல அன்னை ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. இதில் SSKA கராத்தே கழகத்தைச் சேர்ந்த கைதடி நவீல்ட் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் வெற்றி பெற்றனர். அவர்கள் விப்ரம் வருமாறு,

தனிப்போட்டி

11 வயதுப் பிரிவு G.நிருபன்- தங்கப்பதக்கம், 12 வயதுப் பிரிவு S.மதிவதனன்- தங்கப்பதக்கம், 12 வயதுப் பிரிவு S.அனுஷா- தங்கப்பதக்கம், 13 வயதுப்பிரிவு J.மிதுசன்- வெண்கலப்பதக்கம், 13 வயதுப்பிரிவு J.ஜிலோர்த்தனா- தங்கப்பதக்கம், 13 வயதுப்பிரிவு S.லக்சனா-தங்கப்பதக்கம், 14 வயதுப்பிரிவு Y.அஜந்தினி- தங்கப்பதக்கம், 15 வயதுப்பிரிவு J.பிரியதர்சன்-வெள்ளிப்பதக்கம், 16 வயதுப் பிரிவு K.ஜதுஷா- தங்கப்பதக்கம், 17 வயதுப்பிரிவு K.கஜனானி- தங்கப்பதக்கம், 18 வயதுப்பிரிவு A. அத்தீப்-வெள்ளிப்பதக்கம்

குழுப்போட்டி

K.ஜதுஷா, Y.அஜந்தினி, K.கஜானி- தங்கப்பதக்கம், J.பிரியதர்சன் வெண்கலப்பதக்கம். இவர்களுக்கான பயிற்சியை சென்சே S.விஜயராஜ் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## மாவீரராக...

இவ்வாறு தெரிவித்தார்.

மல்லாவி யோகபுரத்தில் நாம் வசித்து வந்த போது கடந்த 2000 ஆம் ஆண்டு எனது மகனான தவராஜா யதீஸ்வரனை புலிகள் போருக்காகக் கூட்டிச் சென்றனர். பின்னர் கடந்த 2002 ஆம ஆண்டு அவர் மாவீரராக இறந்து விட்டதாக தெரிவித்தனர். நாம் செட்டிக்குளம் முகாமில் இருக்கும்போது கடந்த 2009ஆம் ஆண்டு எனது மகன் கொட்டடி இராணுவமுகாமில் இருப்பதாக எனது உறவினர்கள் தெரிவித்தனர். அவர் புலிகளின் முகாமில் இருக்கும் போது இராணுவத்தால் பிடிக்கப்பட்டதாகவும் தற்போது இராணுவத்தில் இருப்பதாகவும் தன்னால் வரமுடியவில்லை எனவும் உறவினர்களுக்கு தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் நாம் வந்து தேடிய போது அவர் அங்கு இருக்கவில்லை. எனவேநாம் மனித உரிமை ஆணைக்குழுவில் பதிவு செய்தோம். போரினால் பல இழப்புகளை எனது குடும்பம் எதிர்கொண்டுள்ளது. யுத்தத்தில் எனது 13 வயது மகனையும் இழந்து விட்டேன். எனவே எனது மகனை கண்டு பிடித்து என்னிடம் தாருங்கள் என அவர் ஆணைக்குழுவிடம் தெரிவித்துள்ளார்.(செ-9)

## 'கத்தினால்...

கையில், எனது வீடு கொழும்புத்துறை எழுலூர். எனது கணவரின் பெயர் பாலையா பாலச்சந்திரன். எனது கணவருக்கு 41 வயது இருக்கும் போது, இராணுவத்தினர் 2007 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 01 ஆம் திகதி வீட்டிற்கு வந்து கடத்திச் சென்றார்கள்.

அவர் ஒரு சைக்கிள் மெக்கானிக். நள்ளிரவு 12.00 மணியளவில் இராணுவத்தினர 4 பேர் சிவில் உடையில் வெள்ளை வானில் துப்பாக்கி சகிதம் வந்து, வீட்டில் இருந்த எங்கட கண்களுக்கு போக்கஸ் லைட் அடித்து விட்டு, கடத்திக்கொண்டு போனவர்கள். இராணுவத்தினர் எங்கட கண்களுக்கு போக்கஸ் லைட் அடித்ததும், அவர்களின் முகம் எங்களுக்கு தெரியவில்லை.

நாங்கள் கத்தி குளறினாங்கள். அப்போது எனது மகளின் நெஞ்சில் துப்பாக்கி வைத்து விட்டு கத்த கூடாது என்று அச்சுறுத்தினார்கள். வீட்டிற்குள்ளே 4 பேர் வந்தார்கள். வெளியில் நிறைய பேர் இருந்தார்கள். இராணுவத்தினர் முதல் நாள் எனது கணவரை யாரோ தேடி வந்தவர்கள் என்று வீட்டிற்கு வந்தார்கள். பின்னர், யாரோடைய வீட்டைக் காட்ட சொல்லி வீட்டிற்கு வந்து எங்கட வீடு எல்லாம் சுற்றி பார்த்தவர்கள். வீடு தெரியாது என எனது கணவர் சொல்லும் போது கூட வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றார்கள்.

எனக்கு 6 பிள்ளைகள். எங்களுக்கு உதவிகள் இல்லாததால் பிள்ளையை படிப்பிக்க முடியாமல் போய் விட்டது. இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் போதே எனது கணவரை இராணுவத்தினர் கடத்திச் சென்றார்கள். இக்கடத்தல் குறித்து முதலில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துவிட்டு, பின்னர் மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் ஐ.சி.ஆர்.சியிடம் முறைப்பாடு பதிவு செய்தேன்.

ஐ.சி.ஆர்.சி. நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் வந்து இராணுவத்தினரிடம் விசாரணை மேற்கொண்டபோது அப்போது தாங்கள் பிடிக்கவில்லை என இராணுவத்தினர் சொல்லிவிட்டார்கள். எங்கட குடும்ப வாழ்வாதாரத்தை பார்க்க கூட முடியாமல் இருக்கின்றோம். எனது கணவரை கண்டு பிடித்து தருமாறு கேட்டுக்கொள்கின்றேன் என அம் மனைவி தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.(செ-4)

## கைதிகள் இருவர்...

அம் மகஜரில், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விடயத்தில் புதிய நல்லாட்சி அரசாங்கம் நெகிழ்வுப் போக்கினை கடைப்பிடித்து வருவதாக தெரிவித்து வருகின்ற இச்சந்தர்ப்பத்தில் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் எமக்கு நடந்துவரும் அநீதியான செயற்பாடுகள் கவலையளிக்கிறது.

எனவே, சிறுபான்மைச் சமூகத்தின் நம்பிக்கைக்கு பாத்திரமான தங்களின் தலைமையிலான நல்லாட்சி தேசிய அரசாங்கத்தில் எனக்கு நியாயமானதொரு தீர்வு கிட்டுமென எதிர்பார்க்கின்றோம். அந்தவகையில் எமக்கு ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையை வெளிக்கொணர்ந்து தீர்வை எட்டுவதற்காக 5ஆவது நாளாக தொடர் உணவுதவிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம். எமது இந்த அகிம்சை அறிவிப்பு எவரையும் சங்கட நிலைக்கு ஆளாக்குவதோ அச்சுறுத்துவதோ நோக்கமல்ல.

இருப்பினும் எமக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய அசாதாரண நிலை பிறிதொருவருக்கும் தொடராது இருக்கவும் இந்த விடயத்தை வெளிக்கொண்டு வரவும் சிறைக்குள் இருக்கும் எமது சிற்றறிவுக்கு வேறு தெரிவு இல்லாமையால் இக் கவலைக்குரிய தீர்மானத்தை எடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

ஆகவே, எமது இந்த கவனயீர்ப்பினை எமது வேண்டுகோளாக ஏற்று தகுந்த நிவாரணத்தைப் பெற்றுத்தருமாறு தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம் என அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(செ-9)

## அரசாங்கமும்...

ஆனாலும் எங்கள் பிள்ளைகளை இது வரை எம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை என தந்தையொருவர் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் சாட்சியம் பதிவு செய்துள்ளார்.

எ-4 என இலக்கமிடப்பட்ட அந்த செய்தி நேற்று வலம்புரி நாளிதழின் முதலாவது பக்கத்தில் **2006இல் கடத்தப்பட்ட மகன் 2013இல் கொழும்பில் நின்றார்.** இப்போது எங்கே என தந்தை கேள்வி என தலைப்பிட்டு செய்தி வெளியாகி இருந்தது. இந்த செய்தியை ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் காட்டிய அந்த தந்தை இவ்வாறு தான் எங்களது மகனும் எங்கேயோ உள்ளனர்.

என கூறி பத்திரிகை செய்தியினையும் காட்டியுள்ளார். இதன் பின்னர் மேற்படி செய்தி விசாரணை குழுவிற்கு தலைமை தாங்கியவருக்கு முழுமையாக மொழிபெயர்ப்பு செய்து வாசிக்கப்பட்டது. இதன் பின்பு விசாரணை தொடர்ந்தும் நடைபெற்றது. இதன்போது தமது மகன் காணாமல் போய் இத்தனை வருடங்கள் கழிந்து விட்ட நிலையிலும் எனது மகன் உயிருடன்தான் உள்ளார் என நான் நம்புகின்றேன்.

எங்களது மகன் எமக்கு வேண்டும். நாங்கள் எனது மகனையே எதிர்பார்க்கின்றோம். இங்கு விசாரணை முன்னெடுக்கப் படுகின்றது. ஆனால் எங்கோ ஓர் இடத்தில் இராணுவமும் ஒட்டுக்குழுக்களும் எம் பிள்ளைகளை பிடித்து வைத்துள்ளன. அதனை முதலில் விசாரணை செய்யுங்கள் என்றார் அவர்.

கடத்தப்பட்டு ஏழு வருடங்களின் பின்னர் (2013இல்) ஒருவரை காண முடியுமாயின் இப்போது அவர் உயிருடன் உள்ளார் என ஏன் நம்ப முடியாது. இந்த செய்தியில் (வலம்புரி பத்திரிகை) அவ்வாறு தானே குறிப்பிடப்பட்டு உள்ளது. இதனை முதலில் பாருங்கள் என ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் அந்த தந்தை கூறினார். (செ-4)

## அரசியல் கைதியாக...

நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

ஆசீர்வாதம் அன்ரன் (கடத்தப்படும் போது வயது 31) என்ற எனது அப்பா குருநகரில் அமைந்துள்ள எமது வீட்டிற்கு கடற்தொழிலுக்காக 1993ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏழாம் திகதியன்று மண்டைதீவிற்கு சென்றிருந்தார். மூன்று பேருடன் சென்ற அப்பா கடலில் வள்ளத்தில் நிற்கும் போது மண்டைதீவு கடற்படை அவர்களுடைய வள்ளம் நோக்கி சரமாரியாக சுட்டுள்ளது.

இதில் வள்ளத்தில் இருந்த ஒருவருக்கு காலில் காயம் ஏற்பட அவர் கடலுக்குள் வீழ்ந்து விட்டார். ஏனைய இருவரையும் (தந்தையார் உட்பட) பிடித்த கடற்படை அவர்களை கொண்டு சென்று, அதில் மற்றொருவரை விடுவித்து விட்டது. ஆனால் அப்பா எங்கு சென்றார்? என கூறவே இல்லை.

பின்பு 2003ஆம் ஆண்டு கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகையில் சிறைச்சாலை ஒன்றில் அரசியல் கைதிகள் உண்ணாவிரத போராட்டம் முன்னெடுத்ததாக குறிப்பிடப்பட்டு, செய்தியொன்று வெளியாகியிருந்தது, அதில் ஒன்பது பேரின் படங்கள் போடப்பட்டிருந்தது. என்னுடைய அப்பாவும் அந்த படத்தில் இருந்தார்.

எங்கள் தந்தையை அப்போது தேடி செல்ல முடியாத நிலை இங்கு காணப்பட்டிருந்தது. ஏ9 பாதையும் மூடப்பட்டிருந்தது. இதற்கு முன்னர் 2002ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தின் 512ஆவது படைப்பிரிவை சேர்ந்த இராணுவத்தினர் மோட்டார் சைக்கிளில் எமது வீட்டிற்கு வந்து அப்பா சிறையிலிருந்து தப்பியோடி விட்டதாக கூறினார்கள்.

இதன் பின்னர் சிறையிலிருந்து வந்த ஐந்து சந்தியினை சேர்ந்த ஒருவர் எனது அப்பாவை முகாம் ஒன்றிற்குள் கண்டதாக எம்மிடம் கூறியிருந்தார். பின்பு ஒருமுறை கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றிலும் அப்பா சிறையில் உள்ளது போன்ற படம் செய்தியாக பிரசுரமாகியிருந்ததாகவும் அவருடைய மகன் அன்ரன் சுதர்சன் தெரிவித்துள்ளார். (செ-4)

## பெரு மழை...

ள்ளது.

கிழக்கு பசிபிக் கடற்பரப்பில் ஏற்படும் மாற்றங்களுக்கு எல்-நினோ என பெயரிடப்பட்டுள்ளது. அதன்படி 2015 மற்றும் 2016ல் எல்-நினோவின் பாதிப்பு மத்திய பகுதி நாடுகளில் தீவிரமாக இருக்கும்.

இலங்கை, கம்போடியா, மத்திய மற்றும் தெற்கு இந்தியா, கிழக்கு இந்தோனேசியா, மத்திய மற்றும் தெற்கு பிலிப்பைன்ஸ், மத்திய மற்றும் வடகிழக்கு தாய்லாந்து பகுதிகளில் பாதிப்பு ஏற்படலாம். தென்கிழக்கு ஆசிய நாடுகள் குறிப்பாக இந்தியா மற்றும் இலங்கை இதனால் அதிக பாதிப்பை சந்திக்கும். இங்கு பெருமழையினால் அதிகப்படியான வெள்ளம் ஏற்படும் ஆபத்து உள்ளது.

பசிபிக் தீவுகளில் உள்ள பபுவா நியூகினியா, திமோர் , வனாட்டு போன்ற நாடுகளில வரட்சியினால் தண்ணீர் பஞ்சம், உணவு தட்டுப்பாடு ஏற்படும். 1998ஆம் ஆண்டுக்கு பிறகு பெய்யாத வகையில், அதிகளவு மழை 2016ஆம் ஆண்டு பெப்ரவரி வரை நீடிக்கலாம் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-12)

## மகனை கடத்திய...

க்குழுவிற்கு சாட்சியமளிப்பதற்கு வந்திருந்த போதே அவர் மேற்கண்ட தகவலை கூறியுள்ளார்.

எங்களது வீட்டிற்கு சமாதான காலப் பகுதியில் வந்த இராணுவத்தினரால் எனது மகன் கடத்தப்பட்டார். முகமாலையில் இடம்பெயர்ந்திருந்த எமக்கு, வலி வடக்கில் காணி உள்ளது. அது இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஆகையினால் எமது இடத்தில் நடைபெற்ற காணி விடுவிப்பு நிகழ்விற்கு எனது கணவரும் நானும் சென்றிருந்தோம். அங்கு ஜனாதிபதி மைத்திரிபாலாவின் பாதுகாப்பு பிரிவினருடன் எங்களது பிள்ளையை கடத்தியவர்களில் ஒருவரை எனது கணவர் கண்டார். பின்பு அங்கிருந்து நாம் விலகி சென்றுவிட்டோம். அந்த இராணுவ சிப்பாய் மைத்திரியின் பாதுகாப்பு பிரிவில் ஒருவராகவும் இருக்கலாம் எனவும் அந்த தாய் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

மேலும் எனது மகன் கடத்தப்படும் போது தமிழீழ விடுதலைப்புலிகளிற்கு உதவி செய்தார் என்ற குற்றச்சாட்டிலேயே கைது செய்ததாகவும். கடத்தி சென்ற இராணுவத்தினரை பல தடவைகள் வன்னியில் கண்டதாகவும் அவர்களில் ஒருவரையே ஜனாதிபதியின் நிகழ்வில் கண்டதாக அந்த தாய் கூறினார்.(செ-4)

## முறைப்பாடுகளை...

290 பேர் தமது முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளனர். அத்துடன் இதுவரை முறைபபாடுகளை பதிவு செய்யாதவர்களும் புதிதாக தமது முறைப்பாடுகளைபதிவு செய்து கொள்ள முடியும். புதிதாக 50 முறைப்பாடுகள் இதன் போது பதிவு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை 14ஆம் திகதி பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவை சேந்தவர்களுக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்திலும், நாளை மறுதினம் 15ஆம் திகதி சண்டிலிப்பாய் மற்றும் சங்கானை பிரதேச செயலர் பிரிவை சேர்ந்தவர்களுக்கு சங்கானை பிரதேச செயலகத்திலும், 16ஆம் திகதி உடுவில் மற்றும் தெல்லிப்பழை பிரிவை சேர்ந்தவர்களுக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகத்திலும் நடைபெறவுள்ளன.

13,14,15ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள விசாரணைகள் காலை 8.30 மணி தொடக்கம் 5.30 மணிவரையும், 16 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.(செ-9)

## தவறிழைத்தவர்கள்...

யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்று வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இரண்டாம் நாள் அமர்வு நேற்று நடைபெற்றது. இதன் போது விசாரணைகளின் முடிவினையடுத்து ஊடகவியலாளர்களினால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தளபதிகளான நடேசன் மற்றும் புலித்தேவன் உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் யுத்தத்தின் முடிவில் சரணடைந்திருந்தனர். இவர்களில் பலர் இலங்கை இராணுவத்தினால் சுட்டுக்கொல்லப்பட்டதாக சனல் 4 ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது. எனினும் இதில் நாம் தவறிழைக்கவில்லை என கூறிவரும் இலங்கை அரசு சனல் 4 காணொளியையும் நிராகரித்திருந்தது.

இது தொடர்பில் பரணகம மேலும் பதிலளிக்கையில், சனல் 4 காணொளியை பொய் என்றும் கூறவில்லை. உண்மை என்றும் கூறவில்லை. நன்கு ஆராயப்படவேண்டும் என்றே கூறி வருகின்றோம். வெள்ளைக் கொடி விவகாரம் குறித்து மக்களிடமிருந்து முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்று வருகின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை ஆணைக் குழுவினாலும், எல்.எல்.ஆர்.சினாலும் இந்த வெள்ளைக்கொடி விவகாரம் குறித்து தகவல்கள் குறிப்பிடப்பட்டு உள்ளது. அவற்றின் பரிந்துரைகளின் அடிப்படையில் நாம் நடவடிக்கை எடுக்கவுள்ளோம். இதில் சம்பந்தப்பட்டவர்களின் பெயர் விபரங்களை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தும் உள்ளோம்.

இரண்டு தரப்பு மீதும் தவறு உள்ளது. அவை விசாரணை செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். எனினும் நீதிமன்றம் போல் குற்றவியல் விசாரணையாக இதனை முன்னெடுக்க முடியாது. பரஸ்பரம் பேசித்தான் நடவடிக்கை எடுக்க முடியும் என பதிலளித்தார்.

அவ்வாறாயின் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களில் பலர் இறுதிப்போரில் கொல்லப்பட்டு விட்டனர். எஞ்சிய ஏனையோரும் ஏற்கெனவே சிறைகளில் அடைக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டு விட்டனர். ஆகையால் எதிர்த்தரப்பினை தானே நீங்கள் அதிகளவு கூடிய கவனம் செலுத்த வேண்டும். இதை ஆணைக்குழு முன்னெடுக்குமா? என கேட்டபோது, இது அரசியல் பிரச்சினை நாங்கள் மனிதாபிமானம் பற்றியே பேச முடியும் என்றார் அவர்.

மக்களால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் மற்றும் சாட்சியங்கள் தொடர்பில் உங்களால் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள என்ன என்று கேட்டபோது, நாம் தற்போது மக்களின் சாட்சியங்களை பதிவு செய்து வருகின்றோம். இதன் பின்னர் விசாரணைக் குழு அறிக்கை சமர்ப்பிக்கும் அந்த அறிக்கையின்படி நடவடிக்கை தொடரும் என்றார்.

இலங்கை இராணுவம் மற்றும் ஒட்டுக் குழுக்களில் உள்ள தனிமனிதர்கள், வதை முகாம்கள் தொடர்பில் மக்கள் நேரடியாகவே குற்றம் சாட்டியுள்ளனர். இது தொடர்பில் உங்களது அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என கேட்டபோது, தனிமனிதர்கள் சிலர் விரைவில் தண்டனைக்குட்படுத்தப்படுவர் என்ற தகவலை வெளியிட்டிருந்தார். (செ-4)

## விடுதலைப்புலிகளும்...

ளின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார். குறித்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

ஆணைக்குழு அமர்வுகளில் சாட்சியமளித்தவர்கள் இராணுவத்தினர் மீதும், ஆயுதக் குழுக்கள் மீதும் குற்றஞ்சாட்டியிருக்கின்றார்கள். இந்த விடயத்தினை நாங்கள் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்திருக்கிறோம்.

இராணுவத்தினரும் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒட்டுமொத்தமாக பிழைவிட்டார்கள் என கூறமுடியாது. அவர்களுக்குள் இருந்தவர்கள் சிலர் தவறிழைத்துள்ளார்கள். அவ்வாறானவர்கள் விசாரணைக்ள் ஊடாக கண்டறியப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்.

மேலும் ஒரு குற்றவாளிக்கு நீதிமன்ற த்தில் தண்டனை வழங்கப்படுவதைப் போன்று இவர்களுக்கு தண்டனை வழங்க முடியாது. இவர்களுக்கு வேறு விதமாகவே தண்டனை வழங்கப்பட வேண்டும் என ஆணைக்குழு நினைக்கிறது.

இந்தவகையில் இராணுவத் தரப்பிலும், விடுதலைப் புலிகள் தரப்பிலும் குற்றமிழைத்தவர்கள் தொடர்பான விசாரணைகளை ஆணைக்குழு நிச்சயமாக மேற்கொள்ளும்.

நாம் ஒரு பக்கம் சார்ந்த விசாரணைகளை மேற்கொள்ளப் போவதில்லை. இரு தரப்பையும் விசாரிப்போம்.

யாரையும் பழிவாங்கும் நோக்கிலான விசாரணைகள் அல்லது தண்டனை குறித்த பரிந்துரைகள் செய்யப்படாது என்றார்.(செ-4)

## கிணற்றில் வீழ்ந்து சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம் மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நவாலி பிரதேசத்தில் 22அடி ஆழமான பாதுகாப்பற்ற கிணற்றில் 8 வயது சிறுவன் ஒருவன் தவறி வீழ்ந்து பலியாகியுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த ரவீந்திர குமார் திலகரட்ணம் என்ற சிறுவனே இவ்வாறு நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழந்த சிறுவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாண வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருவதாக தெரிவித்துள்ளனர். (செ-12)

**Personal Class-கணினி**

*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
Ms office 2013, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CC, CorelDraw X7, PageMaker, Adobe Illustrator CC, Adobe Indesign CC)
*சிறுவர்களிற்கான கற்கைநெறி
*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.
*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எனது Laptop மூலமாக கற்பிக்கப்படும்
TP:0779672038 ஆசிரியர்: KRC

**காணி விற்பனைக்கு**

சிறுகைத்தொழில் / பெருங்கைத்தொழில் அல்லது பண்ணைக்கு ஏற்றவகையில் இரண்டு வீடு கிணற்றுடன் கூடிய சுற்றிவர அடைக்கப்பட்ட 8 ஏக்கர் தோட்டக்காணி ஒன்று ஓமந்தை புகையிரத நிலையத்துக்கு எதிராகவுள்ள றோட்டில் உடனடி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு (C-2933)
0777310414

**விற்பனைக்கு**

மிக மலிவான விலையில் புதிய APPLE IPAD Air II 128gb wifi + cellular Silver colour பல்கலைக்கழக மாணவருக்கு பெரிதும் உகந்தது.
தொடர்புகளுக்கு : (2759)
0775505770

**விற்பனைக்கு**

யாழ் நகரின் மையப்பகுதியில் மின் சார நிலைய வீதியில் HNB Bank இற்கு அண்மையில் 5 பரப்புக்காணித்துண்டு சுற்றுமதிலுடன் மற்றும் 1 1/2 பரப்புக் காணி சுற்று மதிலுடன் மற்றும் 2 1/2 பரப்புக்காணித்துண்டு சுற்று மதிலுடன் மற்றும் 3 பரப்பு மின்சார நிலைய வீதியில் சுற்று மதிலுடன் உடன் விற்பனைக்கு உண்டு.
அத்துடன் கே.கேஸ் வீதி சத்திரச்சந்திக்கு அன்மையில் DFCC Bankக்கு முன்னால் மூன்று கடைக் கட்டிடத் தொகுதிகளும் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு
கனகசபை தர்மகுலசிங்கம்
(C-2938) T.P - 0777232535

## ஜனாதிபதி ஆணை...

ணைளை மேற்கொண்டனர்.

இதில் யாழ்.பிரதேச செயலகத்துக்குட்பட்ட 266 பேர் விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டு 148 பேருக்கு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

அத்துடன் 50 புதிய முறைப்பாடுகள் பதிவுசெய்யப்படடு அதில் 28முறைப்பாடுகள் விசாரணைக்குட்படுத்தப்பட்டன.

மொத்தமாக 176 பேர் விசாரணைக் குட்படுத்தப்பட்டு அவர்களுடைய சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (செ-9)

**வேலையாட்கள் தேவை**

மிக்ஷர் பொதி செய்யக்கூடிய பெண் பிள்ளைகள் தேவை
மானிப்பாயை அண்டிய பிரதேசத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு : 0777725582 0779819467
(C-2927)

**நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வு அவதானம்**

அதிகளவு சீனிப்பண்டங்களை உண்பதனால் நீரிழிவு நோய் ஏற்பட்டு விரைவாக மரணம் ஏற்படலாம் (2692)
Sugar Kills Consume with care

**Sun Travels**

U.K, France, German, Swiss போன்ற அனைத்து நாடுகளுக்குமான வீசா விண்ணப்பங்கள் Online மூலம் செய்து கொள்ளவும். விண்ணப்பப் படிவங்கள் நிரப்பிக் கொடுக்கப்படும். மேலும் இந்தியாவுக்கான E-T-A Tourist Visa சில மணி நேரத்தில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். விமானப் பயணச் சீட்டுக்களை எம்மிடம் பெற்றுக் கொண்டால் வீசா விண்ணப்பப்படிவம் இலவசமாக நிரப்பிக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: (2769)
0779361427 கைலாச பிள்ளையார் கோவிலடி
0772259030 நல்லூர், யாழ்ப்பாணம்.

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

**2016ஆம் புதிய கல்வி ஆண்டுக்கான மாபெரும் மலிவு விற்பனை**

அனைத்து புத்தகங்களுக்கும்
10% முதல் 20% வரையிலான விசேட விலைக் கழிவும்.
காகிதாதிகள், எழுதுகருவிகள், அப்பியாசக் கொப்பிகளுக்கு
10% முதல் 40% வரை விசேட விலைக்கழிவு
வாரத்தில் அனைத்து நாட்களும்
காலை 8.00-இரவு 8.00 மணி வரை திறந்திருக்கும்.




**யாழ் புத்தகசாலை**

305, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7874
{கனகபுரம் விளையாட்டுக் கழக சந்தி, கனகபுரம் வீதி கிளிநொச்சி}
T.P:-0778349507, 0214917467
(சி-2837)

**யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகிறது**

ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடி சோதிட நிலையம் (PVT) LTD
**P.ஜெய்சங்கர்**

கொழும்பில் கடந்த 25 வருடங்களாக, கௌசிக அகஸ்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் மூலம், தங்களின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், கல்வி, திருமணம், குழந்தைகள், தொழில் வாய்ப்புகள், வெளி நாட்டுப் பயணம் போன்றவற்றைக் கூறிப் புகழ்பெற்ற சோதிடர்களால், தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி கீழ்க்கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு:-384, A, நாவலர் வீதி,
(கைலாச பிள்ளையார் கோயில் அருகில் நல்லூர்)
தொலைபேசி:-021 221 7944
கொழும்பு முகவரி:
19, 1/1, கொத்தலாவல மாவத்தை, பம்பலப்பிட்டி,
தொலைபேசி:-011 258 6180/ 011 258 6208
(2767)




காரைநகர் - ஈழத்துச் சிதம்பரம் (திண்ணபுரம் சிவன்கோயில்)
மாணிக்கவாசகர் மடாலயத்துடன் இணைந்த புதிய மண்டபம்

**மங்களகரமான திறப்பு விழா**

**13-12-2015 ஞாயிற்றுக்கிழமை (இன்று)**

சிவனடியார்களே,
நிகழும் மன்மத ஆண்டு கார்த்திகைத் திங்கள் 27 ஆம் நாள் (13-12-2015) இன்று காலை 7.30 மணிமுதல் 9.30 மணிவரையுள்ள துதியை திதியும் பூராட நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் கூடிய சுபயோக சுபகரண சுபமுகூர்த்தத்தில்

"அறக்கொடைச் செம்மல்" "கலைமாடக் கோன்"
சிவத்திரு சண்முகம் சிவஞானம்

அவர்களின் பூரண அனுசரணையுடன் அமைக்கப்பட்ட இப் புதிய மண்டபத்தினை குடை, கொடி, ஆலவட்டம், தீபங்கள், மங்கள வாத்தியங்கள் முழங்க மங்களகரமாக திறந்து வைக்கப்பெறும். இப்பெருவிழாவில் அன்பர்கள், ஆதரவாளர்கள், அடியார்கள் மற்றும் யாவரும் திரளாக வந்து இப்புண்ணிய கைங்கரியத்தை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மகேஸ்வர பூசை நடைபெறும்

குறிப்பு :-
அன்றைய தினம் ஆலயம் வரையான பிரயாண ஒழுங்குகள் தனியார் பேருந்து சபை ஊடாக காலை 7.00 மணி தொடக்கம் விழா நிறைவடையும் வரை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஆதின கர்த்தாக்கள்
சிவத்திரு ஆ. அம்பலவிமுருகன்
சிவத்திரு மு.சுந்தரலிங்கம் (C-2953)

இங்ஙனம்
மாணிக்கவாசகர் மடாலய
அன்னதான சபை.



NAPLE, BELO, FANTACY, LORA, LAVENDER, KELLY, WINTER, JOVANA
Sofa Set களுக்கு 20% வரை விலைக்கழிவு அல்லது குறைந்த வட்டிவீதத்துடனான இலகுதவணைக் கொடுப்பனவு முறை
TEXES Sofa Set களுக்கு சிங்கர் 32' Led TV இலவசம்

**நத்தார் - புதுவருடத்தில் உங்கள் வீட்டை அலங்கரிக்க...**

**சிங்கர் தளபாடங்கள்**



சாப்பாட்டு மேசைகளுக்கு (DiningTable) களுக்கு
20% வரை விலைக்கழிவு
VICTORY, OKLEY, ALLEN, ALPINE, ORIENT,



அலுமாரி (Wardrobes) களுக்கு
10% வரை விலைக்கழிவு அல்லது
விசேட இலகுதவணைக் கொடுப்பனவு முறை
MICO, R90-2SWD, 3DOOR, STEEL WD, TUSCAN WD

(சி-2950)
**SINGER Plus** காட்சியறைகள்...

| யாழ்ப்பாணம். | பருத்தித்துறை | கொடிகாமம் | மானிப்பாய். | சங்கானை | சுன்னாகம். | நெல்லியடி. | சாவகச்சேரி | கிளிநொச்சி | புதுக்குடியிருப்பு | முல்லைத்தீவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 021 222 5408 | 021 226 3411 | 0774643424 | 021 225 5343 | 021 225 1100 | 021 224 0555 | 021 226 4937 | 021 227 0197 | 021 228 0199 | 076 8622213 | 021 229 0180 |

உத்தரவாதம், விற்பனைக்குப் பிந்திய சேவை 0212224577

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி

# சங்குநாதம்

Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2046 | 13.12.2015 | தொலைபேசி : 021 222 3378

நாதம் 44




# நட்டஈடு பெறவா கண்ணீர் வடிக்கிறோம்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

ஆலடிப் பிள்ளையார் கோவிலில் பிள்ளையார் கதை நடைபெற்றுக் கொண்டிருப்பதால் ஆலயத்தில் அடியார் கூட்டம் ஓரளவுக்குக் கூடியிருந்தது.

பண்டிதர் பரமலிங்கம் அங்கு தெய்வீக உரையாற்றினார். கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பதுதான் தெய்வீக உரையின் விடயப் பொருள்.

அடியார் பெருமக்களே! கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று நம் முன்னோர்கள் கூறி வைத்தனர். ஆலயம் என்பது ஆன்மா லயப்படுகின்ற இடம் என்று பொருள் கூறுவர்.

ஆலயம் என்பது எங்களை ஆற்றுப்படுத்துகின்ற இடங்களாக இருந்தால்தான் கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று கூறப்பட்டது. கோயில்கள் இறைவழிபாட்டையும் ஊர் மக்களிடையே ஒற்றுமை யையும் ஏற்படுத்தியது.

வாழ்க்கையில் பல்வேறு துன்பங்கள் ஏற்படுகின்ற போது கோயிலுக்குச் சென்று எங்கள் துன்பங்களை இறைவனிடம் எடுத்துக்கூறுவதனூடாக எங்கள் துன்பச் சுமையை இறக்கி வைக்கின்ற இடமாகவும் ஆலயங்கள் இருந்தன.

இதனால் ஆலயங்களே மக்களை ஆற்றுப்படுத்தும் நிலைகளங்களாக இருந்தன. இறைவழிபாடு மக்களின் வாழ்வை புனிதமாக்கும்.

எனினும் இன்றைய காலத்தில் ஆலயங்களுக்குச் சென்று வழிபாடாற்றுவது மிகவும் குறைந்து விட்டது. மாணவர்கள் கோயிலுக்குச் செல்கின்ற பழக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. இதனால் இன்று ஆலயங்கள் ஆட்கள் அற்ற இடங்களாகி விட்டன. இப்படிப் பண்டிதரின் தெய்வீக உரை நீண்டு நிறைவடைந்தது.

பண்டிதரின் தெய்வீக உரை நிறைவு பெற்றபோது கதிரவனும் மேற்றிசை இறங்கி ஓய்வெடுக்கத் தயாரானான்.

பண்டிதரின் உரை நிறைவு பெற்றதும் ஆலடி மாநாடு கூடியது. வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் மாநாடு கூடியது. அனைவரும் மாநாட்டிற்கு வந்திருந்தனர்.



**விதானையார்:** பண்டிதர் ஐயா, நீங்கள் ஆற்றிய தெய்வீக உரை அற்புதம். முன்பு தான் கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கக்கூடாது என்று சொன்னார்கள். இப்போது அதை மாற்றி குடியில்லாத ஊரில் கோயில் இருக்கக்கூடாது என்றுதான் சொல்லவேண்டும்.

**கங்காணி:** விதானையார் சொல்லுறதிலும் நியாயம் இருக்கத்தான் செய்யிது. யுத்த சூழலால் ஏற்பட்ட இடப்பெயர்வுக்குப் பிறகு கனபேர் தங்கட ஊருக்குப் போகவில்லை.

ஏன்? என்ர சொந்த இடம் புங்குடுதீவு தானே. 1991 ஆம் ஆண்டு ஊர்காவற்றுறையால ஆமிக்காரர் வருகினமாம் எண்டு சொல்லிப்போட்டு பண்ணைக் கடல் கடந்த நாங்கள் தான் இன்றைக்கு 24 ஆண்டுகள் போய்விட்டது. புங்குடுதீவில போய் இருக்க நினைக்கல்ல.

வெளிநாட்டில இருக்கின்ற என்ர மகன் காசு அனுப்பி யாழ்ப்பாணத்தில ஒரு வீட்டை வாங்கி அதில இருங்க எண்டு சொல்லிப் போட்டான். இதால நான் பிறந்த புங்குடுதீவு மண்ணுக்குப் போக முடியவில்லை.

**வாத்தியார்:** அது சரி கங்காணியார். அண்டைக்கு ஒருக்கா புங்குடுதீவுக்குப் போனனான். அங்க 7ஆம் வட்டாரத்தில ஐயனார் கோயில் ஒன்று இருக்குது. அந்தக் கோயிலில நவதளத்தில கோபுரம் கட்டுகினம். இந்தியக் கட்டடக் கலைஞர் தான் வேலை செய்யினம். புங்குடுதீவைச்சேர்ந்த ஒருவரையும் காணக்கிடைக்கவில்லை.

கோபுரம் கட்டுவதற்கு எவ்வளவு தம்பி எஸ்ரிமேற் என்று கேட்டன். எட்டுக் கோடி ரூபாய் என்று அங்க நின்ற ஒருவர் சொன்னார். தலை விறைச்சுப் போய்ச்சுது. சனங்களே இல்லாத இடத்தில அதுவும் இருக்கிற சனங்களுக்கு அடிப்படை வசதிகள் போதாமல் உள்ள போது ஐயனாருக்கு எட்டுக்கோடி ரூபாயில கோபுரம் கட்டுவதால என்ன நடக்கும்.

**பண்டிதர்:** வாத்தியார் வெளிநாட்டுக்குப் போன எங்கட சனங்கள் அங்க இருந்து காசைக் கொண்டு வந்து கோபுரத்தைக் கட்டுகினம். நாம் அதைப் பற்றி ஏன் அதிகம் அலட்டிக் கொள்வான்?

**வாத்தியார்:** பண்டிதர் ஐயா, இப்படி நீங்கள் சொல்லக்கூடாது. கோயில் என்பது மக்களின் வழிபாட்டிற்குரிய தலங்கள். அங்க குடிசனங்கள் இல்லை என்றால்-பூசை வழிபாடுகளில பங்கு பற்றி இறைவழிபாடு செய்கிறதுக்கு ஆட்கள் இல்லை என்றால், எட்டுக் கோடி ரூபாயில கோபுரத்தைக் கட்டுறதில, காசைக் கொட்டுறதில எந்தப் பிரயோசனமும் இல்லை என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

**விதானையார்:** வாத்தியாற்ற கருத்துக்கு நானும் ஆதரவு தெரிவிக்கிறன். புங்குடுதீவில இப்ப இருக்கிற சனங்களாலதான் கொஞ்ச மெண்டாலும் அந்த ஊருக்குப் போய் வர முடிகிறது.

எனவே அங்க இருக்கிற மக்களின்ர அடிப்படைத் தேவைகளை, அங்குள்ள மாணவர்களின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுக்கிறதுக்கு நிதியைச் செலவிட்டால் அதில அர்த்தம் இருக்கும்.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பது தானே எங்கட சைவசமயம் கூறும் அடிப்படைத் தத்துவம். இதை முதலில் நாங்கள் உணர்ந்து கொள்ள வேணும்.

**வாத்தியார்:** எங்கட மண்ணில என்றைக்கு ஆலடி வைரவருக்கும் அரசடி வீர பத்திரருக்கும் கோயில் கட்டி குடமுழுக்குச் செய்து அவையளைப் பூட்டி வைச்சமோ அண்டைக்குப் பிடிச்ச நாசம்.

காவல் தெய்வங்களுக்கு கர்ப்பக்கிரகம் அமைத்து அவையளைப் பூட்டி வைத்தால் எங்களைக் காவல் காக்கிறது ஆரு. யதார்த்தமாகச் சிந்தித்தால் இந்த உண்மைகள் தெரியுமோ இல்லையோ.

**விதானையார்:** வாத்தியார் ஒரு காலத்தில ஆலடி வைரவருக்கும் அரசடி வீர பத்திரருக்கும் சங்கு ஊதி சேமக்கலம் அடித்துத் தீபம் காட்டியவர்கள் அந்தக் கோயிலுக்கு அருகில் இருந்தவர்கள். அந்தக் கோயிலுக்கு அண்மையில் இருக்கின்றவர்கள் வீட்டில உடுத்திருக்கிற உடுப்போட ஆலடிக்குப்போய் வைரவப்பெருமானே! என்று சொல்லி நெற்றியில திருநீறு அணிந்து கொள்கிற நடைமுறை என்றைக்கு அற்றுப்போனதோ அண்டைக்குக் கோயிலுக்குப் போறவர்களின்ர எண்ணிக்கையும் குறைஞ்சு போய்ச்சுது.

இப்ப என்னடா என்றால் ஆலடி வைரவருக்கும் சிவாச்சாரியார் வந்துதான் பூசை செய்யவேணும் என்றாகிப் போய்ச்சு. இப்படியே நாட்டில, நாளுக்கு நாள் கோயில் கட்டி குடமுழுக்குச் செய்து கொண்டால், பூசை வழிபாடு ஒழுங்கில்லை என்று கடவுள்கள் மாநாடு கூட்டி கடுமையான தீர்மானங்கள் எடுப்பினம் கவனம்.

**கங்காணி:** இது பாருங்கோ காலம் கலியுகம். எதிலும் வியாபாரம். எங்கட தமிழ் நாட்டுச் சனங்கள் வெள்ளப் பெருக்கால கஷ்டப்பட அதை அரசியல் ஆக்கிறதில சிலர் நின்றதைப் பார்த்தியளோ.

**மூப்பர்:** ஏன் கங்காணியார் ஆந்திர அரசு கொடுத்த சாப்பாட்டுப் பார்சலில தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களின்ர படத்தை ஒட்டின பிறகுதான் வெள்ளத்தால பாதிக்கப்பட்ட மக்களுக்கு அந்தச் சாப்பாட்டுப் பார்சல்கள் கொடுக்கப்பட்டதென்றால் எங்கட இனத்தின்ர நிலைமை எப்படி என்று பாருங்களன்.

**பண்டிதர்:** இப்ப எல்லாத்திற்கும் உரிமைகோருகிற நடைமுறைதான் உண்டு. எது எப்படியாக இருந்தாலும் மக்களுக்கு உதவுகிற பணியை மகேசன் பணியாக அனைவரும் நினைக்க வேணும் என்பதை ஆலடி மாநாட்டில் ஒரு தீர்மானமாகக் கொண்டுவருவம்.

இப்படிப் பண்டிதர் கூற அதனை ஆலடி மாநாட்டு உறுப்பினர்களுடன் சேர்ந்து ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலித்தது. மணி ஓசையுடன் ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து மாலைப்பூசைக்காக கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# அரசியல் கடந்த தமிழர் நலன்...




அரசியல் கட்சிகள் என்ற எல்லையை கடந்து நாடு என்பது பற்றியே இப்போது நாம் சிந்திக்கவேண்டும். இவ்வாறு கூறியவர் இந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்கு முடிவு கட்டி நல்லாட்சி என்ற பெயரில் புதிய ஆட்சியை அமைப்பதற்கான வியூகம் அமைத்தபோதே மேற்கண்டவாறு சந்திரிகா அம்மையார் கூறியிருந்தார்.

என்னுடன் தேர்தலில் போட்டியிடும் வீரன் யார். அந்த வீரனை யார் என்று அறிய விரும்புகின்றேன் என்று மகிந்த ராஜபக்ஷ கூறியபோது மகிந்தவுக்கு அருகில் மிகப் பௌயமாக நின்றவர் மைத்திரிபால சிறிசேன.


தன்னை எதிர்த்துப் போட்டியிடும் அந்த மகா வீரன் தனக்கு அருகில் நிற்பதை அறியாத மகிந்த ராஜபக்ஷ மார்தட்டி வீராப்புக் காட்டியதில் என்ன பயன் இருக்க முடியும்.

சிங்கள மக்களுக்கு ஓர் அமைதியான சூழலை- ஊழலற்ற நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்காக மைத்திரி- ரணில்- சந்திரிகா என்ற கூட்டு உருவாகியது.

பௌத்த சிங்களம் என்பதைப் பாதுகாக்க வேண்டும் என்ற ஒரே நோக்கில் எதிரியாக இருக்கக்கூடியவர்களும் ஒன்றிணைந்தனர் என்பதுதான் இலங்கை அரசியலில் நடந்த மிகப்பெரும் திருப்பம்.

ரணில் விக்கிரமசிங்க மீது சந்திரிகா வெறுப்புக் கொண்டவர். இருந்தும் நாட்டைப் பாதுகாத்தல் என்பதை மட்டும் ஒரே இலக்காகக் கொண்டு மைத்திரி- ரணில்- சந்திரிகா என்ற முக்கூட்டுத் தலைவர்கள் ஒன்று சேர்ந்தனர். இதன் பின்னணியில் அமெரிக்கா பக்க பலமாக இருந்து கொண்டது. சொல்லி அடித்தது போல மகிந்தவின் ஆட்சி மண் கௌவியது.

மகிந்தவைத் தோற்கடித்து ஆட்சிப் பீடமேறிய ஜனாதிபதி மைத்திரிபால



சிறிசேன மிகவும் அடக்கமாக இருந்து பலமான ஆட்சி நிர்வாகத்தை நடத்திச் செல்கிறார்.

மைத்திரிபால சிறிசேன என்றொருவர் மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிட முன்வராமல் இருந்திருந்தால் இலங்கையின் இன்றைய நிலைமை வேறாக இருந்திருக்கும்.


கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப அரசியல் தலைமைகளை உருவாக்கும் வல்லமை சிங்கள அரசியல் தலைவர்களிடம் இருந்தது போல நம் தமிழ்த் தலைமைகளிடம் இருக்கவில்லை.

இப்போது நம் தமிழ் மக்களுக்கு வேண்டியதெல்லாம் மைத்திரி போன்ற தலைவர்கள்தான். இருந்தும் அது சாத்தியப்படமாட்டாது என்பது தெட்டத்தெளிவு.

அதற்காக தமிழர்களின் நலன் பற்றிச் சிந்திக்காமலும் இருந்துவிட முடியாது என்பது ஏற்புடை நியாயம்.

தமிழ் மக்களின் நலன் பற்றிச் சிந்திப்பது என்ற விடயத்தில் கட்சிகளினதும் மக்கள் சமூகத்தினதும் ஒற்றுமைப்பட்ட அணியின் உருவாக்கமே இன்றைய தேவையும் சாத்தியமான விடயமுமாக இருக்கும்.

அதாவது தமிழ் அரசியல் கட்சிகளினது பிரதிநிதிகள்; சிவில் சமூக பிரதிநிதிகள்; மதத் தலைவர்கள்; மக்கள் சமூகத்தின் ஏனைய பிரதிநிதித்துவம் என்பவற்றை உள்



ளடக்கிய ஒரு அணியின் உருவாக்கம் மட்டுமே தமிழ் மக்களின் நலன்பற்றிய சிந்தனைக்கு உருவேற்றம் செய்வதற்கும் அமுலாக்கத்திற்கும் தேவையானதாகும்.

2016 ஆம் ஆண்டில் அரசியல் தீர்வு என்ற கோசமே பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்கு வித்திட்டது.

2016 ஆம் ஆண்டில் அரசியல் தீர்வு பெற்றுத் தரப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் வெளிப்படையாகக் கூறியிருந்தார்.

2016 ஆம் ஆண்டில் தீர்வு சாத்தியமா? எந்த அடிப்படைகளை வைத்துக்கொண்டு 2016 இல் அரசியல் தீர்வு என்று சம்பந்தர் உறுதிபடக் கூறினார் என்ற கேள்விகளுக்கான விடைக்காக



நாம் பல காலம் காத்திருக்கத் தேவையில்லை.

இருந்தும் 2016 இல் தீர்வு முன்வைக்கப்படும் என்ற எடுகோளில் அத்தீர்வு என்பது தமிழ்மக்களின் அபிலாசைகளை- அவர்களின் சுயநிர்ணய உரிமைகளை எந்தளவு தூரத்திற்குப் பூர்த்தி செய்யும் என்ற கேள்வி எழுவது அவசியமானது.

இங்குதான் தீர்வு என்ற பெயரில் பம்மாத்து நடந்து விடலாமோ என்ற பயம் ஏற்படுகிறது.

தீர்வு என்ற விடயத்தில் தமிழ்மக்களின் அபிலாசைகளைப் பிரதிநிதித்துவம் செய்வது யார்? என்ற கேள்வியோடு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஒரு சில அரசியல் தலைவர்கள் தாங்களே தீர்வு பற்றி முடிவெடுக்க முடியுமா என்ற ஐயவினாவில் நிறைந்த நியாயங்கள் இருக்கின்றன.

இலங்கை அரசைப் பொறுத்தவரை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை ஒத்திவைத்தல் என்ற விடயத்தில் இருந்து விலகி வலிமையற்ற தீர்வுகளை முன்வைத்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டாயிற்று என்பதை உலகிற்கு எடுத்துரைப்பதிலேயே இப்போது அதீத கவனம் செலுத்துகிறது.

ஆகையால் தீர்வு என்ற ஒரு விடயம் மிகப்பெரிய சோடனைகளுடன் அரங்கேறப்போவது உண்மை.

சோடனைகளுக்கும் அலங்கரிப்புக்களுக்கும் முன்னுரிமை கொடுத்தால் உக்கிப்போன உள்ளீடுகளையே நாம் பெற்றுக்கொள்ள வேண்டியதாக இருக்கும்.

எனவே தமிழர்களின் பிரச்சினை என்பது ஒரு சிலருக்கானதோ அல்லது ஒரு சிலரின் சம்மதத்துடன் தீர்வு காண்கின்ற விடயமோ அல்ல.

அது ஒட்டுமொத்தத் தமிழ் இனத்தினதும் குருதியுடன் கலந்துவிட்ட விடயம்.

ஆகையால் தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு என்பது தமிழ் அரசியல் கட்சிகளினதும் தமிழ்ச் சமூகப் பிரதிநிதிகளினதும் தமிழ்ப்புத்திஜீவிகளினதும் கூட்டுச் சேர்ந்த அணியால் தயாரிக்கப்படும் தீர்வு வரைபை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கவேண்டும்.

இந்த விடயத்தில் அரசியல் என்ற எல்லை கடந்து தமிழ் மக்களின் நலன் என்பதை மையப்படுத்தி அனைவரும் ஓர் அணியில் ஒன்று சேர்ந்து கொள்வது மிகமிக அவசரமானதும் அவசிய மானதுமாகும்.

விதுரன்




# புவியின் வெப்பத்தை கணிப்பது எப்படி?

> “1750 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2009இல் காபனீரொட்சைட்டு வாயு மட்டம் 38% அதிகரித்துள்ளது. மெதேன் கொள்ளவு 148% அதிகரித்துள்ளது.”

புவியின் வெப்பநிலையானது அண்ணளவாக 40°C வரைக்கும் உயரவும் 0°C இற்கு வரை தாழவும் முடியும் ஆனால், இது இடத்துக்கு இடம் மாறுபடுகிறது. இந்த மாறுபாடகளின் சராசரி வெப்பநிலையே புவிவெப்பமாக விஞ்ஞானிகளால் கணிக்கப்படுகிறது.

1880 ஆண்டிலிருந்தே புவியில் நாடுகள் பலவும், நிலத்திலும் நீரிலும் நம்பகமான வானிலை அவதானிப்பு நிலையங்களை வைத்திருக்கின்றன.

விஞ்ஞானிகள், 1960 தொடக்கம் செய்மதிகள் மூலம் புவியின் வெப்பநிலையை கணிக்கத் தொடங்கிவிட்டனர். இந்த செய்மதிகள், நேரடியாக புவி வெப்பத்தை அளவிடுவதில்லை. பதிலாக, புவியின் வளிமண்டலத்தின் ஒக்சிஜினால் இழக்கப்படும் வெப்பக் கதிர்வீச்சினை அளப்பதன் மூலம் கணிக்கின்றன. இந்த கதிர்வீச்சின் தீவிரம் காற்றின் வெப்பநிலையுடன் தொடர்புடையது.

இவ்வாறு பெறப்பட்ட தகவல்களை கணினி மூலம் செயற்படுத்தி புவியின் சராசரி வெப்பநிலையை அளவிடுகிறது அது.

விஞ்ஞானிகள் செய்மதிகள், வானிலை அவதானிப்பு நிலையம் ஆகிய இரண்டிலிருந்தும் வெப்பநிலை வாசிப்புகளைப் பெறுகின்றனர்.

பெறப்பட்ட வாசிப்புகளின்படி 2014 ஆம் ஆண்டானது, மிக உயர்ந்த வெப்பநிலையைக் காட்டியதாக இருந்தது.

அது பின்பும் குறையவில்லை. பதிலாக மேலும் உயர்ந்தது. இதன் விளைவு, நடப்பு ஆண்டான 2015 ஆம் ஆண்டானது அதனிலும் உயர்வான வெப்பநிலை வாசிப்பைக் காட்டியுள்ளது.

இவ்வாறு புவியின் சராசரி வெப்பம் உயர்வதற்கான முக்கிய காரணம், பச்சைவீட்டு விளைவு வாயுக்களில் பிரதானமான- காபனீரொட்சைட்டு, மெதேன் ஆகிய வாயுக்களாகும் என நாம் எல்லோரும் அறிந்துதான். இவ்வாயுக்கள், சுவட்டு எரிபொருட்களான நிலக்கரி, மற்றும் எண்ணெய், எரிவாயு ஆகியவற்றின் மக்கட் பயன்பாட்டினால்-குறிப்பாக தொழிற்புரட்சியின் பின்பு, இப்பயன்பாடு அதிகரித்ததன் விளைவாகவே விதிவிலக்காக, அதிவேகமாக புவி, வெப்பமடைந்து வருகிறது.


### கடந்துவிட்ட மில்லியன் ஆண்டுகளுக்கு புவிவெப்பத்தை அளத்தல்

மேற்குறித்த நாசாவின் விண்வெளி ஆய்வு விஞ்ஞானி இதுபற்றி தெரிவிக்கையில், ஒக்சிஜின், ஐதரசனை ஆகிய மூலகங்கள் வெப்பநிலைக்கேற்ப நிறை வேறுபாட்டைக்காட்டுகின்றன.

அதாவது, கூடிய வெப்பத்தில் நிறை அதிகரிப்பையும் குறைந்த வெப்பத்தில் நிறைக் குறைவையும் அவை காண்பிக்கின்றன. இதன்பால்,வெப்பம், வரட்சி நிலைமையானது,பாரங்கூடியதும் எண்ணிக்கையில் குறைவான ஒக்சிஜின், ஐதரசன் மூலகங்களைக் கொண்ட நீரையும் பனியையும் உருவாக்குகிறது.

குளிர் நிலைமையானது பாரம் குறைந்த ஆனால், எண்ணிக்கையில் அதிகமான ஒக்சிஜின், ஐதரசன் மூலகங்களைக் கொண்டுள்ளது என்றும் ஒவ்வொரு ஆண்டிலும் புதிய பனிப் படலம் துருவப் பிரதேசங்களில் உருவாக்கப்படுகிறது - அந்த பனிப்படலங்களை ஆய்வு செய்வதன் மூலம் கடந்தகாலத்தில்-மில்லியன் வருடங்களுக்குக்கூட பனிக் கட்டியின் வயதையும் அன்று இருந்த வெப்பநிலையையும் அளக்க முடியும் என குறிப்பிடுகிறார்.


இதன்படி பனிப்படலத்தை துளைத்து வெளியே எடுத்த பனிக்கோலை ஆய்வு செய்வதன் மூலம் கடந்தகாலங்களிலும் பார்க்க இவ்வாண்டே, புவி வெப்பம் அதிகமான ஆண்டாகவும், ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததிலும் தற்போது பத்துமடங்கு வெப்ப அதிகரிப்பு நிகழ்ந்துள்ளது.




1750 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2009இல் காபனீரொட்சைட்டு வாயு மட்டம் 38% அதிகரித்துள்ளது. மெதேன் கொள்ளவு 148% அதிகரித்துள்ளது. தற்போதும் இவை குறையவில்லை அதிகரித்துள்ளன. இதனால் கதிர்வீச்சு மூலம் புவியால் இழக்கப்படும் வெப்பம் இவ்வாயுக்களால் புவியைவிட்டு வெளியேறாமல் தடுக்கப்படுகிறது; புவி வெப்பமாதல் உயர்வடைந்து வருகிறது.

தமிழில் -பாமா

# கிடைத்ததில் சமபங்கு



ஒருநாள் கிருஷ்ணதேவர்,அரண் மனையில் கிருஷ்ண லீலா நாடக நாட்டியம் நடைபெற ஏற்பாடு செய்திருந்தார். தெனாலிராமனைத் தவிர மற்ற எல்லா முக்கியப் பிரமுகர்களுக்கும் அழைப்பு விடுத்திருந்தார்.

இந்நிகழ்ச்சியில் அரசியும் மற்றும் சில பெண்களும் கலந்து கொள்வதால் தெனாலிராமன் இருந்தால் ஏதாவது கோமாளித்தனம் செய்து, நிகழ்ச்சியை நடைபெறா வண்ணம் தடுத்துவிடுவான் என எண்ணி தெனாலிராமனை மட்டும் நாடக அரங்கினுள் விடவேண்டாமென்று வாயிற்காப்போனிடம் கண்டிப்புடன் சொல்லிவிட்டார் மன்னர்.

இதை அறிந்தான் தெனாலிராமன். எப்படியாவது அரங்கத்தினுள் சென்றுவிடுவது என தீர்மானித்துக் கொண்டான்.

நாடகம் நடைபெறும், அரங்கின் வாயிலை நெருங்கினான் தெனாலிரா மன். உள்ளே செல்ல முற்பட்டான்.

வாயில் காப்பானோ அவனை உள்ளே விட மறுத்து விட்டான். மீண்டும் மீண்டும் கெஞ்சினான். வாயிற்காப்போன் மசியவில்லை.

இந்நிலையில் தெனாலிராமன் ஒரு தந்திரம் செய்தான். “ஐயா, வாயிற்காப் போரே என்னை உள்ளே விட்டால் என்னுடைய திறமையால் ஏராளமான பரிசு கிடைக்கும். அதில் பாதியை உனக்குத் தருகிறேன” என்றான். இதைக் கேட்ட வாயிற் காப்போன் முதலில் சம்மதிக்கா விட்டாலும், பின்னர் கிடைப்பதில் பாதி பரிசு கிடைக்கிறதே என்று மகிழ்ந்து அவனை உள்ளே விட்டான்.

அரங்கத்தினுள் செல்ல வேண்டுமானால் மீண்டும் இன்னொரு வாயிற் காப்போனை சமாளிக்க வேண்டியிருந்தது. அவனும் தெனாலிராமனை உள்ளே விட மறுத்தான். முதல் வாயிற் காப்போனிடம் சொல்லியதையே இவனிடமும் சொன்னான். இவனும் பாதி பரிசு கிடைக்கிறதே என்று மகிழ்ந்து, அவனை உள்ளே விட்டுவிட்டான்.

ஒருவருக்கும் தெரியாமல் தெனாலிராமன் ஓர் மூலையில் போய் உட்கார்ந்து கொண்டான்.

அப்போது கிருஷ்ணன் ஆக நடித்தவன் வெண்ணை திருடி கோபிதைகளிடம் அடி வாங்கும் காட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. உடனே மூலையில் இருந்த தெனாலிராமன் பெண் வேடம் அணிந்து மேடையில் தோன்றி கிருஷ்ணன் வேட்ம் போட்டு நடித்தவனை கழியால் நையப் புடைத்து விட்டான். கிருஷ்ண வேடதாரி வலி பொறுக்க மாட்டாமல் அலறினான்.

இதைப்பார்த்த மன்னர் கடுங்கோபமுற்று மேடையில் பெண் வேடமிட்டுள்ள தெனாலிராமனை அழைத்து வரச்செய்தார் பின் “ஏன் இவ்வாறு செய்தாய்” என வினவினார். அதற்குத் தெனாலிராமன் “கிருஷ்ணன் கோபிகைகளிடம் எத்தனையோ மத்தடிபட்டிருக்கிறான் இப்படியா இவன் போல் அவன் அலறினான்” இதைக் கேட்ட மன்னருக்கு அடங்காக் கோபம் ஏற்பட்டது. தெனாலிராமனுக்கு 30 கசையடி கொடுக்குமாறு தன் பணியாளர்களுக்கு உத்தரவிட்டார்.

இதைக் கேட்ட தெனாலிராமன் “அரசே இப்பரிசை எனக்கு கொடுக்க வேண்டாம். ஏனென்றால் எனக்குக் கிடைக்கும் பரிசை ஆளுக்குப் பாதி பாதி தருவதாக நம் இரண்டு வாயிற்காப்போன்களிடம் உறுதியளித்து விட்டேன்.

ஆகையால் இப்பரிசினை, அவர்கள் இருவருக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுங்கள் ”என்று கேட்டுக்கொண்டான்.

உடனே மன்னர் அவ்விரு வாயிற காப்போன்களையும் அழைத்து வரச் செய்து இது குறித்து விசாரித்தார்.

அவ்விருவரும் உண்மையை ஒத்துக் கொண்டார்கள்.

அவ்விருவருக்கும் தலா 15 கசையடி கொடுக்குமாறு மன்னர் பணித்தார். வாயிற் காவலர்களின் நேர்மையீனத்தை அரசருக்கு காட்டிக்கொடுத்ததால், தெனாலி தப்பித்துக்கொண்டான்.







## வியாசர் பதில்கள்

**அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்**

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



**சென்னை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவினோர் பற்றி?**

**நடிகை நயன்தாரா உங்க வீட்டுக்கு வந்தா என்ன பண்ணுவீங்க?**

**எந்திரன் 2 வெளிவருமா?**

சுப்பிரியா — முழங்காவில்

**இப்போதைய காதல் பற்றி**

தொலைபேசியிலேயே சந்தித்து உரையாடி உறவாடி அம்மி மிதித்து அருந்ததியெல்லாம் பார்த்து மாலை மாற்றி மணவறையில் உக்கார்ந்து தொடாமல் தாலி கட்டி எப்படி யாவது தொட்டு விடத்துடிக்கும் காதல்.

ஜனு — யாழ்ப்பாணம்

**தொலைந்து போன காதல் காலம் கடந்து கைகூடும் போது என்ன செய்வது?**

காலம் கடந்தபின் கைகூடி என்ன? கூடாமல் என்ன? தேடி வந்ததே என தேற்றிவிட்டு இருக்க வேண்டியதுதான்

ரத்னகுரு — அல்வாய்

**சென்னை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவினோர் பற்றி?**

வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களை மீட்பதற்கு வந்த படை வீரர் ஒருவர் கூறிய கதை ‘‘நான் எத்தனையோ அனர்த்தங்கள் நடைபெற்ற நேரங்களில் மீட்புப் பணிக்கு சென்றிருக்கிறேன். இங்கேதான் (தமிழ்நாட்டில்) பாதிக்கப்பட்டவர்களே பாதிக்கப்பட்டவர்களுக்காக மனிதாபிமான உதவிகளைச் செய்வதை பார்க்கிறேன் என்றாராம். வீழ்ந்தவரை மிதித்தோடுபவன் தமிழனல்ல. அவரை மீட்டு மீண்டெழச் செய்பவனே தமிழன்.

சுபராஜ் — யாழ்ப்பாணம்

**சில பெண்கள் ஒருவரை காதலித்துக் கொண்டு வேறு பலருடன் தொலைபேசியில் கடலை போடுகிறார்களே?**

தொடர்ந்து கொண்டல் கடலையை சாப்பிட முடியுமா? அதற்காகத்தான் சிறு மாற்றத்திற்காக பொட்டுக் கடலை, பட்டாணிக் கடலை, மஞ்சள் கடலை, பச்சைக்கடலை என மாற்றி மாற்றி போடுகிறார்கள் போலும்.

ரஜீந்திரகுமார் — வயாவிளான்

**அன்பு பலமா? பலவீனமா?**

சில இடங்களில் பலம். பல இடங்களில் பலவீனம்.

கிருஷா — வரணி

**உங்கள் முன்னாள் காதலியுடன் நீங்கள் கதைத்ததை உங்கள் மனைவி பார்த்திட்டாராமே?**

ம்ம்ம்... பார்த்தது உண்மைதான். தும்புக் கட்டைக்கு சில பல சேதாரங்களுடன் முடிந்து விட்டது. இதுவே அவளின் கணவன் பார்த்திருந்தால் என்ர குருவாயூரப்பா... உயிருக்கெல்லா சேதாரமாகியிருக்கும்.

நகுல்ராஜ் — சுழிபுரம்

**எந்திரன் 2 வெளிவருமா?**

கதை விவாதம் எல்லாம் முடிந்து விட்டது. போட்டோ சூட்டிற்காக ரஜனி அமெரிக்காவிற்கும் சென்று விட்டார். இதில் ஹோலிவூட் நடிகர் ஆனோல்ட்டும் நடிக்கிறார். அவருடைய சம்பளம் எவ்வளவு தெரியுமா? 200 கோடி இந்திய ரூபாவில். அப்ப இலங்கை ரூபாவில் கணக்கு போட்டு பாருங்க.

தக்சி — யாழ்ப்பாணம்

**அனைத்து கேள்விகளுக்கும் சுப்பரா பதில் சொல்லும் உங்களின் குரு யாரு?**

சாதாரணமாக என்னுடன் உரையாடும் ஒவ்வொருவரும் எனது குருதான். ஏனென்றால் அவர்கள் பேசும் போது கூறும் விடயங்களைத்தானே உங்கள் கேள்விகளுக்கு பதில்களாக தருகின்றேன்.



தலைவரோட தொல்லை தாங்கலை!
ஏன் என்னாச்சு?
கார்ல டாக்டர், வக்கீல்னு எழுதுற மாதிரி அவர் கார்ல ரௌடினு எழுதனுமாம்

**அன்பு வாசகர்களே!**

நீங்களும் வியாசர் பகுதிக்கு உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள். அரசியல், ஆன்மீகம், சமூகம், பொழுதுபோக்கு சார் கேள்விகளை மிக சுருக்கமாக உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பி வையுங்கள்.

**குறுந்தகவல் (SMS) 021 567 1532**

பாணு — உடுப்பிட்டி

**மனிதரைப் போல கடவுளும் நேரில் தெரிந்தால்?**

கடவுளுக்கு இலஞ்சம் கொடுக்க நீண்ட வரிசை நிற்கும். அதை வாங்குவதா? இல்லையா? என சிந்தித்து முடிவெடுக்க இறைவனுக்கு நிறைய வருடம் எடுக்கும்.

பாண்டியன் — குட்டியப்புலம்

**நல்லாட்சி அரசில் அரச ஊழியர் நியமனத்தில் அரசியல்வாதிகளின் தலையீடு தொடருமா?**

சளியில்லாமல் இருக்க வேண்டும் என்றால் மூக்கில்லாமல் தான் பிறக்க வேண்டும்.

கோபி — யாழ்ப்பாணம்

**காதலித்து ஏமாற்றும் பெண்களை என்ன செய்ய?**

ஏமாற்றும் அளவுக்கு காதலித்த உன்னை என்ன செய்ய? முதலில் அதைச் சொல்லு.

அகிலேஸ்வரன் — மருதங்கேணி

**மூடி வைத்த அழகு. திறந்து வைக்கும் அழகு. எது சிறந்தது?**

மூடி வைத்தஉணவில்ஈமொய்க்கா-மொய்க்கும் திறந்து வைத்த உணவில். இப்போது சொல்லுங்கள் எது சிறந்தது.

கோபி — மந்திகை

**உண்மையான அன்பிற்கும் பொய்யான அன்பிற்கும் என்ன வித்தியாசம்?**

நீ சிரிக்கின்ற போது அல்ல அழுகின்ற போது அருகில் நின்று உன் தோளை தொடும் கை எதுவோ அதுதான் உண்மையான அன்பு.

குலம் — கனகராயன்குளம்

**தமிழர்களுக்கு தமிழ் நாடு கிடைக்குமா? இல்லையா?**

சத்திரத்துச் சந்தியில் இருந்து வலது பக்கம் திரும்பின உடன் வாற கயித்துக் கடையில விக்கிறாங்கள் போனா வாங்கலாம். போய் வாங்கி வாறீர்களா ராசா?

மிதுஷியா — விசுவமடு

**நடிகை நயன்தாரா உங்க வீட்டுக்கு வந்தா என்ன பண்ணுவீங்க?**

எப்போ வருவார் என்று தெரிந்தால் என் மனைவியை ஊருக்கு அனுப்ப வசதியாய் இருக்கும்.

# கவிதைக் கலசம்



மணிக்கணக்காய் காலூன்றி
காத்திருக்கும் கொக்கல்ல நீ
கண்ணில் எண்ணெய் வைத்து
அதில் தன்னை வைத்து
நிதானமாய் இரை கௌவும்
கழுகு நீ
வேரூன்றி விழுது விடும்
எண்ணம் உனக்கிருந்தால்
வேங்கையாய் எழு... சீறு...
உன் சீற்றம்- இந்த
உலகத்தின் சீற்றத்தை அடக்கு:ம்

மாவை. நா.கஜேந்திரன்

## தத்தளிக்க விட்டாயே!

கண்ணீரில்
மிதக்க வைத்தாய்
அன்று
தண்ணீரில்
மிதக்க வைக்கிறாய்
இன்று
அவலத்தின்
தொடர்கதையை
சுமப்பதற்கு
பிறந்த
இனமா நாம்
எம் தொப்புள்
கொடி உறவுகளே
கலங்காதீர்
தோள்கொடுப்போம்
நாம் உமக்கு
துயர் வலியை
புரிந்தவர் நாம்

புலோலியூர்
வேல்நந்தன்

## நிமிடக் கொலையை கைவிடு

ஓடும் ரயிலே ஓடும் ரயிலே
ஓயாத உன் சேவையில்
ஓரம் கட்டுகிறாய் எம்மவரை
ஓலமிடுகிறாள் தமிழன்னை
எறிகணை வீச்சில்
ஏதிலியானோம்
எட்டப்பர் செயலில்
எம் நிலை மறந்தோம்
இடர் பல கண்டோம்
இரக்கமில்லா மாந்தரின்
இம்சைகள் பொறுத்தோம்
இன்னுமா வேதனை?
கொல்கள விலங்குகளாய்
கொலையுண்டனர் எம்மவர்
கொடுமை இன்னும் தீரவில்லை
கொலை செய்கிறாய் நீயும்
நிறுத்திவிடு உன் கொடூரத்தை
நிர்க்கதியாகிறோம் நாமிங்கு
நிமிடக் கொலையை கைவிடு
நிம்மதியாய் வாழவிடு

உடுவிலூர் கலா

## வாழத் தெரியாத என் காதலிக்காக

அழகில் அவள் எளிமை
அப்பாவித்தனமான முகம்
கிராமவாசனையுடன் புன்சிரிப்பு
வாழ ஆசைப்பட்டு
வாழ முடியாமல் போன அப்பாவி
சொல்லொணாத் துயரை
தாங்கமுடியாமல்
கல்லறைக் காவியமானவள்
பூ இதழ்களால்
புன்னகை சிந்தி- என்
இதய வாசலில் அழியாத
கோலங்களைப் போட்டவள்-இன்று
அவசர அவசரமாய்...
அழிந்த கோலமானாள்
துன்பம் பெண் குலத்தின் தொடர்கதை
அதில் நீயும் விடை தெரியாமல்
போன விடுகதை-உன்
மரணம் ஓர் அபாய அறிவிப்பு
இளங்காதலர்களுக்கு -ஓர்
எச்சரிக்கை

பா.மதனபாரதி
அல்வாய்

## மாயையான மாயை மனிதம்

காரிருள் மேகமும் கண்ணீர் சொரியுது
பூலோக மனிதனின்
நிலைமை கண்டுதான்
மனிதனே மனிதனைக் கொல்கிறான்
மனிதமும் கொலை
வெறி கொள்ளுது
கணிதமும் பலமுறை கணித்தது
புவி அழியும் காலம் இதுவென்று
விஞ்ஞானம் இடைக்கிட விரட்டுது
விண்கல்லும் விழுமென்று விரட்டுது
பொய்யாக எல்லாமே நடக்குது
கொலை கூட இங்கே மலிவுதான்
பலாத்காரம் நடைபெறும் அரங்குதான்
உண்மையும் எங்கோ ஒழிந்தது அதை
எதிர்பார்த்த பொய்யும்
வெறியாட்டம் போடுது
மாயையான மாயையாய் மனிதமும்
வேஷம் போடாமல்தான் திரியுது
உலகமே இதைக் கண்டு வியக்குது!

முல்லைவர்மன்
முள்ளியவளை



## கரம் கொடுப்போம்

சென்றுவிட்ட சுகமிழந்து
எஞ்சிவிட்ட பொருட்களையும்
கைநழுவ விட்டிடாமல்- தினம்
துரத்தி வரும் நீரலையில் நின்று நிதம்
தத்தளிக்கும் எம் பாச உறவுகளின்
பரிதாபம் நினைக்க
நம் உள்ளம் எல்லாம்
வெடிக்கிறதே -இருந்தும்
உயிர் பிழைத்திட துடிக்கும் அவர்(கள்)
துயர் அகற்ற நாமும் துடிக்கின்றோம்
அவர் கரம் பற்றி
ஒரு துயர் அகற்றும்
நிலை தொடர்பாய் நாமும்
இங்கு யோசிக்கின்றோம்!

சோலைநகர்
அருள்யோண்சன்
கிளிநொச்சி

## தமிழினம்

தண்ணீரில் மிதப்பது
நீங்கள் மட்டுமல்ல
தமிழினமும்கூட...
போரின் வடு ஆறுவதற்கு முன்
இப்படியொரு துன்பம்
தமிழினத்திற்கு
தேவைதானா???
எமதினத்தை
யார் காப்பாற்றுவார்...

பி.அலன் ரிச்சோ
பொலிகண்டி

# மௌனத்தின் தேடல்- 278

## உயிர்த்துடிப்பு

மேடு பள்ளம் பாராமல்
பரவி நிற்கும் வெள்ளம்
கள்ளமில்லா
தந்தை உள்ளம் தன்னை
மூழ்விட்ட போதும்
பிள்ளைச் செல்வங்களின்
பள்ளிப் பையை உயர்த்தி
சிகரம் தொடுகின்றது
பாசத்தின் உயிர்த்துடிப்பு

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## தரையில் தத்தளித்த மீன்கள்

மானிடா! ஏன் இந்த நிலை
உணவுகள் இல்லை
உறவுகள் உடமைகள்
உயிரிழப்புக்கள்...
மனித இனங்களின் அகோரச்
செயல்களின் விளைவுதனில்
சீற்றம் கொண்ட இயற்கை
அன்னை சொரிந்த
கண்ணீர்த்துளிகள் தானோ!
சென்னையில் சிலநாள்
வெள்ளத்தில் மூழ்கிய
பரிதாப நிலை...

எஸ்.அகல்யா
சண்டிலிப்பாய்

## எம் உறவுகளே

உயிர் பிழைக்க வேண்டுமென்று நாம்
கடவுளிடம் கெஞ்சி எல்லாம் கேட்டபோதும்
போரடிக்கும் பேரலையும் சற்றும்
அங்கு குறையவில்லை
எம் தொப்புள்கொடி உறவு
உம் நிலைகள் நினைக்கும்போது
கல்கூட கசிந்துருகும் இவ் அவலம்
இனி எம் கண் காண வேண்டாம்
இறைவா நீயாகுதல்
மனமிரங்கி தமிழகத்து எம் உறவை
உடன் காக்க வேண்டும்

எ.யூட்கமில்டா
கிளி/ உருத்திரபுரம் ம.வி.

## கைகொடுக்க யாருமில்லையா?

தன்னுயிரை தஞ்சமென
தண்ணீருக்குள் தத்தளித்து
தன்னகத்தே பையுடனே
தவித்து வரும் தமிழரிவரை
கைகொடுத்து மீட்க
யாருமில்லையா!
முதுமையே முன்னிற்க
தனிமுதுகையே முற்காட்டி
தன் முன் கரத்தை காட்டி
உதவிக்கரம் கேட்கும் தமிழரை
கைகொடுத்து காப்பாற்ற
யாருமில்லையா!

எல்.ஜனார்த்தன்
சாவகச்சேரி

## சாகசம்

மனிதா!
இயற்கையின்
கொடூர சதியால்
நீ தண்ணீரிலே
தத்தளிக்கின்றாய்
துயரப்படாதே
இயற்கையின் சதியை
உன்னால் வெல்ல முடியும்
வெள்ளத்திலே வள்ளம் விட்டு
வள்ளத்தையே உனது
வசதி நிறைந்த
அரண்மனையாக்கி
சந்திர மண்டலத்து
ஆம்ஸ்ரோங்கை
கோழையாக்கி
சிகரம் தொட்டுப்பார்
வாழ்க்கையென்றால்...?...?...?

இரா.ஜெ.துஷ்யந்தா
மாதகலூர்

# மௌனத்தின் தேடல் -279



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 16.12.2015ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# மனவெளி

**வன்முறையின் தோற்றுவாயும் அதனைக் கையாளும் வழிமுறையும் எனும் தலைப்பில் ரீ.விஜயசங்கர் எழுதிய கட்டுரையாக்கத்தைத் தொடர்ந்து இவ்வாரம் குடிபோதை உடல் உளத் தாக்கங்கள் எனும் தலைப்பில் இர. சந்திரசேகரசர்மா எழுதிய கட்டுரையாக்கம் இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.**

இன்று யாழ். குடாநாட்டில் மது அருந்தும் பழக்கம் மக்களிடையே அதிகரித்துள்ளது. அதிக இளைஞர்களும் இதற்கு அடிமையாகின்றார்கள். குடிப்பவர்கள் தாம் குடிப்பதற்குப் பல காரணங்களைக் கூறுவர். எப்படியோ குடிக்கு அடிமையாகித் தமது உடலையும் உளத்தையும் கெடுத்துக் கொள்கிறார்கள்.

## உடலில் ஏற்படும் பாதிப்புக்கள்

பசியை ஏற்படுத்த வேண்டும் என்று பலர் குடிக்கிறார்கள். ஆனால் அதிகளவில் மது அருந்துபவர்கள் பசியையே இழந்து தனது உணவையே கவனிக்காது விடுகிறார்கள். இதனால் போசணைக்குறைபாடு, நோய் எதிர்ப்புச் சதி குறைவுபடுதல், நோய்த் தொற்று முதலியன ஏற்படுகின்றன.

## ஈரலுக்கு ஏற்படும் பாதிப்பு

பலவிதமான பாதிப்புக்கள் ஈரலுக்கு ஏற்படலாம். சிரோசிஸ் என்பது (Cirrhosis) என்பது முக்கியமான பாதிப்பு ஆகும். ஈரல் சுருக்கமடைந்து கடினமாகி, கருகி மெல்ல மெல்லத் தமது தொழிற்பாடுகளை இழக்கும். ஈரல் கலங்கள் நார்த் தன்மையாகி அழிகின்றன. மதுவைத் தொடர்ந்து அருந்துவதால் ஏற்படும் சிரோசினால் உலகில் அதிக மரணங்கள் ஏற்படுகின்றன.

## உணவு வாய்க்கால் இரப்பையில் ஏற்படும் பாதிப்பு

மதுவின் காரணமாக இரைப்பையில் அழற்சி, புண், புற்றுநோய் என்பன ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. உணவுக் கால்வாயில் இரத்தப்பெருக்கு ஏற்படலாம். வாய், தொண்டை ஆகியஉறுப்புக்களில்புற்று நோய் ஏற்படவும் கூடும்.

சதையச் சுரப்பி (இன்சுலின் சுரப்பது) மதுவினால் படிப்படியாக அழிகிறது. திடீரென சதைய அழற்சியும் ஏற்படலாம்.

## இதயநோயும் அதி குருதி அமுக்கமும்

இதயத்தின்தசைகளை மது பாதிக்கலாம். இதனால்நாட்பட்ட இதயநோய் ஏற்பட்டு இதயம் முற்றாக இயங்க முடியாத நிலை ஏற்படலாம். அதிக மதுவினால் அதிகுருதி அமுக்கம் அதிகரித்து பாரிசவாதம் (Stroke) ஏற்படலாம்.

## மூளை நரம்புத் தொகுதியில் ஏற்படும் பாதிப்பு

மதுவினால்மூளைபல வழிகளிலும் பாதிக்கப்பட்டுபலவித நோய்கள் ஏற்படலாம். உறுப் புக்களுக்குச் செல்லும் நரம்புகள் பாதிக்கப்படுவதால் அசைவும் புன்னுணர்ச்சிக ளும் பாதிக்கப்படுகின்றன. உடற் தசைகளும் பல விதங்களிலும் பாதிக்கப்படுகின்றது.

## பாலியல் செயற்பாடும் மதுவும்

பாலியல் செயற்பாட்டைக்கூட்டும்என்றுநம்பியே பலரும் மதுவை எடுக்கின்றனர். ஆனால் அதிலும் ஏமாற்றம்தான். மது பாலியல் செயற்பாட்டை குறைக்கவே செய்கின்றது. நீண்டகாலம்மது அருந்துபவர்கள் தனது ஆற்றலையும்ஆண்மையையும் இழப்பர்.மனைவியை எப்போதும் சந்தேகம் கொள்பவராக இருப்பர்.

## உளத்தில் ஏற்படும் பாதிப்புக்கள்

மதுவைத் தொடர்ந்து குடித்துவர உடல் அதற்குப் பழக்கப்பட்டு சகிப்புத் தன்மை (Tolerance) ஏற்பட்டு விடுகின்றது. இதனால் அதிகளவு மதுவை எடுக்கவேண்டிய நிலை ஏற்படும். நிலைமை மோசமடையமனக்கவலைதான் அதிகரிக்கும். பின்னர் மனக் கவலையை மறக்க என்று கூடியளவில் மதுவை அருந்துவர். அதிக மது நரம் புத் தொகுதியையே சோர்வுறச் செய்துவிடும். இதனால் மனச் சோர்வு உண்டாகி சந்தேகம், விரக்தி, துக்கம், பயம் என்பன ஏற்படும். சாதாரண மக்களிலும் பார்க்க குடிப்பவர்களிடம் இந்த மனச் சோர்வு, பயம் என்பன 50 மடங்குஅதிகமாகக் காணப்படுகின்றது. இதுவே தற்கொலை எண்ணத்தைத் தோற்றுவிக்கிறது.

## மதுவினால் ஆளுமையில் ஏற்படும் மாற்றங்கள்

மதுவினால் ஒருவ ரில் நடத்தை மாற்றம் ஏற்படுகின்றது. இதை மற்றையவர்கள் விரும்பாமல் போகலாம். வெறுத்தொதுக்கும் நிலையே ஏற்படும்.

பொது இடங்களில் இவ்வித நடத்தைகள், தம்மைப் பற்றிப் புளுகுதல், அலுப்பூட்டுதல், கோமாளித்தனங் கள், அவரது மனைவிக்கு வெட்கப்படத்தக்க சூழ்நிலை ஏற்படுத்தலாம். பாலியல் குறைபாடுகளினாலும் மனைவி அலுத்துப் போய் பிரச்சினைகள் உருவாகும். நிரந்தரப் பிரிவுகளும் ஏற்படலாம்.

## பிற உளவியற் குறைபாடுகள்

நீண்டகாலம் அதிகளவு மது அருந்துபவர்களில் குறுகிய கால மறதி (Short term amnesia or memory black out) என்னும் ஒரு நிலை பெரும்பாலும் காணப்படும். மாலை வேளைகளில்மது அருந்தி விட்டு எல்லோரிடமும் ஒன்றாகக் கதைத்துப் பழகி வீட்டுக்குத் திரும்பிய ஒருவர் மறுநாள் காலையில் முதல் நாள் மாலையில் நிகழ்ந்தவற்றை நினைவுக்குக் கொண்டுவர முடியாதவராக இருத்தலே குறுகிய கால மறதி ஆகும். அவர் எப்படி வீட்டுக்குத் திரும்பி வந்தார் என்பதையே மறந்த நிலையில் இருப்பார். 20 சதவீதம் மது அருந்துவோரில் இது காணப்படுகின்றது. இது அவருக்கும் அவரைச் சேர்ந்த மற்றவர்களுக்கும் மிக ஆபத்தான நிலையாகும்.

## தடுப்பு முறைகள்




குடிக்கு அடிமையானவர் ஒருவர் குடியை விட விரும்பினால் அவருக்குப் பல வழிகளிலும் உதவும் முறைகள் இருக் கின்றன.

அவற்றில் முக்கிய மானது குழுச்சிகிச்சை (Group therapy) என லாம். இம்முறையில் குடியை விட்டவர்களு டன் குடியை விட விரும் புவோர் கூடிக் கலந்துரையாடி அவர்களின் அனு பவங்களைப் பகிர்ந்து கொள்வதாகும். நாமும் அவர்களைப் போல குடியை விட்டு இயல்பான, அமைதியான வாழ்வுக்குத் திரும்ப முடியும் என்ற நம்பிக்கையைப் பெறுகின்றார்கள். வாரத்திற்கு ஒருமுறை ஒரு குறிப்பிட்ட நாளில் சந்திப்பதன்மூலம் குடியை முற்றாகவே விட்டுவிட வழிபிறக்கிறது.

குடியை முற்றாக விடுபவர் வைத்திய ஆலோசனையுடனேயே விட வேண்டும். அப்போதுதான்குடியை விட்டவுடன் ஏற்படும் டிலிரியம் றெமன்ஸ் (Dilirium trements) மாயத் தோற்றங்கள் உண்டாதல், கை விரல்கள் நடுங்கு தல், வலிப்பு ஏற்படுதல் போன்ற நிலைகளுக்கு வைத்திய சிகிச்சை அளிக்க முடியும்.

ஒருவர் குடியை விடுவதற்கும் அவரின் மனைவி குடும்பத்தினர் அனைவரினதும் ஒத்துழைப்பு மிகவும் தேவையாக இருக்கும்.

இவ்வித குழுச்சிகிச்சை (Group therapy) யாழ். போதனா வைத்திய சாலையில் உள நலப் பிரிவில் (32ஆம் அறை) உளநல வைத்திய நிபுணர் பேராசிரியர் தயா சோமசுந்த ரம் அவர்களின் வழிகாட்டலில் ஒவ் வொரு வியாழக் கிழமையும் காலை 8.30 மணியிலிருந்துநடை பெறுகின்றது.

குடியை விட விரும்புபவர்கள் இதில் எவ்வித பயமுமின்றி நேரில் வந்து கலந்து கொள்ளலாம். இவர்கள் கதைகதையாகச் சொல்லும் விடயங்கள், இவர்களின் மனைவிமார் சொல்லும் துன்பக் கதைகள், கண்ணீர்க் கதைகள் மிக இரகசியமாகவே வைக்கப்படும்.

எனவே இந்த குடிபோதை, புகை அற்ற ஒரு அமைதியான சமுதாயத்தை நோக்கிய இந்த நீண்டபயணத்தில்குடியை விட விரும்புபவர்கள்அனைவரும் வந்து நேரில் கலந்து கொண்டு பயன் பெறலாம்.

வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தரமானவை துறை சார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.

**அனுப்பவேண்டிய முகவரி : சாந்திகம் ஊடகக்குழு,**
**8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக் களும் ஏற்றுக்கொள்ளப்படும்:

Email: psych@sltnet.lk
Face book: Shanthiham



# சுத்தமான எரிசக்திப் புரட்சிக்கு ஆயத்தமாகும் உலகம்

## வளிமண்டலத்தில் பச்சைவீட்டு வாயுக்களின் மட்டத்தைக் குறைக்க நடவடிக்கை

ஐக்கிய நாடுகள் சபையின் பருவநிலை மாற்றம் குறித்த மாநாடு அண்மையில் பாரிஸில் நிகழ்த்தப்பட்டது. இம்மாநாட்டில் உரையாற்றிய ஐ.நாவின் பொதுச்செயலாளர் நாயகம் பான்கிமூன் உலக நாடுகள் சுத்தமான எரிசக்திப் புரட்சியை மிகவிரைவில் மேற்கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருந்ததோடு பருவநிலை பேரழிவை நோக்கி, காலம் நகர்ந்து கொண்டிருக்கிறது. இதற்குத் தீர்வாக, முற்றிலும் வேறு வகையில் மாற்றத்தைக் கொண்டு வரும் விதத்தில் உடன்படிக்கைக்கான தேவை எழுந்துள்ளதையும் விளக்கியிருந்தார்.

இம்மாநாட்டில் ஐக்கிய அமெரிக்கா, ஐக்கியராச்சியம், சீனா, இந்தியா, இலங்கை, பிரான்ஸ், கனடா, அவுஸ்திரேலியா மற்றும் அரபுநாடுகள் உட்பட பல நாடுகளின் தலைவர்கள் பங்குபற்றியிருந்தனர். இவர்களைவிட விசேட பிரதிநிதிகளும் பங்குபற்றியிருந்தனர். இவ்வாறு பங்குபற்றியவர்களில், *மக்கிறோசொவ்ற்* நிறுவனத்தின் ஸ்தாபகரான *பில்கேற்றும்* ஒருவர். இவரும் அங்கு முக்கியமான உரைகளை நிகழ்த்தியுள்ளார்.

விசேட பிரதிநிதிகள் உட்பட உலகநாடுகளின் தலைவர்கள் பலரும் இதுவிடயமாக சிறப்பான உரைகளை நடத்தியதோடு மாநாட்டின் இறுதியில் காலநிலை மாற்றத்தால் எழும் சவால்களை எதிர்கொள்வது தொடர்பாக விரைந்து செயற்படுத்தப்பட வேண்டிய நோக்கங்கள் பணிகள் பற்றியதான கொள்கைகள் முடிவுகளை எட்டியிருந்தனர். அதன் படியாக, சுத்தமான எரிசக்திக் கூட்டணியின் அறிக்கை கடந்த நவம்பர் 30-ல் பிரான்சில் வெளியிடப்பட்டது. அவ்வறிக்கையின் சுருக்கம் வருமாறு.

நீண்டகாலமாக நாம் எதிர்நோக்கிவரும் பருவநிலை மாற்றத்தின் சவால்களுக்கு பொறுப்பேற்கும் வகையில் பரவலாக சுத்தமான எரிசக்தி கண்டுபிடிப்புகளை முடுக்கிவிடுவது என்பது, தவிர்க்க முடியாத விளைவாக உருவெடுத்துள்ளது. தேவையான அனைவருக்கும் கிடைக்கக்கூடிய, சக்திப் பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கக்கூடிய நம்பிக்கையான மலிவான எரிசக்தியை ஒவ்வொருவருக்கும் வழங்கும் அவசியம் உள்ளது. மலிவான சுத்தமான எரிசக்தி தொழில் நுட்பங்களை ஊக்குவித்தில், புத்துயிர்பெறச் செய்தல், அபிவிருத்தி செய்தல் ஆகிய செயற்றிட்டங்களின் போது, கண்டுபிடிப்புகளில் வேகம், மாற்றங்கள் மற்றும் பரப்புதல் ஆகிய தேவைகள் உள்ளன.

இந்தக் காரணங்களுக்காக, மாநாட்டில் பங்குகொண்டுள்ள நாடுகள், எரிசக்தி கண்டுபிடிப்புகளையும் பயனுள்ள வகையில் செய்வதற்கு பொதுமக்களையும் தனியார்களையும் ஊக்குவிக்கவும் புத்துயிர்ப்பூட்டவும் இணைந்து செயற்படவேண்டும். எதிர்காலத்தில் கூடுதல் நாடுகள் இத்திட்டத்தில் சேர ஊக்குவிக்கப்படும்.

சுத்தமான எரிசக்தி புதுமையில் அரச முதலீடுகளை இரட்டிப்புச் செய்தல், பங்கேற்கும் ஒவ்வொரு நாடும் தமது அரசின் அல்லது அரசாங்கத்தின் சுத்தமான எரிசக்தி, ஆய்வு அபிவிருத்திகு இரட்டிப்பு நிதி முதலீட்டை ஐந்து வருடங்களிற்கு செயற்படுத்தல்.

பங்கேற்கும் நாடுகளின் வேறுபட்ட பொருளாதர, சந்தை நிலைகளுக்கேற்ப நிலைமாற்ற சுத்தமான எரிசக்தி தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள் மீதான புதிய முதலீடுகள் கவனத்தில் கொள்ளப்படும்.

வணிகமயமாக்கலை முன்னேற்றுகின்ற தனியார் முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் ஆய்வுகளும் அபிவிருத்திகளும் வடிவமைக்கப்படும்.

பங்கேற்றுள்ள ஒவ்வொரு நாட்டின் சுத்தமான எரிசக்தி கண்டுபிடிப்புகளும் முன்னேற்றங்களும் தனிப்பட்ட மற்றும் தேசிய முன்னுரிமைகளைப் பிரதிபலிக்கும். பங்குகொள்ளும் எல்லா நாடுகளும் பொருத்தப்பாடான வழியில் சுத்தமான எரிசக்திபு புரட்சியை விரைவுபடுத்தும் வகையில் பொதுவான இலக்கைப் பகிர்ந்து கொள்ளும். இந்த முயற்சி சிக்கலான தொழில் நுட்பங்ளை மலிவாகப் பெற்றுக்கொண்டு செயற்படுத்த உதவும்.

### தனியார்துறை, மற்றும் வணிகத் தலைமை

வர்த்தகத் தேவைகள், வணிகமயமாக்கலில் முக்கிய பங்கு வகிக்கின்றது. அத்துடன் சுத்தமான எரிசக்தி முன்னேற்றங்களின் விலை-பயன்திறன், பங்கேற்கும் நாடுகள் தமது முந்தையகட்ட சுத்தமான எரிசக்திக் கம்பனியுடன் நெருக்கமாக இவ்வேலைகளைச் செய்வது, பற்றி தாமே நிர்ணயிக்கும்.

பங்குகொள்ளும் நாடுகள் விசேடமாக, முதலீட்டுக்குழுக்களை ஆக்குவதில் சுத்தமான எரிசக்தி முன்னேற்றக் கூட்டணி ஊடாகச் செய்யும்.

10 நாடுகளிலிருந்தும் மற்றும் பல முக்கியமான பொருளாதாரத் துறைகளிலிருந்தும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றவர்களான இந்த முதலீட்டுக் குழுவினர், ஆய்வு அபிவிருத்தி வேலைகளை கொண்டு இயக்குவதற்கு தயார்ப்படுத்தப்படுவர்.

சுத்தமான எரிசக்தி கண்டுபிடிப்புக் கூட்டணியின் கொள்கைகளில் கூறப்பட்டுள்ளபடி பங்குகொள்ளும் நாடுகளில் முலீட்டுக்கான வாய்ப்புகள் கவனத்தில் கொள்ளப்படும். இந்நாடுகள், சுத்தாமான எரிசக்திக்கண்டுபிடிப்புகளுக்கும் இத்திட்டத்தில் முதலீட்டை அதிகப்படுத்தும் தனியார் துறையினரையும் பங்காளிகளாக்கிக் கொள்ளும்.

### ஸ்தாபகம்

பங்கேற்கும் நாடுகள், ஒரு வெளிப்படையான, பயனுள்ள முறையில் மிஷன் கண்டு பிடிப்புகளை நிறைவேற்ற வேண்டும்.

நாட்டிலுள்ள சர்வதேச நிறுவனங்களின் பங்களிப்புடன் வேலைசெய்தல். தொழில் நுட்பக் கண்டுபிடிப்பாளர்கள், தரவுகள், தொழில்நுட்ப நிபுணத்துவம், ஆய்வுகள் ஆகியவற்றை வணிகமயமாக்கலை முன்னேற்றும் வகையில், சுத்தமான எரிசக்தி கண்டுபிடிப்பு, தொழில் நுட்பம் உலகச் சந்தையை ஊடுருவி அடைய வேண்டும். முதலாவது ஸ்தாபகக் கூட்டம் 2016 இல் ஆரம்பிக்கப்படும்

### தகவல் பரிமாற்றம்

பங்குபற்றும் ஒவ்வொரு நாடுகளும் சுத்தமான எரிசக்தி ஆய்வு அபிவிருத்தி விளைவுகளை வருடாந்தர அடிப்படையில் வெளிப்படையானதாகவும் எளிதானதாகவும் வழங்கவேண்டும். இப்பணிகளுடன் இணையும் தனியார் மற்றும் பொருத்தமான துறைகளை இணைத்து பரப்பி முதலீட்டு முடிவுகளை மேம்படுத்தும் பொருட்டு செயலாற்றல்.

-பாமா

இதேவேளை, இம்மாநாட்டின் முக்கியமான ஒப்பந்தம் ஒன்றும் வெளியாகும் என எதிர் பார்க்கப்படுகிறது. அதன்படி புவியின் வெப்பநிலை அதிகரிப்பை 1.5 °C இற்கு மேற்படாமல வைத்திருப்பதற்கு ஏற்ப ஆரம்ப தொழிற்மட்டங்களை பராமரித்தல் என்ற விடயம் முக்கிய இடம் பெற்றுள்ளதாக நேற்றைய செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்பொழுது இவை 2.5°C வெப்ப நிலை அதிகரிப்பைக் காட்டுகின்றநிலையில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.




World leaders launch *Mission Innovation* at the United Nations Climate Change Conference 2015 (COP21) in Paris-Le Bourget, France, November 30, 2015.
Leaders supporting *Mission Innovation*, but not shown, are Park Geun-hye, President of the Republic of Korea; Stefan Löfven, Prime Minister of the Kingdom of Sweden; Angela Merkel, Chancellor of the Federal Republic of Germany; Malcolm Turnbull, Prime Minister of Australia.

# உன்னால் முடியும்!



சிறுகதை

சுவதீர் காலத்துக் காற்று அனைவரதும் மேனிகளையும் சிலிர்க்க வைத்தது. புல்லரிக்கும் மேனியைப் பொருட்படுத்தாது, தன் பாடத்தில் முழுக்கவனத்தையும் செலுத்திக் கொண்டிருந்தான் குமரன். அவனது தாயான புவனம், அந்த அறை முழுவதையும் வேப்பம்பு கையினால் நிறைத்துக்கொண்டிருந்தாள். நுளம்பின் தொல்லை தன் மகனின் படிப்பிற்குக் குந்தகம் விளைவித்து விடக்கூடாது என்பது மட்டும் அவளது நோக்கமல்ல. நுளம்புக்கடியின் பாதகத்தை அவள் நன்கு பட்டுணர்ந்தவளாயிற்றே.

சென்றவருடம் இதேபருவநிலை. குமரன் க.பொத.சாதாரண தரப் பரீட்சைக்கு தன்னை நன்கு தயாா்ப்படுத்தியிருந்தான். வகுப்பில் அவன் முதல் மாணவன். அவனது பரீட்சை பெறுபேறு பாடசாலைக்குப் பெருமை சேர்க்கும் என ஆசிரியர்களும் அதிபரும் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தனர். பரீட்சை நெருங்க, அதற்குரிய அனுமதி அட்டையும் கைக்கு வந்துவிட்டது. இன்னும் மூன்று நாட்கள்தான் பரீட்சைக்கு பாக்கியிருந்தன.

திடீரென தலையை வலிக்கிறது என்று படுத்த குமரன் கடும் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டான். அருகிலுள்ள வைத்தியசாலைக்கு மகனை அழைத்துச்சென்று காட்டினாள். அங்கு மருந்து மாத்திரைகள் தரப்பட்டன. மருந்துகளை நேரம் தவறாது கொடுத்தும் குமரனது நிலையில் முன்னேற்றம் எதுவும் தென்படவில்லை. அவனது உடல் சோர்ந்ததுடன் தலைவலி வேறு அவனை வாட்டி வதைத்தது. வைத்தியர்கள், அவனை யாழ் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுமாறு பணித்தனர். பரீட்சைக்கு இன்னும் ஒரு நாளே பாக்கியிருந்த நிலையில் புவனம் அவனை பெரியாஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றாள். அங்கு அவனுக்கு இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அவன் டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருப்பதாக மருத்துவர்கள் சொன்னபோது புவனம் செயலிழந்து போனாள். மகனது கல்வியைப் பற்றிய சிந்தனை அவளது மனதிலிருந்து கலைந்து போய் மனம் தளர்ந்துவிட்டாள். பிள்ளை இந்தக் கொடிய நோயிலிருந்து மீளவேண்டுமென்ற பிரார்த்தனையைக் கைவிடாது, வைத்தியசாலைக்கும் கோயிலுக்குமாய் நடந்து கொண்டிருந்தாள்.

சுகாதாரப் பணிமனை ஊழியர்கள், அவர்களது வீடு, சுற்றுப்புறச் சூழல் என அந்த வட்டாரத்தையே தங்கள்கண்காணிப்பின்கீழ்கொண்டு வந்ததுடன் நுளம்புகளையும் ஒழிக்கும் மருந்துகளையும் அடித்தனர். அவர்களது அறிவுறுத்தலுக்கு செவிசாய்த்து புவனமும் தனது வளவு சுற்றச்சூழலில் நீர் தேங்காதவாறு பார்த்துக்கொண்டாள். எனினும் பெய்து வந்த தொடர்மழையால் பொழுது மங்கும் வேளையிலும் அதிகாலையிலும் நுளம்புகளின் புழக்கம் இருக்கத்தான் செய்கிறது.

நுளம்புத்திரியின் பாவனை குமரனுக்கு ஒத்துவராது. ஓயாது இருமலை ஏற்படுத்தும். எனவே அவள், வேப்பம்புகை போடுவதை வழக்கமாக்கிக் கொண்டுவிட்டாள். தவிரவும் அவளைப் போன்ற ஏழ்மைநிலையில் நிலையில் வாழ்பவர்கள், இயற்கையின் வளத்தைத்தானே உபயோகப்படுத்த முடியும்.

ஒருவாறு குமரன் உடல்நிலை தேறி வந்தாலும், அவனது மனநிலை தேறவில்லை. பரீட்சை எழுதமுடியாமல் போய்விட்ட தவிப்பு அவனை ஆட்கொண்டது. தனது மனநிலையை நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்றால், அவர்களும் அவனது வீட்டுப் பக்கம் வருவதில்லை. அதற்குக் காரணம் அவர்களது பெற்றோர்கள்தான். டெங்குபரப்பும் நுளம்பு குமரனது வீட்டுச் சூழலிலிருந்து அவர்களுக்கும் டெங்கைக் கொடுத்துவிடுமோ என்றபீதிதான்.

மாதம் ஒன்று கழிந்து தையும் பிறந்தது. குமரன் மனச்சோர்வுடன் வீட்டுக்குள் வளைய வந்தான். அம்மா, அவனுக்கு ஆறுதல் கூறுவாள். "நீ ஒன்றுக்கும் யோசியாதை ராசா. ஏதோ கண்ணிலை வந்தது புருவத்தோட போனமாதிரி நீ உயிர்தப்பித்ததே பெரிய காரியம். நீயும் இல்லையெண்டால் உன்ரை அம்மாவுக்கு இந்த உலகத்தில ஆர் இருக்கினம். கொப்பாவை என்ரை கண்ணுக்கு முன்னால பஸ்ஸில ஏத்திக்கொண்டு போனவங்கள்... இண்டைக்கு அப்படி ஒரு பேர்வழி அங்கை இல்லை எண்டு கை விரிக்கினம். நான் இந்த உடம்பில உயிரை வைச்சுக்கொண்டிருக்கிறது உனக்காகத்தான்."

அம்மாவின் ஆதங்கம் அவனுக்குப் புரிந்தது. இயலாமை நிலையிலிருந்து அவன் இயல்பு நிலைக்குத் திரும்பினான். மனம் சோர்விலிருந்து மெதுமெதுவாக மீண்டது. புத்தகப் பொதியைச் சுமந்தவண்ணம் அவன் பாடசாலைக்கு போய்வரத் தொடங்கினான். அங்கு...ஆசிரியர்கள், அவனுக்கு உற்சாகமளித்து பாடங்களில் அவனது கவனத்தைத் திருப்ப உந்துகோலாகச் செயற்பட்டனர். மகனது நிலைமாற்றம் கண்டு புவனமும் ஆறுதலடைந்தாள். வெள்ளிக்கிழமைதோறும் விரதமிருந்து முருகப்பெருமானை வேண்டிக் கொண்டாள்.

"ஆண்டவனே! இந்த முறையாவது ஒரு விக்கினமும் இல்லாமல் எனது பிள்ளை சோதினை எழுத அருள்தா!"

குமரனும் பாடங்களில் எதுவித சந்தேகங்களும் இல்லாமல் நிறைதகமையுடன் பரீட்சையை எதிர்நோக்கக் காத்திருந்தான். ஆசிரியர்களுக்கு அவன் நம்பிக்கை நட்சத்திரம்.

அன்று மாணவர்களுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கும் நாள். குமரன் முருகனை வழிபட்டு, அம்மாவிடமும் ஆசி பெற்று, பாடசாலைக்கு ஈருருளியில் போய்க் கொண்டிருந்தான். பாடசாலை வாசலில் அவன் உள் நுழைய எத்தனித்தவேளை, பின்னால் வந்த வாகனம் ஒன்று, அவனது ஈருருளியை தட்டிவிட நிலைகுலைந்த அவன் நிலத்தில் விழுந்துவிட்டான். ஒருவாறு தன்னைச் சுதாகரித்துக் கொண்டு எழுந்துநிற்க முற்பட்ட வேளை, அவனது வலக்கரம் ஒத்துழைக்க மறுத்தது. விண்விண்.. ணென்று தெறித்து வேதனையை அளித்தது. இதற்கிடையில் அவனுக்கு உதவ மாணவர்களும் ஆசிரியர்களும் விரைந்து வந்துவிட்டனர்.

அவனுக்கு முதலுதவிச் சிகிச்சை அளித்து வலது கையை தொங்கவிடாது, கழுத்துடன் இணைத்து முடிச்சுப்போட்டனர். சிவபாலன் மாஸ்டரும் ஜெயசீலன் மாஸ்டருமாக அவனை உந்துருளியில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைத்துப் போயினர். அங்கு, அவனுக்கு பலவித பரிசோதனைகளின் பின் மணிக்கட்டு எலும்பில் வெடிப்பு ஏற்பட்டிருப்பதாகக் கூறி, சத்திர சிகிச்சைக் கூடத்துக்கு அனுப்பி வைத்தார்கள்.

விடயமறிந்த புவனம் தலையில் கை வைத்து ஓ..வென்று அழுதாள். "முருகா..முருகா..! என்னை ஏன் இப்படிச்சோதிக்கிறாய்..?" என அரற்றியவள், ஆவேசத்துடன் புறப்பட்டு வைத்தியசாலைக்குப் போனாள். அங்கே.... குமரனுக்கு வலதுகை மணிக்கட்டிலிருந்து முழங்கைவரை மூடிக் கட்டுப் போடப்பட்டதுடன், கையை மடித்து கழுத்தில் இணைத்து தொங்கவிட்டிருந்தார்கள். அம்மாவைக் கண்டதும் குமரன் கேட்ட முதல்கேள்வி இதுதான்...

"அம்மா...! நான் இந்த முறையும் சோதினை எழுத முடியாதா?" அடக்கி வைத்திருந்த துயரம் அணை உடைந்தாற்போல் பொங்கிப் பிரவகித்தது. தாயும் மகனும் ஒருமித்து அழுது தீர்த்தார்கள். மறுநாளே குமரன் வீடு வந்து சேர்ந்தான். மகனைத் தேற்றிச் சமாதனப்படுத்தினாலும் புவனத்தினால் ஏமாற்றத்தைத் தாங்க முடியவில்லை. மனம் தளர்ந்துபோனாள். அன்றிரவு குமரன் தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டான். மனமோ தான் பரீட்சை எழுதுவதற்கு ஏற்படும் தடைகளை எண்ணி வேதனைப்பட்டது. மனோதிடத்தால் எந்தத்தடையையும் தாண்டலாம் என்று அவன் அறிவுரை பெற்றிருக்கிறான்; இருந்தாலும் அதை எப்படிச் செயற்படுத்துவது என்று அவனுக்குப் புரியவில்லை... பரீட்சை எழுதுவதற்கு பதில்கள் தெரிந்தும் எழுத முடியாமல் ஆகிவிட்டதே... என மனம் புழுங்கிக் கொண்டிருந்தவேளையில்... தனது மறுகையால் வெறுமனே தாளில் எழுதிப் பார்த்தான்... இப்படி எழுதினால்... எனக்கு பரீட்சையில் ஒரு பாடத்துக்கு மூன்று மணித்தியாலமல்ல பன்னிரண்டு மணித்தியாலங்கள் தேவை போலுள்ளது... ஆனாலும் அவனுக்குள் ஒரு உத்வேகம் பிறந்தது... திரும்பத்திரும்ப தனது பெயரை இடது கையினால் எழுதிப்பார்த்தான்... தொடர்ந்து முயற்சிக்கையில் தனது பெயரை எழுதுவதற்கான நேரம் குறைவதை அவதானித்தான்.

அவன் மேலும் உத்வேகம் கொண்டான்! தனது புத்தகத்தின் பந்தியை விரைவாக எழுத முயன்றான்! அவனது முயற்சி பலிதமாவதை மனமார உணர்ந்தான். அவனது மனம் திடங்கொண்டது. எப்படியாவது இடது கையினால் இந்தப் பரீட்சையை எழுதிமுடிப்பதுதான் என்று.

கடந்த கால வினாத்தாள்களுக்கான பதில்களை விரைவாக இடது கையினால் எழுதி, படங்களை வரைவதற்கு குனிந்து தனது வலது கரத்தை மெதுவாக இணைத்து அடிமட்டத்தைப் பிடித்து படங்களை வரைவதற்குப் பயிற்சி எடுத்துக்கொண்டிருந்தான்.

உடலுக்கும் தெம்பை வரவழைத்துக் கொண்டு, மனதிலும் உறுதியை உருவாக்கிக்கொண்டு நிமிர்ந்திருந்து உற்சாகத்துடன், இடது கையினால் எழுதிப்படித்துக்கொண்டிருந்தான்.

மகன் மேசையின் முன் அமர்ந்து படிப்பதைக் கண்ணுற்ற புவனம், அதிசயித்தாள். "அம்மா! கவலைப் படாதையுங்கோ. நான் இம்முறை பரீட்சை எழுதத்தான போகிறேன்! படிப்பதோடுகூட விரைவாக எழுதுவதற்கும் பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கிறேன்; நிச்சயம் சாதித்து விடுவேன் அம்மா!" அவனது வார்த்தைகள் வயிற்றில் பால்வார்த்தது போல் இருந்தது புவனத்துக்கு. மகனை ஆரத்தழுவிக்கொண்டாள்.

பரீட்சையில் அனைவரும் வியக்கும் வண்ணம் குமரன் இடது கையால் தங்கு தடையின்றி எழுதினான் குமரன். எழுத்து மட்டும் சற்று அழகு குறைவாக இருந்தது. ஆனால், பரீட்சை அவனுக்கு இலகுவாக இருந்தது. மாதங்கள் சில நகர்ந்தன. குமரனது மணிக்கட்டும் அவிழ்க்கப்பட்டு, சில அப்பியாசங்களின் பின் வழமை நிலைக்கு திரும்பிவிட்டது.

அன்று பாடசாலையில் ஒரே ஆரவாரம். காரணம் க.பொ.த.சாதாரண பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியிருந்தது. சராசரியாக பாடசாலை மாணவர்களுக்கு நல்ல பெறுபேறுகள் கிடைத்ததுடன் அதன் உச்சமாக மாவட்ட மட்டத்தில் முதல் நிலையை குமரன் பெற்றிருந்தான். அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் பெருமித்துடன் கூடிய மகிழ்சி. புவனமும் குமரனும் அதற்கு விதிவிலக்காவர்களா...என்ன..! புவனம் முருகனுக்கு மனமார நன்றி செலுத்தினாள்.

செய்தி அறிந்து குடாநாட்டுப் பத்திரிகைகளின் ஊடகவியலாளர்கள் பலர் குமரனைச் சூழ்ந்துகொண்டனர். "வலது கைக்கு முடியாத நிலையில் உங்களால் எப்படி இந்தச் சாதனையை நிகழ்த்த முடிந்தது?" குமரன் சளைக்காமல் பதிலளித்துக் கொண்டிருந்தான்.

"எனது வலது கைக்கு முடியாமல் போனதும் எனது எதிர்காலமே பாழடைந்துவிட்டதாகவே நானும் முதலில் தாங்க முடியாத வேதனை அடைந்தேன். ஏமாற்றம் என்னைச் செயலிழக்க வைத்துவிட்டது. எத்தனையோ மாற்றுத்திறனாளிகள், பல சாதனைகளைப் புரிந்திருப்பதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அவர்கள் கால்களினால், வாயினால் எல்லாம் எழுதியிருக்கிறார்கள்.

அது எப்படி அவர்களால் முடிந்தது என்று சிந்தித்தேன் எனக்குள் ஒரு தெம்பு வந்தது. எப்படியாவது சாதிக்கவேண்டும் என்று எனக்குள் இருந்த உறுதி, மீண்டெழுந்து, என் மனமும் உடலும் அதற்குத் தயாராகின. எனக்கு கடைசி நேரம் கிடைத்திருந்த முழுநேரத்தையும் விரைவாக விடைகளை இடது கைகளால் எழுதுவதற்குப் பயிற்சி செய்தேன். எனது இந்த முயற்சி, என்னை இயலாமைக்கு வெளியே கொண்டுவந்து விட்டது.

முயன்றால் முடியாதது எதுவுமில்லை என்பதை எனக்கு முதல் பலர் நிரூபித்திருக்கிறார்கள். அதைத்தான் நானும் செய்தேன். அதற்கு என் அம்மா எனக்கு எப்பொழுதும் பக்கத்துணையாக இருந்தார்.

வெற்றியும் தோல்வியும் சகஜமானதுதான். ஆனால்..., தோல்வி நிலையானதல்ல இது எனது அனுபவம்."

**மலரன்னை**

# facebook

# சுமையில் சுகம்...



ஏ வேலு ..!!! வண்டில ஏத்துன சிமெண்ட் மூட்டையலாம் இந்த விலாசத்தில போய் இறக்கிட்டு வந்துடு" என்று விலாசம் எழுதிய தாளை சுப்பிரமணி வேலுவிடம் கொடுத்துவிட்டு சென்றுவிட்டார்...

அந்த விலாசத்தை பிரித்து பார்த்ததும் அது தன் வீட்டருகே உள்ள விலாசம் என்று தெரிந்ததும் தன்னுடைய மீன்பாடி வண்டியை தள்ளிக்கொண்டு கொஞ்சம் உற்சாகத்துடன் சிமெண்ட் கம்பெனில இருந்து புறப்பட்டான்.

தான் போகும் வழியில் தான் தன்னுடைய மகள் செல்வி படிக்கும் பள்ளி இருப்பதாலும் அதே நேரத்தில் பள்ளி விடும் நேரம் நெருங்கி விட்டதாலும் அவளையும் தன்னுடன் வீட்டுக்கு அழைத்து போகலாம் என்று முடிவு செய்து பள்ளிக்கு சென்று அங்கே வெளியே காத்துக் கொண்டிருந்தான்.

வேலு மகள் செல்வி அங்கே இருக்கும் மாநகராட்சி பள்ளியில் முதலாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறாள். அவளை சேர்த்த முதல் மாதம் மட்டும் அவளை பள்ளிக்கு விட்டு அழைத்து வந்தார்கள். அதன் பின் அவள் வீட்டருகே பள்ளிக்கு போகும் மாணவர்களோடு போய் வர பழகிக் கொண்டாள்..

செல்வி பள்ளி விட்டு வெளியே வந்தாள்.

அப்போது ஓரமாய் இருந்த வேலு "அம்மா செல்வி .... அம்மா செல்வி " என்று கூப்பிட்டான்.

செல்வி திரும்பி பார்த்ததும் தன் தந்தை அங்கே நின்று கொண்டிருப்பது தெரிந்ததும் "அப்பா" என மகிழ்ச்சியில் கத்திக்கொண்டே தாவி குதித்து ஓடி வந்து வேலுவின் கழுத்தை இறுக கட்டிக்கொண்டாள்.

தன் மகளை சிமெண்ட் மூட்டையில் மீது ஒரு துணியை போட்டு அதன் மீது அமரவைத்தான். "அம்மு குட்டி போலாமா " என்று செல்லமாய் கேட்டான்.

"போலாம் பா " என்று சிரித்துக்கொண்டே சொன்னாள்...

பள்ளியில் விளையாடிய விளையாட்டை தன் தந்தையிடம் விபரித்துக்கொண்டே வந்தாள் . வேலுவும் ஓ அப்படியா..!!! அப்புறம் நடந்தது யாரு ஜெயிச்சீங்க என்று தன் மகளிடம் சந்தோசத்தோடு பேசிக்கொண்டே வண்டியை ஓட்டிக்கொண்டிருந்தான்.

அப்போது ஒரு மேம்பாலம் குறுக்கிட்டது.

அவர்கள் வீட்டுக்கு சென்றடைய அந்த மேம்பாலத்தை அவர்கள் கடந்தாக வேண்டும். அவன் வண்டியிலிருந்து இறங்கி அந்த வண்டியை மேம்பாலத்தில் தள்ளிக்கொண்டு ஏற்றினான்.

மேம்பாலம் கொஞ்சம் உயரமாக இருந்ததால் வேலு மிகவும் கஷ்டப்பட்டு வண்டியை இழுத்துக்கொண்டு ஏற்றிக்கொண்டிருந்தான்.

இவ்வளவு நேரம் பேசிக்கொண்டே வந்த தந்தை திடீரென்று பேசாமல் இருந்ததை பார்த்து அவரை உற்று நோக்கினாள் செல்வி. வேலு முகம் முழுவதும் வியர்வையால் நனைந்து கொண்டிருந்தது. மூச்சியும் அதிகமாய் வாங்கி கொண்டிருந்தது.

இதை பார்த்த செல்விக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஏதோ ஒன்று நினைத்தவளாய் திடீரென்று . எழுந்து தன்னுடைய புத்தகப்பையை தலை மேல் வைத்துக்கொண்டு ஒற்றைக்காலில் நின்றாள்.

இதை பார்த்த வேலுக்கு ஒன்றுமே புரியவில்லை. வண்டியுடைய பிரேக்கை பிடித்துக்கொண்டு "என்னமா ஆச்சு?" என்று பதறியபடி கேட்டான்.

அதற்கு செல்வி "ஒன்னும் இல்லபா ஏற்கனவே வண்டி ரொம்ப பாரமா இருக்கு. அது பத்தமா நானும் என்னுடைய பையும் பாரமா இருக்கும்ல. அதான் பையை தூக்கி என் தலைமேல வச்சிகினா உங்களுக்கு எடை கம்மியா இருக்கும்.அது போல ஒத்த கால்ல நின்னா பாதி எடை கொரைஞ்சிடும்ல. அப்புறம் நீங்க சுலபமாய் வண்டியை தள்ளலாம்ல" அப்பாவியாய் தன் மழலை குரலில் வேலுவிடம் சொன்னாள் ...

இதைகேட்ட வேலுவுக்கு மகிழ்ச்சியில் ஆனந்த கண்ணீர் லேசாக வந்தது.

அதை துடைத்து கொண்டே "அப்படியா சொல்ற அப்போ நீ சொல்றது சரியாதான் இருக்கும். ஆனா நீ ஒத்த காலில் நிற்க வேணாம், நீ உட்கார்ந்து கொண்டே பையை மடிமேல வச்சிக்கோ! அப்பவும் நீதானே எடையை தூக்கினு இருக்க.. அப்படி செஞ்சா வண்டி தானா கஷ்டப்படாம போய்டும் " என்று மகளிடம் சொன்னான்.

அவளும் அதை ஆமோதித்து வேலு சொல் படியே நடந்தாள்.

தன் மகளுக்கு தான் கஷ்டப்படுவது தெரிய கூடாது என்று "அப்புறம் உங்க விளையாட்டுல என்னமா நடந்தது ? யாரு ஜெயித்தது என்று அப்பாகிட்ட சொல்லவே இல்லையே " என்று கேட்டான்.

"ஓ சொல்லலையா சரி சரி சொல்றேன் " என்று தான் விளையாடிய விளையாட்டை தொடர்ந்து விபரிக்க ஆரம்பித்து விட்டாள் செல்வி.

மறுபடியும் அப்பாவும் மகளும் ஜாலியாய் பேசிக்கொண்டே தன் வேதனையை வேலு முகத்தில் மட்டும் காட்டாமல் அந்த மேம்பாலத்தை மெதுவாய் ஏறி முடித்தான்...

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 573

Search for people, places and things Nagendram Home

ரொகான் நாகலிங்கம்



அபிநயா அபி




தமிழன் புகழ்





ஜக்சன்




தர்சனா



நிமல்ராஜ்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# டெஸ்ட் கிரிக்கெட்டை காப்பாற்றும் சம்பியன்கள்!

நேர்த்தியான கிரிக்கெட்டை ரசிப்பவர்களில் பெரும்பாலானோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளை பெரிதும் விரும்புவர். டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் தான் கிரிக்கெடபோட்டியின் தாய் வடிவம். அதில் இருந்துதான ஒரு நாள் போட்டிகளும், இருபது-20 போட்டிகளும் புதிதாய் உருவாகின. தற்போது அனைவரும் ஓடிக் கொண்டே இருக்கிறோம், இந்த அவசரத்தில் ஐந்து நாட்கள் நடக்கும் கிரிக்கெட் போட்டிகளை ரசிக்க பலருக்கும் நேரமில்லை. குறிப்பாக டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளை நேரில் பார்க்க ரசிகர்கள்வருவது பெருமளவு குறைந்து விட்டது.

அதேசமயம் முன்பு போல இப்போது டெஸ்ட் போட்டிகள் விளையாடப்படுகின்றனவா? என்றால் கண்டிப்பாக இலலை. கடநத இரண்டு, மூன்று வருடங்களுக்கு முன்பு வரை டெஸ்ட் போட்டிகளில் முடிபு கிடைப்பது என்பது குறைவாக இருக்கும். சமநிலையாகும் போட்டிகள் தான் அதிகம். ஆனால், இப்போது வீரர்களின் ஆட்டத்திறன் மாறி விட்டது. டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் பந்து வீச்சாளர்களுக்கான போட்டியாக மாறிக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு நடந்த டெஸ்ட் போட்டிகளில் கிடத்தட்ட 80% போட்டிகளுக்கு முடிபு கிடைத்திருக்கிறது. 10% போட்டிகள்மழையால் சமநிலையானது. மீதி 10% போட்டிகள்தான்ஐந்து நாட்கள் விளையாடியும் சமநிலையானது.

வீரர்கள் தனிப்பட்ட சாதனைகளுக்காக விளையாடி, டெஸ்ட்போட்டிகள் சமநிலை செய்யப்படுவது நல்லதல்ல. நான்காவது இன்னிங்க்ஸ் விளையாடும் அணி, சிறப்பாக விளையாடி தோல்வியை தவிர்க்கப் போராடினால்தான் சுவாரஸ்யமாக இருக்கும். டெஸ்டில் முடிபு கிடைப்பது நல்லதே. ஆனால் ஒரு நல்ல டெஸ்ட்போட்டி அமைய வேண்டும். இரு அணிகளும், துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பாட்டம் என மூன்று பிரிவிலும் சிறப்பாக விளையாட வேண்டும். ஐந்து நாட்களிலும் விளையாடப்படும் 15 செஷனும சுவாரஸ்யத்தை உண்டாக்க வேண்டும். துடுப்பாட்டக்காரரை வீழ்த்த பவுலர்களும், பவுலர்களை சமாளிக்க துடுப்பாட்டக்காரர்களும் கடும் போட்டி போடவேண்டும். டெஸ்ட் கிரிக்கெட்டில் மட்டுமே ஒரு துடுப்பாட்டக்காரர், பவுலர் இருவரின் முழுமையான திறமையும் சோதனை செய்ய முடியும். தடுப்பாட்டம் விளையாடுவது என்பது இலகுவான காரியம் கிடையாது.


மெக்ராத், பிரட்லீ, ஸ்டெயின் போன்ற பந்துவீச்சாளர்கள் பந்துவீசவே வெறுத்துப் போகுமளவுக்கு துடுப்பாட்டம் செய்வது சாதாரண விடயமல்ல. அதேபோல இந்திய மண்ணில ஆசியக் கண்டத்தை தாண்டியவர்கள் ஓட்டங்களை குவிப்பதும் மிக கடினம். இதையெல்லாம் சமாளித்துத்தான் கடந்த தலைமுறை கிரிக்கெட் வீரர்கள்விளையாடினார்கள் ஆனால இன்றைக்கு கடைசி ஓவரில் இரண்டு சிக்சர் அடிப்பவர்களை சிறந்த கிரிக்கெட் வீரர் என கொணடாடும் மனநிலைக்கு வந்து விட்டோம்.

ஆனால்அதையும்தாண்டி டெஸ்ட் கிரிக்கெட் சம்பியன்கள இருக்கத்தான் செய்கிறார்கள். அதேசமயம் அரிதாக இருக்கிறார்கள். எந்த நாட்டு மைதானங்களிலும் சிறப்பாக விளையாடி வரும் துடுப்பாட்டக்காரர்கள் என சல்லடை போட்டு தேடினால், எட்டுப்பேர் மட்டுமே சிக்குகிறார்கள். உலகின் தற்போதைய தலை சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் துடுப்பாட்டக்காரர்கள் இப்போதைக்கு இவர்கள் தான்...



அலிஸ்டர்குக் (இங்கிலாந்து)

31 வயதாகும் அலிஸ்டர்குக் 122 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி, 28சதங்களுடன் 9780 ஓட்டங்கள் குவித்திருக்கிறார். நாக்பூரில் விளையாடிய தனது முதல் டெஸ்ட் போட்டியிலேயே அரைசதம் மற்றும் சதம் எடுத்து இந்திய பந்துவீச்சாளர்களுக்கு கிலி ஏற்படுத்தியவர் குக். உலகிலேயே டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் மிகக் கடினமான விடயம் எது தெரியுமா? இந்தியாவை அதன் சொந்த மண்ணில் தோற்கடிப்பதுதான். ஏனெனில், இந்தியாவில் அயல் நாட்டு துடுப்பாட்டக்காரர்கள் திக்கித் திணறுவார்கள். ஆனால், அலிஸ்டர் குக் இந்தியாவில் டெஸ்ட்போட்டிகளில் வைத்துள்ள சராசரி 61.85. இந்திய மண்ணில் மட்டும் நான்கு சதங்கள அடித்திருக்கிறார். அவரது தனிப்பட்ட அதிகபட்ச எண்ணிக்கை 294 ஓட்டங்களும் இந்தியாவுக்கு எதிராகத்தான் எடுக்கப்பட்டது. இந்தியா மட்டுமல்ல அவுஸ்திரேலிய மண்ணிலும் 15 டெஸ்ட் போட்டிகள் விளையாடி 1288 ஓட்டங்கள் குவித்திருக்கிறார் குக். குறுகிய காலத்தில் அடுத்தடுத்து சாதனைகளை படைத்த குக்கை உலகமே வியந்து பார்த்தது. அரிதிலும் அரிதாக கவாஸ்கரே, 15 ஆயிரம் ஓட்டங்களை கடப்பதும் 50 டெஸ்ட் சதங்களை அடிப்பதும் குக்குக்கு சாத்தியமான ஒன்று என குக்கை பாராட்டித்தள்ளினார்.




ஹாஷிம் அம்லா (தென்னாபிரிக்கா)

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அழுத்தமாக இடம்பிடித்திருக்கும் பெயர் ஹாஷிம் அம்லா. சமீபத்தில் நடந்த இந்திய தொடரில் பெரிய அளவில் ஓட்டங்கள் குவிக்கவில்லை. அதைத்தவிர்த்துப்பார்த்தால் அம்லாவின் சாதனைகள் மகத்தானவை. புகழ்பெற்ற லோர்ட்ஸ் மைதானத்தில் இரண்டு முறை சதம் அடித்த பெருமை ஹாஷிம் அம்லாவுக்கு உண்டு. இங்கிலாந்துக்கு எதிராக ஒரு இன்னிங்க்ஸில் அம்லா 311ஓட்டங்கள் குவித்ததுதான் டெஸ்ட்போட்டிகளில, இன்றுவரை ஒரு தென்னாபிரிக்க வீரரின் தனிப்பட்ட அதிகபட்ச எண்ணிக்கை. இந்தியாவின் நாக்பூர் மைதானத்தில் 253 ஓட்டங்கள் எடுத்தவர் ஹாஷிம் அம்லா.

அவுஸ்திரேலியாவில், பெர்த் மைதானத்தில் 221 பந்துகளில் அதிரடியாக 196 ஓட்டங்கள் குவித்த ஹாஷிம் அம்லாதான, சமீபத்தில் டில்லியில் நடந்த டெஸ்ட் போட்டியில் இந்திய பவுலர்களை விரக்தியின் உச்சிக்கு அழைத்துச்சென்று 289 பந்துகளில் 25 ஓட்டங்கள் சேர்த்தார். உலகின் எப்பேர்ப்பட்ட ஆடுகளத்திலும் சிறப்பாக விளையாடும் திறன்பெற்றவர்.

ஹாஷிம் அம்லா எப்போதுமே ஸ்லெட்ஜிங்கில் ஈடுபடமாட்டார். வெற்றி, தோல்விகளை முறையாக ஏற்றுக்கொள்வார். கடந்த தொடரில் தென்னாபிரிக்கா தோற்றதுக்குக் கூட மற்றவர்களை போல ஆடுகளம் சரியில்லை எனக் கூறவில்லை. மாறாக, கடினமானஆடுகளம், இந்திய அணி எங்களைவிட அனைத்து விதத்திலும் சிறப்பாக விளையாடியதுதான் தோல்விக்குக்காரணம் என வெளிப்படையாக அறிவித்தார். அதுதான் ஹாஷிம் அம்லா!



கேன்வில்லியம்சன் (நியூசிலாந்து)

நியூசிலாந்து வீரர் கேன்வில்லியம்சன் தற்போது உச்சகட்ட ஃபார்மில் இருக்கிறார். சமீபத்தில் பரம எதிரியான அவுஸ்திரேலியாவுடன் நடந்த டெஸ்ட் தொடரில் ஆஸி. பந்து வீச்சாளர்களை தனது அபாரமான துடுப்பாட்டத்தால் கடுமையாக சோதித்தார். தற்போது தரவரிசையில் டாப்-4 இடத்துக்குள் நங்கூரமிட்டிருக்கிறார். இந்தியாவுக்கு எதிராக அகமதாபாத்தில்தான் தனது டெஸ்ட் வாழ்க்கையை தொடங்கினார். அகமதாபாத் டெஸ்ட் போட்டியில், ஷேவாக்கின் சரவெடி சதத்தின் (173) உதவியுடன் இந்தியா 487 ஓட்டங்களைக் குவித்தது. இதையடுத்து களமிறங்கிய நியூசிலாந்து, 137 ஓட்டங்களில் நான்கு விக்கெட்டை இழக்க, ஓல் ரவுண்டராக ஆறாவது வீரராகக் களமிறங்கிய வில்லியம்சன், 299 பந்துகளை எதிர்கொண்டு 131 ஓட்டங்களை சேர்க்க, 459 ஓட்டங்களைக் குவித்தது நியூசிலாந்து. முதல்போட்டியிலேயே அதுவும் இந்திய மண்ணில் சிறப்பாக விளையாடி சதமடித்த வில்லியம்சன், அறிமுகவீரராக நச்முத்திரை பதித்தார்.



ஏ.பி.டி.வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா)

பேரக்கேட்டாலே சும்மா அதிருதில்ல என சுப்பர் ஸ்டார் கணக்காக இணையத்தில் கொண்டாடப்படும் வைரல் நாயகன. கிரிக்கெட் வரலாற்றிலேயே டெஸ்ட், ஒருநாள் போட்டி, இருபது-20 என மூன்று துடுப்பாட்டக்காரர்களிலும் கலக்கும் நம்பர் வன் சம்பியன். டிவில்லியர்ஸை பொறுத்த வரையில் எப்போதுமே சாதனைக்காக விளையாடமாட்டார். டெஸ்ட் போட்டிகளில் 51 .39 சராசரி வைத்திருக்கிறார். டெஸ்ட்போட்டி என்றால் தடுப்பாட்டம் மட்டுமே விளையாட வேண்டும் என அவசியமில்லை. அணிக்குத் தேவைப்படும் நேரங்களில் அதிரடியாகவும், நிதானமாகவும், தடுப்பாட்டம் விளையாடக் கூடியதிறனும் ஒருங்கே பெற்ற அற்புதமான வீரர். டிவில்லியர்ஸ் எந்த மண்ணிலும் சிறப்பாக விளையாடுபவர். குறிப்பாக சுழற்பந்து வீச்சை அற்புதமாகக் கையாளுபவர். சமீபத்தில் நடந்து முடிந்த டெஸ்ட் தொடரில் அதிக ஓட்டங்கள் குவித்தவர்கள் பட்டியலில் ரஹானேவுக்கு அடுத்த படியாக உள்ளார்.



ஜோரூட் (இங்கிலாந்து)

தற்போது டெஸ்ட் தரவரிசையில் நம்பர் வன் சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் நாயகன் ஜோரூட் , குக், அம்லா, வில்லியம்சன் போலவே இந்திய மண்ணில்தான் டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கையை தொடங்கினார் ரூட். இந்தியாவுக்கு எதிராக ரூட் வைத்துள்ள சராசரி எவ்வளவு தெரியுமா? 101.83. உலகிலேயே டெஸ்ட் போட்டிகளில் இந்தியாவுக்கு எதிராக அதிக சராசரி வைத்திருப்பவர் ரூட்தான். ஆறு டெஸ்ட் போட்டிகளில் 611 ஓட்டங்கள் குவித்துள்ளார். ரூட்டுக்கு வயது 25 தான். இருபத்தைந்து வயதில் ரேங்கிங்கில் நம்பர் வன் இடத்தைப் பிடித்த ரூட்டுக்கு பாராட்டுகள் குவிந்த வண்ணம் உள்ளன. விரைவில் டெஸ்ட் போட்டிகளுக்கு இங்கிலாந்தின் கப்டனாக மாறவுள்ளார் என செய்தி தட்டுகின்றன இங்கிலாந்து ஊடகங்கள். ரூட் இதுவரை தென்னாபிரிக்க அணியுடன் ஒருடெஸ்ட் போட்டி கூட விளையாடியதில்லை, இந்நிலையில் தற்போது தென்னாபிரிக்க மண்ணிலேயே தென்னாபிரிக்க அணியை எதிர்த்து இரண்டு வாரத்தில் டெஸ்ட் போட்டி விளையாட போகிறார் ரூட். அங்கே ஸ்டெயினையும், மோர்கலையும் சமாளித்து ஓட்டங்கள் குவித்து விட்டால் ரூட்டுக்கு ஒருபெரிய சபாஷ் போடலாம்!



ஸ்டீவன் சுமித் (அவுஸ்திரேலியா)

இன்றைய திகதிக்கு டெஸ்ட் போட்டிகள் விளையாடுபவர்களில் அதிக சராசரி (55.34) வைத்திருப்பது ஸ்டீவன் சுமித்தான். இங்கிலாந்தின் லோர்ட்ஸ் மைதானத்தில் பாகிஸ்தானுக்கு எதிராக முதல் டெஸ்ட் போட்டியில் களமிறங்கினார் சுமித். அப்போது அவர் துடுப்பாட்டக்காரனும் கிடையாது, ஓல் ரவுண்டரும் கிடையாது. பவுலர் கோட்டாவில் லெக்ஸ் பின்னராக எட்டாவது இடத்தில் களமிறங்கினார். அவர் அடித்த ஓட்டம் ஒன்று. ஆனால், 2013 ஓகஸ்டில் ஆஷஸ் தொடரில் இங்கிலாந்துக்கு எதிராக முதல்சதம் அடித்தார். அடுத்த இரண்டரை ஆண்டுகளில் சுமித் அடித்த சதங்களின் எண்ணிக்கை 12. இரட்டைசதம் ஒன்று. சுமித் எப்படிப்பட்ட துடுப்பாட்டக்காரன் என்பது இப்போது புரிந்திருக்கும். கடந்த ஆண்டு இந்திய அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது சுமித்தை எப்படி வீழ்த்துவது என தடுமாறியது. நான்கு டெஸ்ட் போட்டிகளிலும் தொடர்ந்து சதமடித்து 769 ஓட்டங்களை அந்த தொடரில் குவித்தார். நான்கு டெஸ்ட் போட்டிகளில் ஒரு வீரர் 769 ஓட்டங்கள் குவிப்பது உலக சாதனை!

நன்றி:- விகடன்

# காலத்தால் அழியாத கானங்கள் ...

பாடல்: ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து
பாடியோர்: ரி.எம். சௌந்தரராஜன், பி.சசீலா
வரிகள்: வாலி
இசை: எம்.எஸ்.விஸ்வநாதன்
திரைப்படம்: நினைத்ததை முடிப்பவன்




ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து
ஓடம் போலே ஆடலாம் ஆடலாம்
ஆடலாம் பாடலாம்
ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து
ஓடம் போலே ஆடலாம் ஆடலாம்
ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து
ஓடம் போலே ஆடலாம் ஆடலாம்
ஒருவர் சொல்ல ஒருவர் கேட்டு
ஒருவர் சொல்ல ஒருவர் கேட்டு
பாடல் நூறு பாடலாம் பாடலாம்
ஒருவர் சொல்ல ஒருவர் கேட்டு
பாடல் நூறு பாடலாம் பாடலாம்
சொட்டுத் தேனைப்போல்
சொல்லும் வார்த்தைகள்
பட்டுப் பூவைப் போல் பார்க்கும் பார்வைகள்
சொர்க்கம் தேடிச் செல்லட்டும்
ஆசை எண்ணங்கள்
அங்கெல்லாம் பொங்கட்டும்
காதல் வெள்ளங்கள்
ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து
ஓடம் போலே ஆடலாம் ஆடலாம்
சொல்லித் தாருங்கள் ...பள்ளிப் பாடங்கள்
இன்னும் என்னென்ன மன்னன் லீலைகள்
ஆ.ஆ..ஆ...ஆஆ...
சொல்லித் தாருங்கள் ...பள்ளிப் பாடங்கள்
இன்னும் என்னென்ன மன்னன் லீலைகள்
தங்கப் பாவை அங்கங்கள்
உங்கள் சொந்தங்கள்
தத்தைப் போல் மெத்தை மேல்
ஏந்திக் கொள்ளுங்கள்
ஒருவர் சொல்ல ஒருவர் கேட்டு
பாடல் நூறு பாடலாம் பாடலாம்
ஒருவர் சொல்ல ஒருவர் கேட்டு
பாடல் நூறு பாடலாம் பாடலாம்
கட்டுக்காவல்கள் விட்டுச் செல்லட்டும்
கன்னிப் பெண் என்னைப்
பின்னிக் கொள்ளட்டும்
கட்டுக்காவல்கள் விட்டுச் செல்லட்டும்
கன்னிப் பெண் என்னைப் பின்னிக் கொள்ளட்டும்
மையல் பாதி என்னோடு மீதம் உன்னோடு
மையல் பாதி என்னோடு மீதம் உன்னோடு
மஞ்சத்தில் கொஞ்சத்தான் போதை கொண்டாடு
ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து
ஓடம் போலே ஆடலாம் ஆடலாம் ....
ஒருவர் சொல்ல ஒருவர் கேட்டு
ஒருவர் சொல்ல ஒருவர் கேட்டு
பாடல் நூறு பாடலாம் பாடலாம்

**இப்பாடலை**
**SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**
விமலநாதன், கீர்த்திகா, லோகேஸ்வரி (சுன்னாகம்), பவானி, தாரணி, அருள் அம்மா (உரும்பிராய்)

*அன்பு வாசகர்களே!*
காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்
**021 567 1543**
எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

# ஈழத்து சினிமா

## அமைதி-குறும்பட விமர்சனம்

உள-சமூக வள நிலையம், வடமாகாணக் கல்வித் திணைக்களம் வெளியிட்டிருக்கும் குறும்படம் அமைதி. ஏற்கனவே இவர்கள் கண்ணிமை என்னும் குறும்படத்தினையும் வெளியிட்டிருந்தார்கள். அமைதி குறும்படம் இரண்டு நிமிட நேர கால இடைவெளியைக்கொண்ட குறும்படமாகும். நா.கு.மகிழ்ச்சிகரன் மகிழ்ச்சிதரும் வகையில் இக்குறும்படத்தினை இரண்டு நிமிட கால இடைவெளியில் செறிவாக இயக்கியுள்ளார்.

அமைதியைக்கடைப்பிடித்து மிகுந்த மௌனமான சூழலை வைத்திருக்கவேண்டிய இடம் நூலகம். அங்கே தான் மிகுந்த கவனக்குவிப்புடன் பாடப்புத்தகங்கள்மேல் கவனத்தினை இறுக்கமாக செலுத்தி மிகுந்த ஆரோக்கியத்துடன் படிக்கமுடியும். பாடசாலை நூலகங்கள் செறிவான நல்ல நூல்களை தன்னகத்தே வைத்திருக்கும். அதற்காக ஒதுக்கப்படும் நிதியில் செழிப்பாக நூலகங்கள் தற்போது பெரும்பாலான அனைத்துப்பாடசாலைகளிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. நீண்ட மேசைகள், மரச்சட்டங்களால் ஆன தடிப்பான கதிரைகள், தலைக்குமேல் சுழலும் மின் விசிறிகள் என பல்வேறு பொருட்களுடன் பாடசாலை நூலகங்கள் மேம்படுத்தப்பட்டுக்கொண்டு இருக்கின்றன.

பாடசாலை நூலகங்கள் உண்மையில் எந்தளவுக்கு மாணவர்களுக்கு உபயோகப்படுகின்றன என்ற கேள்வியும் சேர்ந்தே எழுகின்றன. சில பாடசாலைகள் மிக விசாலமான நீண்ட நூலகங்களைக் கொண்டிருக்கும். தேக்கு மரத்தால் செய்த கண்ணாடி போட்ட புத்தக அலுமாரிகளுள் தடிப்பான புத்தகங்களைக்கொண்டிருக்கும். ஆனால்


அமைதி

மாணவர்கள் அந்தப்புத்தகங்களைத் தொடவே அனுமதிக்கப்படமாட்டார்கள். அவை வெறும் அலங்காரப்பொருட்களாகவே இருக்கும். சில பாடசாலைகள் நூலகத்தினை தங்களது பாடசாலைகளின் பாரம்பரியத்தினை அறிவிக்கும் சின்னமாகவே கருதுகின்றார்கள்.

ஓய்வுநேரங்களில் மாணவர்கள் நூலகம் செல்லும் போது அங்கே அவர்கள் நிம்மதியாகப் படிக்கும் சூழல் உண்மையில் இருக்கின்றதா என்று கேட்டால் பலருக்கு வேறுபட்ட காரணங்கள் இருக்கும். தொகுப்பான கூட்டுக் கரணம் இல்லை என்றே அமைந்துவிடுகின்றது. காரணம் கசப்பான ஒன்று. மாணவர்களைவிட அங்கே குமிழும் ஆசிரியர்களின் நடவடிக்கையே. அதனை துகிலுரித்துக் காட்டும் குறும்படம்தான் வடமாகாணக் கல்வித்திணைக்களம் வெளியிட்டிருக்கும் அமைதி குறும்படம்.

பாடசாலை நூலகத்தில் மாணவர்கள் ஆர்வத்துடன் புத்தகங்களைத் தேடித்தேடி படித்துக்கொண்டிருக்கும் காட்சிகள் காட்டப்படுகின்றன. குளோசப் ஷாட்களில் மாணவர்களின் அமைதியான ஆர்வம் திரையில் வெளிச்சம்போட்டுக் காட்டுகின்றது. ஆசிரியர்களின் செல்லிடப்பேசிகளின் ஒலிகளும் உரையாடல் சத்தங்களும் மண்டபத்தினை நிரப்புகின்றது. மிகுந்த குழப்பத்துக்கு மாணவர்கள் உள்ளாகுகின்றார்கள். படிப்படியாக மாணவர்களின் மனவெழுச்சி மாறுவதனை துல்லியமான பின்னணி இசையோடு படச்சட்டங்கள் காட்டுகின்றன. ஒருகட்டத்தில் பொறுக்க முடியாத மாணவன் ஒருவன் அங்கே செல்லிட தொலைபேசியில் உரையாற்றும் ஆசிரியரை நோக்கிச்செல்கின்றான். அதற்குப்பின் என்னவாகிவிட்டது என்பதனை குறும்படத்தினைப்பார்த்து தெரிந்துகொள்ளுங்கள்.

நிஜமான இந்துக்கல்லூரி நூலகத்தில் படமாக்கியிருகின்றார்கள். பாடசாலை சிறார்களின் வசனம் இல்லாத நடிப்பு அட்டகாசமாக உள்வாங்கப்பட்டிருக்கின்றது. செ.உஷாந்தின் ஒளிப்பதிவு குளறுபடிகள் இன்றி யதார்த்தமாக இருக்கின்றது. வாய் அசைவுகளோடு மீள் பொருத்தப்பட்ட உரையாடல்கள் சரியாகப்பொருந்தவில்லை, கொஞ்சம் பிசகியிருக்கின்றது. மதீசனின் பின்னணி இசை மாணவர்களின் உணர்வுகளை பறைசாற்றும் உணர்வு ஊடகமாகவே தொழிற்பட்டு தனக்குரிய வேலையை கச்சிதமாகத் தேவையற்ற அலங்காரங்கள் இன்றி ஒலித்திருக்கின்றது. நூலகத்தின் அமைதி பிரச்சினைகள் ஆசிரியரின் பக்கத்திலும் இருப்பதனையும் தைரியமாக குறும்பட அழகியலோடு மகிழ்சிதரன் அமைதி குறும் படத்தின் மூலம் சொல்லியிருக்கின்றார்.

-அனோஜன் பாலகிருஷ்ணன்-

# ஈழத்துக் கவிதைகள்

## மேடையிலே சில, பிரமுகர்கள்...!

ஊரில் ஒரு மன்றம்
எடுத்த விழ விடையில்
பேருரைக ளாற்றப்
பெரிய மனிதர்சிலர்
மேடை அமர்ந்திருந்தார்....!

வெளியில் அனலிடையில்
கூகற் பனி நடுவில்,
கண்ணில் கரை தட்டா
நீண்ட பெருந்தொலைவு
போன தொழிலாளர் புது மீன் கொண்டு வர,
வாடி யிலே நின்ற படி
பணம் வாரி மடிகட்டிச்
சுரண்டிக் கொழுத்திருந்த பெரிய சம்மாட்டி...

உப்பும் புளியுமல்ல எம் முதற் பிரச்சினைகள்
தமிழைப் பண்பாட்டைக்
காத்தல் தா னென்று
ஊர் வெளி மேடைகளில்
குதலைத் தமி ழினில்
பெரிய முழக்கமிட்டு
நாளெல்லாம் பொழுதெல்லாம்
வெள்ளையனார் தம்மொழியை
பண்பாட்டைப் பரவிநிதம்
கறுவாக் காடுகளில்
உண்டு சுகித்திருக்கும்
எங்கடை எம்.பி!

ஊரில் ஒரு மன்றம்
எடுத்த விழவிடையில்
பேருரைக ளாற்றப்
பெரிய மனிதர்சிலர்
மேடை அமர்ந்திருந்தார்....!

சம்மாட்டி– வள்ளச் சொந்தக் காரன்
கறுவாக் காடு– கொழும்பு நகரில் பெரும்·பணக்காரர் வாழுமிடம்.

## நம்பிக்கை

வாழ்வு ஒரு பெரிய
துயரந் தானேயென,
உறுத்திக் கிடந்தது தான்.

என்மன வானில்
துயர் நிறைந்த மேகம்
சூழ்ந்து கவிந்தன தான்.


துயரினில் ஆழச்
சுமையென வாழ்வைச்
சலித்திடத்தானா, வந்து பிறந்தோம்...?

இல்லை இல்லை!;
இன்னும் அதனால்,

வாழ்வும் ஒரு பெரிய
வஸீகரமாயே,
நீண்டு தொலைவில் தெரிகிறது....

**அ. யேசுராசா**
**1984 ஆம் ஆண்டு வெளிவந்த அறியப்படாத நினைவுகள் கவிதை தொகுப்பிலிருந்து**

## யாழ்ப்பாணக் கலைஞர்களின் ஒரு புதிய படைப்பு




நேரம் பொன்னானது என்று பலர் சொல்லக் கேட்டிருப்போம். இவ்வார்த்தையை மையமாகக் கொண்ட ஒரு பாடல் கார்த்திகை 26.11.2015 இணையத்தில்வெளியிடப்பட்டுள்ளது. ஈழத் துக் கலைஞன் விமல்ராஜ் இயக்கியிருக்கும் இப்பாடலை கிறிஸ்ரோ மேரியன் எழுதி கெனத் மாஸ்ரர் இசையமைத்து ஹரிகரன் பாடியுள்ளார். நேரத்தை வீணாக்கும் ஒருவருக்கும் அதைப் பிரயோசனப்படுத்தும் மற்றொருவருக்கும் இடையில் ஏற்படும் மாறுபட்ட காட்சியே இப் பாடலாகும்.

இப்பாடலை இணையத்தில் பார்வை யிட Times is gold Jaffna song என்று Youtube இல் டைப் செய்து பார்வை யிடலாம்.

சினிமா செய்தி



# ஈட்டி

## திரைவிமர்சனம்




தஞ்சாவூரில் ஹெட்கான்ஸ்டபிள் மகனான அதர்வாவிற்கு ஒரு வித்தியாசமான உடல் குறை. சின்னக்காயம் பட்டாலும் மயங்கிவிடுவார், கொஞ்சம் பெரிய காயம் என்றாலும் உயிருக்கு ஆபத்தாகும் அளவிற்கு இரத்தம் உறையாமல் கொட்டிக்கொண்டே இருக்கும். இந்நிலையில் நேர்மையாக இருப்பதால் வசதி குறைவாக இருக்கும் ஜெயப்பிரகாஷ் தன் மகனை உயர்ந்த பதவியில் அமரவைக்க ஆசைப்படுகிறார்.

அவரின் ஆசைக்கு பயிற்சியாளர் ஆடுகளம் நரேன் உதவி செய்ய முன்வருகிறார். அதர்வாவை அத்லெட்டிக்கில் இந்திய அளவில் வெற்றி பெற வைத்தால் அரசு வேலை கிடைக்கும் என்பதால் முழுநேரமும் அவரை ஊக்குவித்து வெல்ல வைக்கிறாரா என்பது ப்ளாட்.இதன் உபகதையாக ஸ்ரீதிவ்யா உடன் ஏற்படும் நட்பு மற்றும் திருமுருகனுக்கு அறியாமல் செய்த உதவியினால் பெரிய பிரச்சினைக்கு உள்ளாகும் அதர்வா அதை வென்று தன் லட்சியத்தில் வெல்ல முடிந்ததா என்பதாக கதை செல்கிறது. அதர்வா நடிப்பில் ரவிராசு இயக்கத்தில் வெளியாகியுள்ள இந்த ஈட்டி படம் குறித்து கொஞ்சம் பாஸிடிவ் ரிசல்ட்கள் வந்து கொண்டிருக்கின்றன.

அதர்வா, கம்ப்ளீட் டெடிகேட்டிவான ஹீரோன்னா அது அதர்வாதான். எப்பவுமே டைரக்டர் மெட்டீரியலான அதர்வா ஒரு அத்லெட் வீரராக அப்படியே நம் கண் முன்னால் வந்து நிற்கிறார். ஹர்டில்ஸ் ஸ்பின்ட்லிங், ரன்னிங் என அவரின் பயிற்சியில் வெல்ல துடிக்கும் வீரரின் லட்சியம் தெறிக்கிறது. ஸ்ரீதிவ்யா - பெரிதாக ரொமான்ஸுக்கு சான்ஸ் இல்லாத கதையென்றாலும், வார்த்தைகளில்லாமல் அதர்வாவை முத்தமிடச்செய்யும் காட்சி, லவ் ப்ரோபோஸுக்கு முந்திய ப்ளிர்ட்டை வெட்கப்புன்னகையுடன் எதிர்கொள்ளும் க்யூட் என கிடைத்த வாய்ப்பில் சரியாக செய்திருக்கிறார். ஜெயப்பிரகாஷ் - அதர்வாவின் அப்பாவாக வருகிறார்.

இது போன்ற நடுத்தர குடும்பத்து நேர்மையான பொலிஸ்கார அப்பாக்களை பார்த்துவிட்டாலும் தன் மகனுக்கு முன்னால் அதிகாரிகளுக்கு சல்யூட் அடிக்கும் போதும், ஸ்போர்ட் கோட்டாவிலாவது உயர் பதவிக்கு வரமுடியும் என்பதற்காக, அதர்வாவிற்கு இருக்கும் உடல் பிரச்சினை தெரிந்தே ரிஸ்க் எடுப்பது, என தன் போர்ஷனை சரியாக செய்திருக்கிறார். சரவணன் அபிமன்யூ - இரண்டு ஊர்களில் நடக்கும் கதை என்பதால் இரண்டுக்கும் டோன் வித்தியாசம் காட்டியுள்ளார்.

சண்டைக்காட்சிகளில் நுட்பமாகவும், ஸ்போர்ட்ஸ் காட்சிகளில் ப்ரைட்டாகவும் என படத்திற்கு துணை செய்துள்ளார். ஜிவி.பிரகாஷ் - படம் முழுக்க பின்னணி இசையில் நல்ல ஸ்கோரிங் செய்திருக்கும் ஜிவி "நான் பிடிச்ச மொசக்குட்டி" பாடலில் சக்தி ஸ்ரீகோபாலனுடன் நன்றாக பாடியுள்ளார். அதிலில்லாமல் படத்தில் அங்கங்கு வரும் ஜிங்கிள்ஸும் ஐஸ்க்ரீம் டாப்பிங் ஸாக டேஸ்ட் கூட்டுகிறது. ஒரு தந்தைக்கு தன் மகனை நல்ல நிலைக்கு கொண்டு வரவேண்டும், பங்கு கொள்ளும் ஈவென்ட்களில் ஜெயிக்க வேண்டும் என ஆர்வம் இருக்கும் . ஆனால் அதையெல்லாம் தாண்டி காட்டும் நரேன் காட்டும் ஆர்வம் ஒவ்வொரு ஸ்போர்ட்ஸ் கோச்சிற்கும் செய்திருக்கும் மரியாதை. ஒரு தவறான தொலைபேசி அழைப்பு எப்படி இன்னொரு வரை வாழ்க்கைக்குள் கொண்டு வருகிறது. அது எத்தனை பிரச்சினைகளை உருவாக்குகிறது என்பதை சிக்கலில்லாமல் சொல்லியிருக்கிறார் இயக்குநர் ரவி அரசு.

யூகிக்க கூடிய க்ளைமாக்ஸில் ஆடியன்ஸ் உட்கார வைப்பது கொஞ்சம் கஷ்டமான வேலைதான்,அதை செய்திருக்கிறார். இன்னும் கொஞ்சம் மெனக்கெட்டிருந்தால் இன்னும் மெருகேற்றி நல்லதொரு படம் கொடுத்திருக்கலாம், நகைச்சுவை இது போன்ற படங்களுக்கு முக்கிய தேவை. அதற்கான எந்த முயற்சியிலும் இயக்குநர் ஈடுபடவேயில்லை.

அழகம்பெருமாள்,சோனியா, திருமுருகன், ஆடுகளம் முருகதாஸ் என பெர்ப்பாமென்ஸில் பின்னும் கூட்டம் இருந்தாலும் பயன்படுத்தவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அப்புறம் அதர்வா ப்ரதர், இயக்குநர்களின் சொன்ன சொல் கேட்கும் பிள்ளையாக இருப்பது நல்லதுதான், அதே டெடிகேஷனை கதை கேட்பதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

# நட்டஈடு பெறவா கண்ணீர் வடிக்கிறோம்?



காணாமற்போனவர்களின் உறவினர்களின் முக்கிய கோரிக்கை தங்கள் உறவுகளை விரைவாக உயிருடன் மீட்டுத்தரவேண்டும் என்பதாகவுள்ளது.

ஆனால் காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்துவரும் ஆணைக்குழுவோ தனக்கு இப்பட்டகட்டளையை நிறைவேற்றும் விதமாக செயற்படுகின்றது என்ற நியாயமான சந்தேகத்தை உறுதிப்படுத்தும் வகையில் உறவினர்களுக்கு நட்டஈடு வழங்கியும் மரணச்சான்றிதழை வழங்கியும் விசாரணைகளை முடிவுக்கு கொண்டுவர முயல்கின்றது.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் நோக்கம் எதுவாக இருந்தாலும் அதற்கு காணாமற் போனவர்களின் உறவினர்கள் உடன்படுவார்கள் போன்று தெரியவில்லை. மாறாக எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் தமது உறவுகளை மீட்டுவிட வேண்டும் என்ற ஏக்கத்துடன் காத்திருப்பார்கள் என்பதையும் மீண்டுமொருமுறை உறுதிப்பட வெளிப்படுத்தியுள்ளனர்.

எத்தனை போராட்டங்களை எவ்வளவு நெருக்கடிக்கு மத்தியில் மேற்கொண்டவர்கள் காணாமற்போனவர்களின் உறவினர்கள். மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்தில் பாதுகாப்புச் செயலாளராகவிருந்த கோத்தபாய ராஜபக்ஷவின் நேரடிக் கண்காணிப்பில் இயங்கிய புலனாய்வாளர்களின் தொடர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் உறவுகளைத் தேடும்பணியில் சோர்வின்றி ஈடுபட்டவர்கள் காணிக்காகவும் பணத்துக்காகவும் தமது உறவுகளை விட்டுக் கொடுத்து விடுவார்களா?

2009 ஆம் ஆண்டு மே மாதம் முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் உயிர்ப்பறிப்புடன் முடிவுக்கு கொண்டு வரப்பட்டபோர் இலங்கை அரசைப் பொறுத்த மட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் இன்றும் தமிழர் வாழ்வில் முடிவுறுத்தப்படாத தொடரும் போராகவே கருதப்படுகின்றது.

இதற்கு போர்க்காலப்பகுதியில் காணாமற் போனவரகளைத் தேடியலையும் உறவுகள் விடும் கண்ணீர் சாட்சியமாகவுள்ளது.

இலங்கையில் கடந்த முப்பது ஆண்டுகாலமாக நீடித்து வந்த உள்நாட்டு யுத்தத்தை நானே முடிவுக்கு கொண்டு வந்தேன் என்று மகிந்த போன்றவர்கள் மார்தட்டிக் கொண்டாலும் போர் இன்னும் ஓயவில்லை.

முரண்பட்டுக்கொண்ட இரு இனங்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் இன்னும் முற்றிக் கொண்டு செல்கின்றதே தவிர சமாதானமோ இனச் சமத்துவமோ இன்னும் இலங்கையில் ஏற்படவில்லை. நல்லாட்சி என்பது சொல்லாட்சியில் மட்டுமே உள்ளது. தமிழ் மக்கள் இன்னும் நல்லாட்சியின் பலனை அனுபவிக்கவில்லை.

போரிலே பல்லாயிரக்கணக்கான உயிர்கள் கொத்துக்குண்டுகளுக்கு இரையானதைகண்களால் கண்டுமனம் வெந்து போயுள்ளவர்களுக்கு காணாமற் போனவர்களின் மீள்வரவைக்கூட மருந்தாக அளிக்க அரசு தயாராகயில்லாத போது நல்லாட்சியை அனுபவிக்கின்றனர் என்று எவ்வாறு கூறமுடியும்.



மக்களின் மனங்கள் வெம்பிக்கொண்டிருக்கும் போது மாற்றத்தை விரும்பி வாக்களித் தவர்கள் மழையிலும் வெயிலிலும் உடலை வருத்திக் கொண்டிருக்கும் போதுநல்லாட்சி அரசு மௌனம் காக்கிறது.

மகிந்தவுக்கும் மைத்திரிக்கும் வித்தியாசம் இல்லை. இருவருமே சிங்கள மக்களின் தலைவர்கள்தான். இலங்கையில்வாழும் அனைத்து இன மக்களுக்கு மான தலைவர்கள் இல்லை என்பதை வெளிப்படுத்தும் வகையில் செயற்படும் போது நல்லாட்சி என்று எவ்வாறு அழைக்க முடியும்.

மகிந்தவின் ஆட்சியில் காணாமற்போனவர்கள் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்கவென ஆரம்பிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு மீண்டும் தனது விசாரணைகளை யாழ். மாவட்டத்தில் முன்னெடுத்து வருகின்றது.

இந்த ஆணைக்குழு விசாரணைகளுக்கு சமுகமளித்து 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இதுவரைதமது சாட்சியங்களைப் பதிவு செய்துள்ளனர். இன்னும் இந்த ஆணைக்குழுவில் பதிவுகளும் விசாரணைகளும் தொடர்ந்தவண்ணமேயுள்ளன.

வடக்கு கிழக்கில் காணாமற் போனவர்கள் தொடர்பாக குறிப்பாக 1990 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணையில் இலங்கை இராணுவத்துக்கு எதிராகவும் வெள்ளை வான் கடத்தல்காரர்களுக்கு எதிராகவும் கடற்படை, தமிழீழ விடுதலைப் புலிகள், ஆயுதக் குழுக்களுக்கு எதிராகவும் சாட்சியங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன.

இருப்பினும் பெரும்பான்மையான சாட்சியங்கள் இராணுவத்துக்கு எதிரானவையாகவும் இராணுவச் சீருடையில் ஆயுதங்களுடன் சுற்றுவளைப்புக்களை மேற்கொண்டு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் தொடர்பாகவும் இராணுவத்திடம் சரணடைந்த பின்னர் காணாமற்போனவர்கள் தொடர்பாகவே முறைப் பாடுகளும் சாட்சியங்களும் அளிக்கப்பட்டு வருகின்றன.

இராணுவத்திடம் விசாரியுங்கள், எனது மகனை, மகளைக் கடத்திய இராணுவத்தை இனம் காட்டுவேன், எனது அப்பாவை சுட்டுவிட்டு அண்ணனை இராணுவம் கொண்டுசென்றது, காணாமற் போன எனது கணவரை இராணுவ முகாமில் கண்டேன்.பீல்ட் பைக் குறுாப்பில் கண்டேன், இராணுவம் சுற்று வளைப்புக்களை மேற்கொண்டு பலரைக் கொண்டு சென்றது என்பதுதான் ஆணைக்குழுவின் முன் உறவினர்கள் அளிக்கும் அதிகப்படியான சாட்சியங்களாகவுள்ளது.

இராணுவம்தான் தமது உறவினர்கள் காணாமற்போக, கடத்தப்படக் காரணம் என்பதை உறவுகள் ஆணைக்குழுவிடம் துணிந்து வெளிப்படுத்தி வருகின்றனர். ஆனால் ஆணைக்குழுவோ அவர்களின் உறவினர்களை உயிருடன் மீட்டுக் கொடுக்கும் தனது தார்மீகப் பொறுப்பிலிருந்து விலகி மரணச்சான்றிதழை வழங்குவதிலும் நட்டஈடு வழங்குவதிலும் அதிக சிரத்தை காட்டிவருகின்றது.

ஏற்கனவே இந்த ஆணைக்குழு மீது முழு நம்பிக்கை வைக்காது அதிருப்தியிலுள்ள உறவுகளுக்கு மேலும் நம்பிக்கையீனத்தை அதிகரிக்கும் வகையில் ஜனாதிபதி ஆணைக் குழுவின் பரிந்துரைகள் அமைந்துள்ளன.

மக்களின் நம்பிக்கைக்கு உரிய வகையில் ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுக்கும் பட்சத்திலேயே உறவுகளைப் பறிகொடுத்து விட்டு ஏக்கத்துடன் காத்துக் கொண்டு இருப்பவர்களுக்கு நம்பிக்கை பிறக்கும்.

காணாமற் போனவர்களின் உறவினர்கள் தமது உறவுகளின் வருகையை எதிர்பார்த்து நீண்ட காலமாகக் காத்திருக்கின்றனர். பலர் மனநோயாளர்களாக மாறியுள்ளனர். இன்னும் பலர் ஆலயங்களில் தொடர் பிரார்த்தனைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறு உறவுகளின் வருகைக்காக காத்திருப்பவர்களுக்கு நட்டஈடு உரிய பதிலாகவோ அல்லது அவர்களின் எதிர் பார்ப்பை நிறைவேற்றுவதாகவோ அமைந்து விடாது. இதனை ஜனாதிபதி ஆணைக்குழு நன்குணர்ந்து காணி வீடுகளை வழங்குவதை விடுத்து காணாமற் போனவர்களைக் கண்டறிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

இரகசிய முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம் என அச்சப்படும் உறவுகளுக்கு உரிய விசாரணைகள் மூலம் உண்மைகளை வெளிக்கொணர்ந்து பதிலளிக்கவேண்டும்.

காணாமற் போனவர்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபைக்கும் சர்வதேச நாடுகளுக்கும் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற மைத்திரி - ரணில் கூட்டு அரசு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

காணாமற் போனவர்களை தேடி அலைந்து தங்களைத் தாங்களே தொலைத்துக் கொண்டிருக்கும் உறவுகளின் கண்ணீரைப் போக்க வேண்டும்.

காணாமற் போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு உண்மைகளைக் கண்டறிய அமைக்கப்பட்ட ஆணைக்குழு என்பதையும் காணாமற் போனவர்களை தேடிக் கொடுப்பதில் உண்மையாகச் செயற்பட்டது என்பதையும் வெளிப்படுத்த வேண்டும்.

அப்பா எங்கே என்றுகேட்கும் பிள்ளைக்கு அப்பாவுக்கு பதிலாக அல்லது நட்ட ஈடாக காணியும் வீடும் உள்ளது என்றுதாய் கூற முடியுமா? என்பதைஆணைக் குழுவினர் புரிந்துகொள்ள வேண்டும். அரசு உரிய பதிலளிக்க வேண்டும்.

உறவுகளை இழந்த நிலையில் அங்கவீனர்களாகவும் அநாதைகளாகவும் அடைத்து வைத்து துன்புறுத்தப்பட்டுக் கொண்டிருப்பவர்களையும் இராணுவ முகாம்களில் வேலைக் காரர்களாக வைத்திருப்பவர்களையும் வெளிக்கொண்டு வர வேண்டும்.

காணாமற்போனவர்கள் காணாமற்போனவர்கள் தான் என்ற ஆணைக்குழுவின் முன்னைய அறிக்கைகளை மீண்டும் புதுப்பித்துக் கூறாமல் காணாமற் போனவர்களுக்கு உரிய பதிலை வழங்க வேண்டும்.

இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்தாக நேரடிச் சாட்சியங்கள் அளிக்கப்பட்டு வருதைக் கருத்திற்கொண்டு குற்றவாளிகளை இனங்கண்டு தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

போர்க்குற்றச்சாட்டுகளிலிருந்து இராணுவத்தைக் காப்பாற்றும் நோக்குடன் உண்மைகளையும் காணாமற்போனவர்கள் பற்றிய தகவல்களையும் மூடிமறைத்து, ஜனாதிபதிஆணைக்குழுவும் முன்பு அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் போன்று காணாமற் போகக் கூடாது. காணாமற் போனவர்களின் உறவினர்களின் கண்ணீரைப் போக்க வேண்டும்.

**எஸ்.ஆர்.கரன்**

# ஆட்சிமாற்றம் நிலக்கபளீகரத்தை இல்லாதொழிக்குமா...?



புலம்பெயர் தமிழர் அமைப்பின் தலைவர் ஒருவர், சிறிலங்கா அரசாங்கத்தினால் தமிழ் மக்களின் காணிகள் கபளீகரம் செய்யப்பட்டமை குறித்து அனைதுலக மட்டத்திலான சட்ட நடவடிக்கைகள் குறித்து தாங்கள் ஆராயத் தொடங்கியதாகவும், ஆட்சிமாற்றம் காரணமாக கபளீகரம் செய்யப்பட்ட நிலங்களை மீட்டெடுப்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்மைப்பு அரசாங்கத்துடன் பேச முயற்சிகளை மேற கொள்ளும் காரணத்தால் தமது எண்ணத்தை சற்று ஒத்திவைத்திருப்பதாகவும் அண்மையில் எம்மிடம் தெரிவித்திருந்தார். ஆனாலும் புதிய சிறிலங்கா அரசாங்கம் தமிழர் தாயகப் பகுதிகளில் நிலக்கபளீகரத்தைக் கைவிடும் என்ற நம்பிக்கை அவரிடம் இருக்கவில்லை.

புதிய அரசாங்கம் தமிழ் மகளிடம் இருந்து கபளீகரம் செய்யப்பட்ட காணிகளை மீள வழங்குவதாக வாக்குறுதி அளித்திருக்கிறது. மிகக் குறைந்த அளவிலான காணிகளே மீள வழங்கபட்டுள்ளன. விரைவில் 6000 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகள் மீள வழங்கப்படும் என்றும் தகவல்கள் வெளியாகின்றன.

உண்மையில் புதிய அரசாங்கம் தமிழ் மக்களின் நிலங்களைக் கபளீகரம் செய்யும் முயற்சியைக் கைவிடுமா?

இந்த விடயத்தில் சிங்களம் மிகத் தெளிவான செயற்திட்டத்துடன் செயற்பட்டு வருகிறது. இது உண்மையில் ஒரு அரசாங்கத்தின் திட்டம் அல்ல. அரசின் திட்டம். அரசின் கொள்கை (State policy). இதனால் எந்த சிங்கள அரசாங்கங்கள் ஆட்சிக்கு வந்தாலும் இந்த நிலக்கபளீகரம் தொடரவேதான் செய்யும். செய்யப்படும் முறையிலும் வேகத்திலும் வேறுபாடுகள் இருக்கக் கூடும்.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் ஆபத்தினை நன்கு உள்வாங்கிக் கொள்ள வழிசெய்யும் வகையில் சிறிலங்கா அரசின் நிலக்கபளீகரத் திட்டநிரல் தொடர்பான சில விடயங்களைக் முதலில் குறித்துக் கொள்வோம்.

1. சிங்களத் தேசியவாதத்தைப் பொறுத்தவரை இலங்கைத்தீவு சிங்கள தேசத்துக்குரியது. ஏனையோர் அனைவரும் வந்தேறு குடிகள். இவர்கள் வாடகைக் குடியிருப்பாளர்கள் போன்றவர்கள். இதன் காரணமாக வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசங்கள் என்பதனை சிறிலங்கா அரசு ஒருபோதும் ஏற்றுக் கொண்டதில்லை.

2.இந்தியாவின் அழுத்தங்களுக்கு மத்தியில் இலங்கைத் தீவின் வடக்கு கிழக்குப் பிரதேசங்கள், தமிழ்பேசும் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்துவந்த பூமி என இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் நடைமுறையில் நிலம் தொடர்பான எந்த அதிகாரமும் தமிழர் கைகளுக்குக் கிடைக்க சிறிலங்கா அரசு அனுமதித்ததில்லை. அனுமதிக கப் போவதுமில்லை.

3. வடக்கு கிழக்கை தமிழர்களும் முஸ்லிம்களும் உரிமை கோருவதனை இல்லாதொழிக்க வடக்கு கிழக்கில் உள்ள நிலங்களைக் கபளீகரம் செய்தும், சிங்களவர்களைக் குடியேற்றம் செய்தும் சிங்களப் பகுதிகளை வடக்கு கிழக்கு மாகாணங்களுடன் இணைத்தும் இப் பிரதேசங்களின் மக்கள் குடிசனப் பரம்பலை மாற்றியமைத்தல், நிலக்கபளீகரக் கொள்கையின் பெறுபேறாக திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கில் தமிழர்களோ முஸ்லிம்களோ பெரும்பான்மையினர் இல்லாத நிலையினை காலப்போக்கில் உருவாக்கும் திட்டம் இதில் முக்கிய ஒரு பகுதி. கிழக்கிலிருந்து ஆரம்பித்து வன்னியூடாக வடக்கு நோக்கி நகர்தல் என்பதே நிலக்கபளீகரத்தின் திட்ட நடைமுறையாக உள்ளது.

4. ஆயுதம் தாங்கிய தமிழீழ விடுதலைப் போராட்டம் அரசாங்கத்தின் நிலக்கபளீகரப் போர்த் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதத்தினை ஏற்படுத்தியிருந்தது. ஆனால், ஆயுதம் தாங்கிய போரை வென்ற பின்னர் நில ஆக்கிரமிப்பினை மிகவும் வேகமாகவும் இலகுவாகவும் செய்யக்கூடிய வாய்ப்பு சிறிலங்கா அரசுக்கு கிடைத்திருக்கிறது.

ஆட்சிமாற்றம் நிலக் கபளீகரத்தை இல்லாதொழிக்குமா?

5. சிறிலங்கா அரசின் நிலக்களீகரத் திட்டம் இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் தம்மை ஒரு தேசமாக அடையாளப்படுத்தும் நிலையினை, தகமையினை இல்லாதொழிப்பதனை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இதனால் தமிழர் தாயகம் ஒரு தொடர்ச்சியான நிலப்பரப்பாக அமையாது அவற்றைத் துண்டாடுதல் சிங்களத் திட்டத்தில் முக்கியம் பெறுகிறது.

6. அரசாங்கத்தின் நிலக் கபளீகரத் திட்டம் நிலவடிவமைப்பு (Landscape) ஆக்கிரமிப்பினையும் முக்கிய பகுதியாகக் கொண்டுள்ளது. நிலவடிவமைப்பு நிலத்துக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்புகளிலேயே பொதுவாக உருவாகிறது. இதனை இன்னொரு வகையில் கூறுவதாயின் இயற்கைக்கும் (nature) பண்பாட்டுக்கும் (culture) உள்ள உறவுகளும் தொடர்புகளும் முரண்களும் நிலவமைப்பில் பிரதிபலிக்கும். குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் மக்களின் பண்பாட்டு அம்சங்கள் நிலவடிவமைப்பில் வெளிப்படும்.

உதாரணமாக கட்டிடங்கள், கோவில்கள், சாலைகள், பூங்காக்கள் போன்றவை அமைக்கப்படும் போது இவற்றின் வடிவம், பயன்படுத்தப்படும் நிறங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் இப் பகுதியில் வாழும் மக்களின் பண்பாட்டுடன் இணைந்த வகையில் அமைந்திருக்கும். இவை ஒரு நிலப்பரப்பின் வடிவமைப்பின் தன்மையினைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்காற்றும். தமிழர் தாயகப் பகுதிகளில் புதிது புதிதாக அமைக்கப்படும் புத்தர் சிலைகளும் கோவில்களும் தமிழர் தாயகத்தின் நிலவடிவமைப்பினை மாற்றியமைத்துக் கொண்டிக்கின்றன. புதிதாக அமைக்கப்படும் கட்டிடங்களும் சிங்களக் கட்டிடக்கலையின் வெளிப்பாட்டை கூடுதலாகக் கொண்டவையாகவே அமையப் போகிறது. இதனால் தமிழர் தாயகத்தின் நிலவடிவமைப்பு சிங்களப் பிரதேசங்களின் நிலவடிவமைப்பை ஒத்ததாக மற்றமடையும் நிலை காலப்போக்கில் உருவாகும் ஆபத்தும் கூடவே காத்திருக்கிறது.

7.தமிழர் நிலத்திலும் நிலவடிவமைப்பிலும் சிறிலங்கா அரசு ஏற்படுத்திவரும் மாற்றங்களை பின்னாளில் மீண்டும் மாற்றியமைப்பது என்பது இலகுவான காரியம் அல்ல. எதிர்காலத்தில் தமிழர் கையில் முழுமையான அதிகாரம் வரும் காலம் உருவாகும் போதுகூட மீண்டும் மாற்றியமைக்க முடியாத அளவுக்கு மக்களோடும் (சிங்கள), மதத்தோடும் (பௌத்த) இணைந்த வகையிலேயே இம் மாற்றங்கள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. பிந்தியநாளில் மாற்றங்களை ஏற்படுத்துவதாயின் குடியமர்த்தப்பட்ட சிங்களவர்களோடும் பௌத்த மத நிறுவனங்களோடும் மோத வேண்டிய நிலையே தமிழர் தரப்புக்கு ஏற்படும். அனைத்துலக விழுமியங்களை மதிக்கும் ஒரு நாகரீகமான மக்கள் கூட்டத்தால் இதனைச் செய்யமுடியாது.

8. சிறிலங்காவின் நிலக்கபளீகரம் தமிழ் இனக்கபளீகரத்தின் ஒரு முக்கிய பகுதியாகத்தான் வடிவமைக்கப்பட்டுள்ளது. தமிழினத்தை இலங்கைத்தீவில் உதிரிகளாக்கும் இனக்கபளீகரத் திட்டத்தின் பாற்பட்டுத்தான் நிலக்கபளீகரம் நடைபெறுகிறது. இந்த வகையில் இது இனஅழிப்பின் (Genocide) பகுதியாகத்தான் கருதப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் சிறிலங்காவின் நிலக்கபளீகரத் திட்டத்தின் சில அம்சங்களையும் தமிழர் தேசத்திற்கு ஏற்படும், ஏற்படக்கூடிய ஆபத்துக்களையும் குறித்துக் காட்டுகின்றன. இந் நிலக்கபளீகரத் திட்டத்தை சிறிலங்கா பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி மேற்கொண்டு வருகிறது. இவற்றில் மூன்று திட்டங்கள் முக்கியம் பெறுகின்றன.

முதலாவது, அரசகாணிகளைப் பயன்படுத்தல். இலங்கைத்தீவில் மிகப்பெரும் நிலவுடைமையாளர், அரசேதான். இதனால் தமிழர் தாயகப் பகுதிகளில் உள்ள அரச காணிகளை அரசு தனது திட்டத்துக்கு ஏற்ப பயன்படுத்துவதற்குத் தடையாக சட்ட நிர்வாகச் சிக்கல்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் குறைவு. இதனால் அரச காணிகளை மிக இலகுவாகத் தமது திட்டத்துக்குப் பயன்படுத்தும் நிலையில் அரசாங்கம் உள்ளது. பயன்படுத்தியும் வருகிறது. இராணுவக் குடும்பங்களின் குடியேற்றங்கள், விவசாய மற்றும் மீன்பிடிச் சிங்களக் குடியேற்றங்களுக்கு கூடுதலாகப் பயன்படுத்தப்படுவது அரச உடைமைக் காணிகளே.

இரண்டாவது, தனியார் காணிகளைக் கபளீகரம் செய்தல். தனியார் காணிகளையும், மக்கள் குடியிருந்து வந்த நிலப்பகுதிகளையும் இராணுவத் தேவைக்காகவும், மேம்பாட்டுத் திட்டம் என்ற போர்வையிலும் கபளீகரம் செய்யும் திட்டமும் நடைமுறைப் படுத்தப்படுகிறது. இந்த நிலக் கபளீகர முயற்சிக்கு ஏற்ற முறையில் சட்டத்தையும் நிர்வாக இயந்திரத்தினையும் கையாளும் ஒரு பொறிமுறையை அரசு தோற்றுவித்துள்ளது.

மூன்றாவது, தமிழர் பிரதேசங்களில் உள்ள தமிழர்களின் தனியார் காணிகளை சிங்கள முதலாளிகளும் சிங்கள மக்களும் பணம் கொடுத்து வாங்கி அவற்றை சிங்கள உடமையாக்கும் திட்டம். இத் திட்டம் பாலஸ்தீனர்களின் கைகளில் இருந்த நிலங்களை யூதர்கள் தம்வசப் படுத்திக்கொண்ட முறையில் இருந்து இவர்கள் இந்த அக்கறையினைப் பெற்றிருக்கின்றனர் எல்லையோரக் கிராமங்களில் உள்ள தமிழர் காணிகளும் தமிழர் தாயகத்தில் கேந்திர மற்றும் பண்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் உள்ள காணிகளும் இந்தத் திட்டத்தின் அடிப்படையில் குறிவைக்கப் படுகின்றன.




இப் பின்னணியில் இன்று நம் முன்னால் உள்ள முக்கியமான கேள்வி இதுதான். அரசாங்கத்தின் இந்த நிலக்கபளீகரத்தை நாம் எவ்வாறு தடுத்து நிறுத்தப் போகிறோம்? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புதிய அரசாங்கத்துடன் நடாத்தும் பேச்சுக்கள் நிலக்கபளீகரத்தைத் தடுத்து நிறுத்தப் போதுமானவையா?

*கலாநிதி சர்வேந்திரா*

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 11




## ஒருசிகரெட் மனிதனுக்குவிடுக்கும் இறுதி அறிவிப்பு

நீ என்னை உறிஞ்சுகையில் உன் உயிருக்கு உலை மூட்டப்படுகிறது. எமக்கு கொள்ளிவைக்கத்துணிந்த உன் நெஞ்சு நான் எரியும் செந்தணலில் கருகும். உன் உதிரம் கொதித்து இரத்த நாளங்கள் மரத்துபோகும். உன் உடம்பு புற்றுநோய் பூக்களாகும். உனக்கும் ஒருநாள் கொள்ளி வைக்கப்படும் முடிவில் சேர்ந்தே சாம்பலாவோம் வா. நாளை சாம்பல் மேட்டில் சங்கமம் ஆகுவோம்.

Dr.எஸ்.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்




## மார்பிலே பாய்வதற்காகவே வளர்க்கப்படும் கடாக்கள்

புகைத்தல் நாகரீகத்தின் அடையாளமாக கருதப்பட்ட ஒரு காலம் இருந்தது. அது தற்பொழுது மாற்றம் பெற்று புகைப்பிடிப்பவர்களை தீண்டத்தகாதவர்கள் போலப் பார்க்கும் காலம் ஒன்று துளிர் விட்டுவருகிறது.

காரணம் புகைப்பிடிக்கும் பழக்கம் அவரை மட்டும் தாக்குவதில்லை. அவரை சுற்றி இருப்பவர்களையும் பாதித்து நோயாளி ஆக்கிவிடும் என்பதுதான். இதன் காரணமாகவே பொது இடங்களில் புகைப்பது தண்டனைக்குரிய குற்றம் என சட்ட விதி கூட நடைமுறைக்கு வந்திருக்கின்றன.

புகைப்பதனால் பாரிசவாதம், மாரடைப்பு, புற்றுநோய், சுவாசம் சம்பந்தமான நோய்கள், இரத்தக்குழாய்கள் சம்பந்தமான நோய்கள் என பல பாரதுாரமான நோய்கள் ஏற்படுகின்றன என்பது எம் எல்லோருக்கும் தெரியும். இருந்தும் இப்பழக்கத்தை துடைத்தெறியும் மார்க்கம் எமக்குத் தெரியவில்லை.

புகைப்பது ஒவ்வொருவரினதும் தனி மனித உரிமை. ஒருவனை புகைக்க வேண்டாம் என வற்புறுத்துவதற்கு யாருக்கும் உரிமை இல்லை. புகைப்பதை நிறுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளலாம். அவ்வளவு தான். நீங்கள் புகைக்க விரும்பினால் சன நடமாட்டமற்ற, நல்ல காற்றோட்டமான இடத்திற்குச் சென்று புகைத்து கொள்ளுங்கள். இதன் மூலம் உங்கள் குடும்பத்தையும் பிள்ளைகளையும் மற்றவர்களையும் நீங்கள் வெளியிடும் புகையின் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம். ஏற்படும் பாதிப்புக்கள் உங்களுடன் மட்டும் மட்டுப்படுத்தப்படும். மற்றவர்கள் தப்பித்துக் கொள்வார்கள்.



புகைத்தலுக்கு அடிமையாகியிருக்கும் ஒருவர் அந்த அடிமைத்தன்மைகளை உடைத்துக் கொண்டு வெளியே வருவாராக இருந்தால் புகைக்கும் பழக்கத் தை முற்றாகக் கைவிடுவாராக இருந்தால் அந்தப் பழக்கத்தினால் உடலில் ஏற்பட்ட தாக்கங்களில் பெரும்பகுதி திருந்தி வருவதற்கான சந்தர்ப்பம் இருக்கிறது.




புகைக்கும் ஒவ்வொருவரும் இப்பழக்கத்தில் இருந்து வெளியேவர உண்மையாக விருப்பப்பட்டால் அதை நடைமுறைப்படுத்துவது கஷ்டமாக இருக்காது.

அதனை நடைமுறைப்படுத்த முயலும் பொழுது சிலவேண்டத்தகாத அறிகுறிகள் தோன்றினால் வைத்தியரின் உதவியை நாடமுடியும்.

புகைக்கும் பழக்கமுடைய ஒவ்வொருவரையும் சந்திக்கும் பொழுது அவரை இந்தப் படுகுழியிலிருந்துதுாக்கிவிட நாம் கைகொடுப்போம். அவர்களுக்குப் பொருத்தமான அறிவுரைகளை வழங்குவோம்.

கஞ்சாச் செடி வளர்ப்பது தண்டனைக்குரிய குற்றம் என்பது எம் எல்லோருக்கும் தெரியும். ஆனால் பல்லட்சம் மக்களைப் பாதித்து நிற்கும் புகையிலை செடியை வளர்ப்பது தண்டனைக்குரிய குற்றமாக கருதப்படுவதில்லை. இதற்கான காரணமும் எதுவென்று எனக்கு தெரியாது.

பயிரிடப்படும் ஒவ்வொரு புகையிலைச் செடியும் யாரோ ஒருமனிதனை நோயாளி ஆக்கும். இதே விளை நிலத்தில் மரக்கறிகளை பயிரிட்டால் அது யாரோ ஒருமனிதனை வாழவைக்கும். வளர்த்த கடா மார்பிலே பாய்ந்தால் கவலைப்படுகிறோம். ஆனால் மார்பிலே பாய்வதற்காகவே பல புகையிலைச் செடிகளை வளர்த்து வருகிறோம்.

Dr.எஸ்.சிவன்சுதன்
பொதுவைத்தியநிபுணர்

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் 0782075424 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.